
'வெடி'மணியம்



"காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச்சான்றிதழ்"

"தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை"

"புலம்பெயர் தமிழர்களுக்குப் பேச அழைப்பு"

மிகவும் கவர்ச்சிகரமான மூன்று விடயங்களை ஐ.நா.வில் வைத்து கோட்டாபய அறிவித்திருந்தார்.

முதலாவது அறிவித்தல் என்பது;

கோட்டாபய தான் செய்த குற்றத்தை பகிரங்கமாக ஒப்புக்கொள்வதற்கு சமன். இதை கோட்டாபய அறியாமலில்லை. இருந்தாலும், இதை வெளிப்படையாக துணிச்சலாக ஐ.நா.வில் வைத்து அவர் அறிவிக்கின்றார் எண்டால் சும்மா "சிம்பிளா" கடந்து போக முடியாது.

2009 போரின் பின்னர் மேற்குலகும், ஐ.நா.வும் சிறிலங்காவை அடக்கவும், தங்கள் காரியங்களை சாதிக்கவும் கையிலெடுக்கும் முக்கியமான ஆயுதம் தான் இந்த "காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்"!

ஐ.நா.வில் இந்த விவகாரத்தை கோட்டாபய மிகவும் தைரியமாக துணிச்சலாக அறிவித்தபோது;

இதுவரை எந்த மனித உரிமை அமைப்புகளோ, ஐ.நா. அமைப்போ அல்லது மேற்குலகோ எதிர்வினையாற்றவில்லை!

போரின் பின்னர் கண்முன்னே கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும், சரணடைந்தவர்களுக்கும் மரணச்சான்றிதழ் தரப்போகிறோம் என்று கோட்டாபய தினாவெட்டோடு ஐ.நா.வில் அறிவித்தமை சாதாரண விடயமல்ல!

போர்க்குற்றத்தைத் துணிவாக தாங்கள் செய்தோம் என்று கூறிய பிறகும் கூட ஐ.நா. இன்றுவரை அதுபற்றி வாய் திறக்கவில்லை.

இந்த இலட்சணத்தில் இந்த ஐ.நா. சபையிடம் நீதி கேட்டு நிற்கும் எங்களின் நிலை பரிதாபத்துக்குரியது.

இத்தனை ஆண்டுகளாக தங்கள் உறவுகளை தேடித்தேடி, வீதியெங்கும் போராடி அலைந்த ஆயிரக்கணக்கான உறவுகளின் "நம்பிக்கையில்" ஒரேயடியாக தீ வைத்துக் கொளுத்திவிட்டார் கோட்டாபய.

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அவர்களை மீட்கப் போராடிய உறவுகளின் குரல்வளையை இந்த உலகம் ஒரேயடியாக நசித்துவிட்டது.

இரண்டாவது தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம்!

கொலைக்குற்றம் சாட்டப்பட்ட பல இராணுவ அதிகாரிகள் உட்பட துமிந்த சில்வா வரை அனைவரையும் பொதுமன்னிப்பில் வெளியே சுதந்திரமாக விட்டார் கோட்டாபய ராஜபக்ஷ.

வடக்கு - கிழக்கில் வாழ்ந்த அப்பாவி சனத்தைப் பிடிச்சு அடிச்சு, வெட்டி, சித்திரவதை செய்து, கொன்று, குழிதோண்டிப் புதைத்த பல இராணுவ அதிகாரிகள், பொதுமன்னிப்பில் இந்த ஆட்சிக்காலத்தில்தான் வெளியே விடப்பட்டார்கள்.

இதனை சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ அல்லது ஐ.நா.வோ கண்டிக்கவுமில்லை. நடவடிக்கை எடுக்கவுமில்லை!

சும்மா பேச்சுக்கு ஒண்டு ரண்டு மனித உரிமை அமைப்புகள் கண்டித்துவிட்டு போத்து மூடிக்கொண்டு படுத்துவிட்டார்கள். மேலதிகமாக எந்த நடவடிக்கையோ, அழுத்தமோ பிரயோகிக்கப்படவில்லை.

நீதி விசாரணையின்றி அல்லது தண்டனைக்காலம் முடிந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் கொஞ்சப்பேரே உள்ளார்கள்.

இன்னும் கொஞ்ச நாட்களில் அவர்களை வெளியே விட்டுத்தான் ஆகவேண்டும்.

அவர்களில் பெரும்பாலானோர் தண்டனைக்காலம் முடிந்து மேலதிகமாக எதுவித காரணமுமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள்.

ஆக;

இவர்களை விடுதலை செய்வதன் பின்னால் இன்னும் ஒரு அசிங்கமான கோரமுகம் உள்ளது.

ஐ.நா.வில் கோட்டாபய

03

Follow Us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

## நக்கல் நமசிவாயம்



நாடு முதலாம் திகதி முதல் வழமைக்கு திரும்புமாம்...அரசாங்கம்சொல்லுது... நாடு எப்போவோ வழமைக்கு திரும்பியாச்சுது... அரசாங்கம் தான் பாருங்கோ நித்திரையில் இருக்குது...

மலர் : 02, இதழ் : 66 பிலவ வருடம், புரட்டாசி மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (26.09.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை -18 0115886187 பக்கங்கள் 16 + 8 விலை ரூ.40




உள்ளே... சிறப்பு இணைப்பிதழ்





உள்ளே... பக்கம் 05




உள்ளே... பக்கம் 06




உள்ளே... பக்கம் 07



அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'க்வாட்' நாற்கரக் கூட்டமைப்பின் மாநாடு, அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில், ஜனாதிபதி இல்லமான வெள்ளை மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொரிசன், ஜப்பானியப் பிரதமர் யோஷிஹிடே சுகா ஆகியோர் பங்கேற்றனர்.

# திலீபன் நினைவேந்தல்களுக்கு நீதிமன்றம் தடைவிதிப்பு!

- தமிழர் தாயகத்தில் படையினர், பொலிஸார் குவிப்பு
- சட்டத்தினை மீறுவோரைக் கைதுசெய்யவும் உத்தரவு

***வவுனியா செய்தியாளர் திவ்யா - யாழ் மற்றும் வன்னி செய்தியாளர்கள்***

தியாகதீபம் திலீபனின் 34ஆவது ஆண்டு நினைவுநாளான இன்று, வடக்கு-கிழக்கு உட்பட தமிழர் பிரதேசங்களில் எந்தவித நினைவேந்தல்களையும் நடத்துவதற்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள நிலையிலும் கூட, நீதிமன்றம் சென்ற பாதுகாப்புத் தரப்பினர், மேற்படி நினைவேந்தல்களைத் தடுக்கும் வகையில் தடையுத்தரவுகளைப் பெற்றுள்ளனர்.

**வன்னியில்...**

தியாகதீபம் தீலிபனுடைய நினைவேந்தலை மேற்கொள்வதற்கு, முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிக்குள் தியாகதீபம் திலீபனுடைய நினைவேந்தல்...

02

# சந்தைப்படுத்த முடியாத 50 ஆயிரம் கெக்கரிக்காய்கள் மாடுகளுக்கு

## கிளிநொச்சி விவசாயி கவலை



***மு.தமிழ்ச்செல்வன்***

கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதியில் கெக்கரிக்காய் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த விவசாயி ஒருவர், தனது உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாமையின் காரணமாக, அவற்றை மாடு வளர்க்கின்றவர்களை எடுத்துச் செல்ல அனுமதித்துள்ளதாகவும், இதனால் தனக்கு பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், விவசாயியான சுப்பிரமணியம் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

02

# மாத்தளையில் குரங்காக மாறும் விவசாயிகள்: பயிர்களைப் பாதுகாக்க புதிய யுக்தி!



மாத்தளை பகுதியில் குரங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகள் புதிய உத்தியைக் கையாண்டு வருகிறார்கள்.

தம்புள்ளை மற்றும் கலேவெல ஆகிய கிராமங்களில் குரங்குகளின் தொல்லையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை சந்தித்து வருகிறார்கள்.

குரங்குகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர்கள், தொடர்புடைய அரச திணைக்களங்களைக் கேட்டுக் கொண்டும், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

02

# இரண்டு மாதங்களில் மட்டும் 56 ஆயிரம் கடவுச்சீட்டுகள்

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வழங்கல்



இலங்கையில் இவ்வாண்டின் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 56,406 கடவுச்சீட்டுகள் புதிதாக வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஜூலை மாதம் மட்டும் 27,326...

02

# பல்லேகலை நிலநடுக்க அளவை நிலையமூடாக கண்காணிப்பு!

## அமெரிக்கா செய்வதாக வெளியான தகவல்

கண்டி, பல்லேகலையில் அமைந்துள்ள நிலநடுக்க அளவை நிலையம் அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தால் அமைக்கப்பட்டமையானது, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் அணு ஆயுத ஆய்வு செயற்பாடுகளை உளவு பார்க்கும் நோக்கத்தைப் பின்னணியாகக் கொண்டதென புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் அஜித் பிரேம் தெரிவித்தார்.

இலங்கையின் பல்லேகலையில் அமைக்கப்பட்டுள்ள நிலநடுக்க அளவை நிலையமானது இந்த வலையமைப்பின் ஒரு முக்கிய நிலையமாகும்.

02

# வேலைநாட்களை அதிகரிக்கக் கோரி கொட்டும் மழையில் தொழிலாளி போராட்டம்




***நோட்டன் பிரிட்ஜ் எம்.கிருஸ்ணா***

வேலை நாட்களை அதிகரிக்கக் கோரி கொட்டும் மழையில் தனிநபராக தொழிலாளியொருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

02

# தேங்கியுள்ள கொள்கலன்களை விடுவிக்க வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி வசதி

## 50 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குகிறது

டொலர் பற்றாக்குறை காரணமாக துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியவசிய உணவுப் பொருட்களைக் கொண்ட 600 கொள்கலன்களை உடனடியாக விடுவிக்க, 50 மில்லியன் அமெரிக்க டொலரை வர்த்தக வங்கிகளுக்கு வழங்குவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

02

# வடக்கு - கிழக்கு தமிழ் எம்.பி.க்களை ஒன்றிணைக்க புதிய நடவடிக்கை

வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றிணைந்த கருத்தை சமூக இணைவுடன் வெளிப்படுத்தச் செய்யும் பொது முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதி.வண.கலாநிதி கி.நோயெல் இம்மானுவேல், தென்கயிலை...

02

# கிராமசேவகர் உட்பட்ட பலர் மீது மன்னாரில் கடற்படை தாக்குதல்

***மன்னார் நிருபர்***

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வங்காலைப்பாடு கடற்பகுதியில் மீனவர்கள், பெண்கள், கிராமசேவையாளர் உட்பட பலரை காரணமின்றி கடுமையான ஆயுதங்களால் வங்காலைப்பாடு கடற்படையினர் தாக்கியுள்ளனர். இதன் காரணமாக...

02


# நாடு திரும்பும் பணியாளர்களுக்கு இலவச பி.சி.ஆர். பரிசோதனை

தொழிலுக்காக வெளிநாடு சென்று நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு இலவசமாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்துள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், கட்டணம் அறவிடாது இலவசமாக...

02

## உஷ்



*வடக்கு மாகாண ஆளுநராக தற்போது கடமையாற்றும் திருமதி சார்ள்ஸ் விரைவில் பதவி விலகவுள்ளாரென முன்னர் நாம் குறிப்பிட்டிருந்தமை உங்களுக்கு நினைவிருக்கலாம். அவரின் அந்தப் பதவி விலகும் தீர்மானத்தை அரசு இப்போதுதான் ஏற்றுள்ளது. இதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநராக வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் சுந்தரம் அருமைநாயகம் நியமிக்கப்படவுள்ளார்.*

*ஏற்கனவே அரச அதிபர் பதவியில் சேவையாற்றி நன்கு அனுபவமுள்ள அவரை ஆளுநராக நியமிக்க அரசு மேலிடம் தீர்மானித்துள்ளது. விரைவில் அவர் பதவியேற்கவுள்ளார்.*

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 65 வயதுடைய ஒருவருக்கு உறுப்பு மாற்று சிகிச்சை செய்வதற்கு சிறுநீரகம் (o + **அல்லது** or o-) அவசரமாகத் தேவை. தானம் செய்யவிரும்புபவர்கள் குடிப்பழக்கம், மதுப்பழக்கம் இல்லாதவர்களாகவும், இருதயநோய், நீரிழிவு போன்ற நோய்களினால் பாதிக்கப்படாதவர்களாகவும் இருக்கவேண்டும். HLA Report வைத்திருப்பவர்கள் அவசரமாகத் தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கு : 0775766961


# பாரிய அரசமரம் விழுந்து பிள்ளையார் கோயில் சேதம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

அரசமரம் முறிந்து விழுந்ததில் ஏறாவூர்பற்று அரசமரத்தடிப் பிள்ளையார் ஆலயம் முற்றாக சேதமடைந்துள்ளது. ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆறுமுகத்தான் குடியிருப்புப் பகுதியில் நேற்று (25) அதிகாலை 2 மணியளவில் பாரிய அரசமரம் முறிந்து விழுந்ததில் ஏற்பட்ட அனர்த்தத்தினால், அரசமரத்தடிப் பிள்ளையார் ஆலயம் முற்றாக சேதமடைந்தது. இது பிரதேச மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த சேதமடைந்த ஆலயத்தை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டதுடன், அப்பகுதிக்குப் பொறுப்பான அரசு அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று, உடனடியாக ஆலயத்தின் மீது விழுந்த அரசமரத்தை அகற்றுவதற்கான பணிகளை முன்னெடுக்குமாறு ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் ராஜ்பாபுவைப் பணித்தார். சேதமடைந்த ஆலயத்தைப் புனரமைப்பதற்கான வேலைத்திட்டங்களை மிக விரைவில் முன்னெடுக்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

# சிறீதரன் எம்.பி.யின் அலுவலகம் பொலிஸாரால் சுற்றிவளைப்பு





கிளிநொச்சியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் அலுவலகமான 'அறிவகம்' பொலிஸாரால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

அலுவலகத்திற்கு வந்து செல்லும் அனைவரும் பொலிஸாரால் அடாவடி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

குறித்த பொலிஸாரிடம் ''ஏன் இவ்விடத்தில் நிற்கிறீர்கள்? அலுவலகத்திற்கு வருவோருக்கு ஏன் தடையை ஏற்படுத்துகிறீர்கள்?'' என்று சிறிதரன் எம்.பி. பொலிஸாரிடம் கேட்டதற்கு பதிலளித்த பொலிஸார், ''இது மேலிடத்து உத்தரவு'' என்று பதில் கூறியுள்ளதாக அறியமுடிந்தது.

## வடக்கு, கிழக்கு...

ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆகியோரால் இதற்கான முயற்சி முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இவ்விருவராலும் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“வடக்கு - கிழக்கைப் பிரதேசவாரியாகவும், தேசியப்பட்டியலூடாகவும் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இயன்றவரை ஒன்றிணைந்து ஈழத்தமிழர்களின் கூட்டு உரிமை சார்ந்த நிலைப்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். இது தொடர்பில், கடந்த வருட இறுதியிலும், இவ்வருட ஆரம்பத்திலும் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை மேற்கொள்ளச் செய்யும் சந்திப்புகளை நடத்துவதில், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் முயற்சியோடு மதத்தலைவர்களும் இணைந்து ஊக்குவித்தோம். சில கூட்டங்களைத் தலைமையேற்றும் நடத்தியிருந்தோம்.

சமீபத்தைய நாட்களில் மீண்டும் இதைப் போன்ற ஒரு வரலாற்றுத் தேவை எழுந்திருப்பதாகச் சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் எம்மைத் தொடர்புகொண்டு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் சிக்கல்கள் எழும்போது, அவற்றைத் தீர்த்துவைக்கவென மீண்டும் மீண்டும் புதிதாக முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஒரு பொதுவான மாற்றீட்டு அணுகுமுறையை வகுத்துக்கொள்வதை ஆராய்ந்து செயற்படுத்துவதே பொருத்தமாகத் தெரிகிறது.

இவ்வாறான ஒரு முயற்சியை முன்னெடுப்பதில் முதற்கட்டமாகச் சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் கருத்துகளைப் பெற்று, அவற்றைப் பரிசீலித்து, அடுத்தகட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனித்தனியாகவும் கூட்டாகவும் கலந்துரையாடி, தக்க வழி ஒன்றை வகுக்க ஆவன செய்வதற்காகப் பூர்வாங்கச் செயற்குழு ஒன்றை எமது மேற்பார்வையில் உருவாக்கி வருகின்றோம்.

வடக்கு - கிழக்கு இணைந்து மேற்கொள்ளும் இம்முயற்சியில் சட்டத்துறை சார்ந்த இளந்தலைமுறையோடு, சிவில் சமூக மற்றும் மரபுரிமைச் செயற்பாடுகளில் இயங்கிய அனுபவம் கொண்டவர்களும், ஊடக அமையங்களை ஸ்தாபித்துச் செயற்பட்ட அனுபவம் வாய்ந்தவர்களுமாக, எந்தவித அரசியல் கட்சிப் பின்னணியும் இல்லாத ஐவர் இணைக்கப்பட்டுள்ளார்கள். முதற்கட்டமாக, இவர்கள் கல்வி மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடல்களையும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்தப் பூர்வாங்கக்குழுவின் பொதுத் தொடர்பை சட்டத்துறை சார்ந்த மூவர் கையாள்வது பொருத்தம் என்ற அடிப்படையிலும், இளைய தலைமுறையின் பங்கேற்பு இவ்வாறான முயற்சிகளுக்கு அவசியம் என்ற நோக்கோடும், மேலும் இரண்டு சட்டத்தரணிகள், இயன்றவரை பால், மத, மற்றும் பிரதேச சமத்துவத்துடன் இணைக்கப்பட்டு பொதுத்தொடர்பைக் கையாளவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். செயற்குழு மற்றும் பொதுத்தொடர்பில் பங்கேற்பவர்களின் விபரங்களை, ஆரம்பக் கலந்துரையாடல்கள் முடிவடைந்ததும் வெளிப்படைத்தன்மையோடு அறியத்தரும் பணியை மன்னாரைச் சேர்ந்த அ. அன்ரனி றொமோள்சன் எனும் சட்டத்தரணியிடம் கையளித்திருக்கிறோம்.

இந்தக் குழுவில் இணைந்து கொள்ளவும், ஆலோசனைகளை வழங்கவும், இம் முயற்சியை ஊக்குவித்துச் செயற்படவும் விரும்புவோர் participate@tamildemocracy.org என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகத் தமது தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளலாம். கல்வித்துறை, சட்டத்துறை, மனித உரிமை, ஊடகத்துறை மற்றும் இதர சமூகப் பரப்புகளில் இருந்து கருத்துக்களை உள்வாங்கி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரோடும் கலந்தாலோசித்து, உகந்த ஒரு பொறிமுறையை வகுக்கும் பணியை முன்னெடுக்கவேண்டும் என்ற நல்லாசியுடன் இம்முயற்சியை ஆரம்பித்து வைப்பதில் மனநிறைவடைகின்றோம். அனைவரின் ஆதரவும் இம்முயற்சிக்குக் கிட்ட இறையருளை வேண்டி நிற்கின்றோம்” - என்றுள்ளது.

## தேங்கியுள்ள...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வாழ்க்கைச் செலவு பற்றிய அமைச்சரவை உபகுழு கூட்டத்தின் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி இம்மாதம் கைத்தொலைபேசிகள், வீட்டு மின் பாவனை பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் அடங்கலாக 623 வகையான பொருட்களுக்குரிய இறக்குமதிக்கான வங்கி முற்பணத் தொகையை இரட்டிப்பாக்கியமை இறக்குதியாளர்களை சோர்வடையச் செய்துள்ளது.

மத்திய வங்கியின் டொலர் கையிருப்பு வீழ்ச்சியடைந்தமையே இதற்கு பிரதான காரணமாகும்.

விசேடமாக கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் கொவிட் தொற்றின் போது வேகமாக அதிகரித்து வந்த அந்நிய செலவாணியானது தகவல் தொழில்நுட்பத் தொழில்துறைக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

'எக்கொனமி நெக்ஸ்ட்' இணையத்தளத்துக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர் ஜெயசுந்தர, நீடிக்கும் இந்த வரையறைகள் கொவிட் -19 பொருளாதார மீட்பு நடவடிக்கைகளுக்கு பொருத்தமற்றது என்று குறிப்பிட்டார்.

அதேவேளை தகவல் தொழில்நுட்பம் ஏற்றுமதியில் பாரிய செல்வாக்கை செலுத்திவருகின்ற நிலையில், மத்திய வங்கியானது தகவல் தொழில்நுட்ப உற்பத்திக்கு 100 வீதம் கடன் எல்லையை விஸ்தரித்தமை சாதகமானதல்ல என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கொவிட்-19 மீட்பு பணிகள் அனைத்தது தரப்பினரோடும் கூட்டாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்ற நிலையில், ஏற்றுமதி வருமானத்தை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள இவ்விடயங்களை மீள்பரிசீலனை செய்தல் வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இரண்டு...

சாதாரண கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ள அதேவேளை, 26 பேருக்கு இராஜதந்திரக் கடவுச்சீட்டுகளும், 57 பேருக்கு உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மேலும், ஓகஸ்ட் மாதத்தில் அனைத்து நாடுகளுக்கும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகள் 28,903 உம் , உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகள் 44 உம், 50 இராஜதந்திரக் கடவுச்சீட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் 31 திகதி வரையான காலப்பகுதியில் அனைத்து நாடுகளுக்கும் செல்லுபடியாகும் சாதாரண கடவுச்சீட்டுகள் 1,61,820 உம், உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகள் 625 உம், இராஜதந்திரக் கடவுச்சீட்டுகள் 220 உம் இலங்கை குடியவரவு குடியல்வு திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2020 ஆம் ஆண்டில் அனைத்து நாடுகளுக்கும் செல்லுபடியாகும் சாதாரண கடவுச்சீட்டுகள் 24,081 உம், இராஜதந்திர கடவுச்சீட்டுகள் 404 உம் விநியோகிக்கப் பட்டுள்ளன.

## சந்தைப்படுத்த...



கெக்கரிக்காய்களை உற்பத்தி செய்த போது அவை நல்ல விளைச்சலைத் தந்ததாகவும், இந்த முடக்க காலத்திற்கு முன்பு ஒரு கிலோ கிராம் 50 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிவித்த அவர், முடக்க காலத்தில் 10 ரூபா அல்லது 15 ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட்டதாகவும், தற்போது அந்த விற்பனையும் இடம்பெறாமையால் பெருமளவு கெக்கரிக்காய்கள் பழுத்தும், பழுதடைந்தும் உள்ள நிலையில் தற்போது மாடு வளர்க்கின்றவர்களை எடுத்துச் செல்லுமாறு கூறிவிட்டதாகவும் தெரிவித்தார். தினமும் சுமார் பத்துக்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு தாங்கள் வளர்க்கும் மாடுகளுக்கு அவற்றை எடுத்துச் செல்வதாகவும் தெரிவித்த அவர், முடக்கநிலைக்கு முன்னர் நாளாந்தம் 500 தொடக்கம் 1000 கிலோ கிராம் வரை சந்தைப்படுத்தி வந்தாகவும் தெரிவித்தார்.விவசாயிகள் தொடர்ந்தும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத சூழல் ஏற்பட்டு வருகின்றது என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

## திலீபன்...

நிகழ்வுகளை நடத்தவுள்ளார் என தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் வழக்குப்பதிவு செய்திருந்தனர்.

அதனடிப்படையில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, தியாகதீபம் திலீபனுடைய நினைவேந்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த தடையுத்தரவினை முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் இல்லத்திற்குச் சென்று கையளித்துள்ளார்.

மேலும், குறித்த தடையுத்தரவில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

துரைராசா ரவிகரன் ஆகிய நீங்கள் முல்லைத்தீவு போலீஸ் பிரிவிற்குள் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த இராசையா பார்த்தீபன் என்பவர் தொடர்பில் நினைவுகூரல் நிகழ்வுகளை நடத்தவுகள்ளதாக தகவல் கிடைத்துள்ளதென முல்லைத்தீவு பொலிஸ் அறிக்கை செய்துள்ளது.

எனவே துரைராசா ரவிகரன் ஆகிய நீங்களும், உங்கள் ஆதரவாளர்களும் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குள் 24.09.2021 தொடக்கம் 27.09.2021வரையான காலப்பகுதிக்குள் இராசையா பார்த்தீபன் தொடர்பிலான எந்தவொரு நினைவுகூரலையும் மேற்கொள்ளக்கூடாதென்ற தடைக்கட்டளையினை குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 106இற்கு அமைவாக பிறப்பிக்கின்றேன் எனக் குறித்த நீதிமன்றத் தடைக்கட்டளையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும், முல்லைத்தீவு பொலிஸார் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி, தமிழரசுக்கட்சி உறுப்பினர் அ.பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்டவர்களுக்கும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்கு தடை உத்தரவுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாங்குளம் பொலிஸ் பிரிவில்**

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தியாக தீபம் திலீபனை நினைவு கூரவும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் மற்றுமொரு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த தடை உத்தரவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவர் தொடர்பில் நினைவு கூரல் நிகழ்வை நடத்த உள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக மாங்குளம் பொலிஸார் அறிக்கை செய்துள்ளனர்.

எனவே, பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நீங்களும், உங்கள் ஆதரவாளர்களும் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குள் 24.09.2021 தொடக்கம் 28.09.2021 வரையான காலப்பகுதிக்குள் மேற்படி இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் தொர்பிலான எந்தவொரு நினைவுகூரலையும் மேற்கொள்ளக்கூடாதென்ற தடைக்கட்டளையை குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் பிரிவு 106 இற்கு அமைவாக பிறப்பிக்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடைக் கட்டளையில், தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், மற்றும் திலகநாதன் சிந்துயன், ரகுநாதன் துஸ்யந்தன், புஞ்சிதபாதம் ரவீந்திரன் (ரவி மாஸ்டர்), ராசமணி சிவராசா, மகாதேவன் ரூப்பானந் ஆகிய 7 பேரினது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## கிராமசேவகர்...

பலத்த காயங்களுடன் கிராமசேவையாளர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் இரவு கடற்றொழிலுக்கு சென்று கரை திரும்பிய மீனவர்கள் இருவரை சிவில் உடையில் வந்த இரு கடற்படையினர் தாக்கியுள்ளனர் இந்நிலையில், மீன்பிடிக்கச் சென்ற தனது தந்தை நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத காரணத்தால், கடற்கரைக்குச் சென்ற கிராமசேவையாளர் அப்பகுதியில் மீனவர்கள் தாக்கப்படுவதை எதிர்த்துக் கேள்வி கேட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கோபமுற்ற இரு கடற்படை சிப்பாய்கள் அருகிலிருந்த கடற்படை முகாமுக்கு சென்று சிறிது நேரத்தில் 10க்கும் மேற்பட்ட கடற்படையினருடன் மீண்டும் அப்பகுதிக்கு வருகை தந்து, அப்பகுதியில் நின்ற மீனவர்கள், பெண்கள், கிராமசேவகர் உட்பட அனைவரையும் தாக்கியதுடன், துப்பாக்கியை தலையில் வைத்து அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடுமையாக தாக்கப்பட்ட கிராமசேவகர் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்லேகலை...

இந்த நிலையமானது 2000 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கலிபோர்னியாவின் சன்டியாகோ பல்கலைக்கழகத்தின் கண்காணிப்பின் கீழ் இலங்கையின் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் ஒருங்கிணைப்புடன் நிறுவப்பட்டது.

2004 டிசம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் பின்னர் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினுள் நிலநடுக்கத் தரவுகள் மற்றும் சுனாமி கண்காணிப்பு நிலையம் என்பன நிறுவப்பட்டன.

இதன் ஒரு பிரதான குறிக்கோளாக அமைவது இந்து சமுத்திரத்தில் ஏற்படுகின்ற சுனாமி நிலைபற்றி மக்களுக்கு உரிய நேரத்தில் முன்கூட்டியே எச்சரிக்கை விடுப்பதாகும்.

இருப்பினும் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் சுனாமி பாதிப்புக்களுக்குரிய சாத்தியக்கூறுகளை அறிந்து கொள்வதற்கான தரவுகளை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் பெற்றுக்கொள்வதற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகம் அனுமதி வழங்க மறுத்தமையை பணிப்பாளர் அஜித் பிரேம் நினைவூட்டினார்.

வெளிப்புற சிறைமுகாம் அமைக்கப்பட்டிருக்கும் இப்பிரதேசத்தில் 100 மீற்றர் ஆழத்தில் துளையிடப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியக பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். நிலநடுக்க அளவை நிலையமானது கலிபோர்னியா பல்கலைக்கழகத்தால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாடு திரும்பும்...

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப் படவுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தொழிலாளர் நலன்புரி நிதியத்தினூடாக பி.சி.ஆர். பரிசோதனைக்கான கட்டணத்தை ஒதுக்குமாறு துறைசார் அமைச்சு, பணியகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

நாடு திரும்பும் இலங்கைப் பணியாளர்களை தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கமைய, மிக விரைவில் தங்களின் வீடுகளுக்கு அனுப்புவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய குறிப்பிட்டார்.

## வேலைநாட்களை...

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பொகவந்தலாவ, கெம்பியன் 57 ஆம் பிரிவை சேர்ந்த நாகூர் பிச்சை என்ற தொழிலாளியே கெம்பியன் நகர் விநாயகர் ஆலயத்தின் எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை கொட்டும் மழையில் பதாகை ஏந்தி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த அவர் கூறியதாவது,

தோட்டத் தொழிலாளிகளின் நாட்சம்பளம் ஆயிரம் ரூபா என அறிவித்த பின்னர் தோட்ட நிர்வாகம் மாதத்தில் 12 அல்லது 14 நாட்களே வேலை வழங்குகின்றது. 12 நாட்கள் வேலை செய்து எமது வாழ்க்கைச் செலவைக் கொண்டு நடத்த முடியாது. 25 நாட்கள் வேலை செய்தாலே யே எங்கள் குடும்பத்தை கொண்டு நடத்த முடியும். ஜீவன் தொண்டமான், பழனி திகாம்பரம் இருவரையும் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய தோட்டத் தொழிலாளிகளின் இந்த பிரச்சினைக்கு அவர்கள் குரல் கொடுக்காதது ஏன்? ஆயிரம் ரூபா சம்பளம் என்பது வார்த்தையளவிலேயே உள்ளது. தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடி அதிகரித்துள்ளது. நாட்டின் ஜனாதிபதி தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடி தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென தொழிலாளர்கள் சார்பாக கோரிக்கை விடுக்கிறேன் என்றார்.

## மாத்தளையில்...

இதையடுத்து, குரங்குகளிடமிருந்து தங்கள் பயிர்களைப் பாதுகாக்க அவர்கள் புதிய வழிகளைக் கண்டுபிடிக்க ஆரம்பித்துள்ளனர்.

அதிலொரு முயற்சியாக, விவசாயிகள் குரங்கு வேடமணிந்தபடி விவசாய நிலங்களில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அவர்களின் புதிய தோற்றத்தைக் கண்ட குரங்குகள் பீதியடைந்து தப்பியோடி வருவதாகவும், இதுவரை இந்த முயற்சிக்கு நல்ல பலன் கிட்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனை நேரடி விவாதத்துக்கு அழைக்கும் கல்முனை விகாராதிபதி



(கேதீஸ்)

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அரசியல் நடப்புகள் தொடர்பாக தன்னிடம் நேரடி விவாதத்துக்கு வர வேண்டும் என்று கல்முனை சுபத்ராராமய விகாராதிபதி ரன்முத்துக்கல சங்கரரட்ண தேரர் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதிநிதிகள் வெள்ளிக்கிழமை காலை விகாரையில் ரன்முத்துக்கல சங்கரரட்ண தேரரை சந்தித்து அவர்களுடைய தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு கோரினர். இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு ரன்முத்துக்கல சங்கரரட்ண தேரர் தெரிவிக்கையில்,

அமைச்சர் வியாழேந்திரன் தேர்தலுக்கு முன்பு அம்பாறை மாவட்டத்துக்கு பலமுறை வந்து மக்களை நேசிக்கும் ஒருவராக மேடைகளில் முழங்கினார். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக பல கருத்துகளை முன்வைத்தார். உறுதிமொழிகளை வழங்கினார். வென்றதன் பின்னர் அம்பாறை மாவட்டம் பக்கமே வரவில்லை. தற்போது இராஜாங்க அமைச்சராகவும் உள்ளார். இங்கு எந்த சேவையும் செய்யவில்லை. இவர் மட்டக்களப்புக்கு மட்டுமா அமைச்சர்? நான் வியாழேந்திரனை பகிரங்க விவாதத்துக்கு அழைக்கின்றேன். அவர் தன்னை மட்டக்களப்பு மாவட்டத்துக்கான அமைச்சர் என்றுதான் நினைத்து கொண்டிருக்கின்றார். அதனால்தான் தேர்தலுக்கு பின்னர் அம்பாறை மாவட்டத்துக்கு வராமல் உள்ளார். இது தொடர்பாக அவர் என்னுடன் விவாதிக்கலாம்.

ஆசிரியர், அதிபர் சேவையில் கடந்த 24 வருடங்களாக நிலவி வருகின்ற சம்பள முரண்பாட்டை நீக்க அரசாங்கம் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதனை வலியுறுத்தி முன்னெடுக்கப்படுகின்ற தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகின்றேன். அதேபோல், மாணவர்களின் நலன் கருதி பாடசாலைகள் விரைவாக மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றார்.

# அட்டாளைச்சேனை பிரதேச மீனவர்கள் படகு மீதேறிப் போராட்டம்; அமைச்சர் டக்ளஸ் தலையிட்டு தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை







(நூருல் ஹுதா உமர்)

மீன்பிடித் திணைக்கள பிராந்திய உதவிப்பணிப்பாளரின் செயலைக் கண்டித்தும், மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தலையிட்டு தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரியும் அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பிரதேச மீனவர்கள் படகுகளில் ஏறி வித்தியாசமான போராட்டமொன்றை அட்டாளைச்சேனை கடற்கரையில் நேற்று முன்தினம் (24) மாலை முன்னெடுத்தனர்.

பதாகைகளை ஏந்திக்கொண்டு கடற்கரையில் ஊர்வலமாகப் பவனி வந்த மீனவர்கள், போராட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தனர். இதன்போது மீனவ சங்கங்களின் சார்பில் கருத்து தெரிவித்த மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள், தங்களுக்கும், தங்களுக்கு நன்மைகளை செய்யும் மீன்பிடி பரிசோதகர் எஸ். பாபுவுக்கும், தொடர்ந்தும் மீன்பிடித்திணைக்கள பிராந்திய உதவிப்பணிப்பாளரினால் அநீதிகள் இழைக்கப்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டினர்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த மீனவர்கள் கூறுகையில்,

சட்டவிரோதமான சுருக்குவலை பாவனை எங்களின் பிரதேசத்தில் அதிகரித்துள்ளது. அவ்வாறு சட்டவிரோத செயலை செய்பவர்களுக்கு உதவும் விதமாக, மீன்பிடித்திணைக்கள பிராந்திய உதவிப்பணிப்பாளர் செயற்பட்டு வருகிறார். சட்டநடவடிக்கைகளின் போதும் அதிகார துஷ்ப்பிரயோகம் செய்கிறார். உதவிப்பணிப்பாளர் தெரிவிக்கும் விடயங்களை ஏற்றுக்கொள்ளாமல், மீனவர்களின் பக்கம் நின்று எவ்வித கையூட்டல்களுக்கும் சோரம் போகாத அதிகாரி எஸ்.பாபுவை இடமாற்றம் செய்துள்ளார்கள். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அவரது இடமாற்றத்தை இரத்துசெய்து அறிவிக்க மீன்பிடி அமைச்சர் உடனடியாக முன்வரவேண்டும்.

வடக்குக்கு சிறந்த முறையில் சேவையாற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இனிவரும் காலங்களில் கிழக்கிற்கும் நிறைவான சேவையை முன்கொண்டு செல்லவேண்டும். இது விடயம் தொடர்பில் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசால் காஸிமிடம் பேசியுள்ளோம். இதுகுறித்து நிரந்தரமான தீர்வை வழங்காது விட்டால் மீன்பிடியை நிறுத்திவிட்டு கறுப்புக்கொடி போராட்டத்தை அறிவிக்கத் தயாராக உள்ளோம் என்று தெரிவித்தனர்.

# போத்தலிலிருந்து வாயெடுக்காமல் அதிகம் மது அருந்துவது யார்?

## விபரீதப் போட்டியால் யாழில் ஒருவர் பலி

மதுபான போத்தலிலிருந்து வாயெடுக்காமல் அதிகளவு மதுபானம் அருந்தும் போட்டி விபரீதமாகி ஒருவர் உயிரிழந்துள்ளார். எனினும், அவரது மரணத்தில் சந்தேகமிருப்பதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு தென்மராட்சி பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

பிறந்தநாள் நிகழ்வொன்றில் கலந்துகொண்டவர்கள், மதுபானம் அருந்தும் போட்டியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது மதுபான போத்தலிலிருந்து வாயெடுக்காமல், யார் அதிக மதுபானம் அருந்துவது என்ற போட்டியில் ஒருவர் உயிரிழந்தார். அவர் மதுபானம் புரையேறி இறந்ததாக, அவருடன் போட்டியில் ஈடுபட்டவர்கள் விசாரணையில் தெரிவித்தனர். எனினும், அவர் அதிக மது அருந்தச் செய்யப்பட்டு, திட்டமிடப்பட்டு கொல்லப்பட்டதாக உறவினர்கள் குற்றஞ்சாட்டினர். இதேவேளை, அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்றும் உறுதியானமை குறிப்பிடத்தக்கது.

# இந்து சமுத்திர நாடுகளின் பாதுகாப்பு பயங்கரவாத ஒழிப்பு குறித்து பேச்சு

## இலங்கை மற்றும் இந்தோனேஷியாவின் வெளிநாட்டமைச்சர்கள் ஆராய்வு



இந்தோனேஷிய வெளிநாட்டமைச்சர் திருமதி ரெட்னோ லெஸ்டாரி பிரியன்சரி மர்சுடிக்கும், இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்குமிடையிலான சந்திப்பு நியூயோர்க்கிலுள்ள இந்தோனேஷியத் தூதரகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது இரு நாடுகளுக்குமிடையே இருதரப்பு பிரச்சினைகள் இல்லை ஆதலால், பொருளாதார ஒத்துழைப்பில் விசேட கவனம் செலுத்தி இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதே முன்னுரிமையான விடயமாகும் என இந்தோனேஷிய வெளிநாட்டு அமைச்சர் வலியுறுத்தினார்.

இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக, வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்படல் வேண்டும். அணிசேரா இயக்கத்தின் உறுப்பினர்களாக இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் மிக முக்கியமானவை என இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

அணிசேரா இயக்கத்தின் தத்துவம் ஒவ்வொரு பிரச்சினையையும் சீரமைப்பதல்ல. மாறாக ஒவ்வொரு பிரச்சினையையும் அதன் சொந்த அடிப்படையில் தீர்ப்பதாகும். ஆதலால் அணிசேரா இயக்கம் இன்றும் பொருத்தமானதாக உள்ளது. எனவே, இந்த இயக்கத்திற்கு நாம் அதிகமான ஆற்றலை செலுத்துதல் வேண்டும். இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பில் இந்தோனேஷியாவும், இலங்கையும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

எனவே, இந்து சமுத்திர விளிம்பு சங்கம் மற்றும் ஆசியான் பிராந்திய மன்றத்தை மேலும் வலுவூட்டுவது அவசியமானதாகும். பயங்கரவாதம் மற்றும் கடல்சார் குற்றங்களை எதிர்கொள்வது தொடர்பாக பாதுகாப்பு, உளவுத்துறைப் பகிர்வு மற்றும் ஊழியர் மட்ட ஆலோசனைகளிலான ஒத்துழைப்பை அமைச்சர் பீரிஸ் மேலும் பாராட்டினார்.

ஆசியானின் சில உறுப்பினர்களுடன் சிறந்த வர்த்தக உறவுகள் இருப்பதாலும், சாத்தியமான ஒருங்கிணைப்பு தெளிவாக இருப்பதாலும், ஆசியானுடன் இலங்கை அதிகமாகத் தொடர்பு கொள்ள விரும்புவதாக அமைச்சர் மேலும் எடுத்துரைத்தார். இது சம்பந்தமாக, இலங்கை ஒரு துறைசார்ந்த உரையாடல் பங்காளியாக இருக்க விரும்புவதுடன், சார்க் மற்றும் ஆசியான் ஆகியவற்றுக்கிடையே ஒரு பாலத்தை உருவாக்கவும் விரும்புகின்றது. கொவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றதற்காக இந்தோனேஷிய அரசாங்கத்திற்கு அமைச்சர் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்நோய் மனிதகுலத்தின் சக்திகளை ஒன்றிணைத்து, ஒற்றுமையுடன் ஒன்றிணைய அனுமதிக்கின்றது என்று தெரிவித்த அமைச்சர் இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான சாத்தியங்களையும் குறிப்பிட்டார்.

## வெடிமணியம் தொடர்ச்சி...

*அறிவிப்பின் பின்னர் சிறைச்சாலைகளில் சிங்களக்கைதிகள் போராட்டம் செய்கிறார்கள்.*

*"விடுதலைப்புலிகளை விடுவித்தால் எங்களையும் விடுவியுங்கள்" என்பதே அவர்களின் கோரிக்கை.*

*இந்த கோரிக்கையின் பின்னால் குரூரமான ஒரு அரசியல் முன்னகர்வு இருக்கிறது என்பதே உண்மை.*

*கடைசியாக மிகவும் கவர்ச்சிகரமான கோரிக்கைதான் "புலம்பெயர் தமிழர்களை" கோட்டாபய சமாதானம் பேச அழைத்த விடயம்.*

*ஆட்சிக்கு வந்த கையோடு;*

*புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும், புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களையும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி கறுப்புப் பட்டியலில் இணைத்தார் கோத்தபாய.*

*இன்று அதே வாயால் அவர்களை "பேச வாருங்கோ" என்று கூப்பிடுவது நரித்தனம்.*

*"அது நாற வாய். இது வேற வாய்" எண்ட வடிவேலுவின் நகைச்சுவைதான் நினைவுக்கு வருகிறது.*

*கடந்த நல்லாட்சிக்காலத்தில் பல புலம்பெயர் தமிழ் அமைப்புகளும், தனிநபர்களும் கறுப்புப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டார்கள்.*

*ஆனால் கோட்டாபய ஆட்சிக்கு வந்த கையோடு அவர்களையும், இன்னும் மேலதிகமாக பல அமைப்புகளையும் தடைசெய்தார்.*

*இன்று நாட்டை முன்னேற்றவும், அந்நிய செலாவணியைக் கூட்டவும் முதலீட்டை அதிகரிக்கவும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை நோக்கி அழைப்பு விடுப்பது என்பது உள்நோக்கம் கருதிய செயல்.*

*மதில் மேல் பூனையாக இருக்கும் ஒரு சில புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களையும், அமைப்புக்களையும் ஏற்கனவே அணுகிய கோட்டாபய தரப்பு "டீலை" முடித்துவிட்டதாக சொல்லுகினம்.*

*வெகுவிரைவில் சிறிலங்காவில் இந்த "பூனைகளுக்கும்" கோட்டாபய வுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடக்கும்.தேனிலவும் கொண்டாடப்படும்.*

*இந்த "பூனைகளை" யார் யார் என்று அடையாளம் கண்டு அவைக்கும், கோட்டாபயவுக்கும் இடையில் இனிப்பான உறவை வளர்க்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருத்தர் திரைமறைவில் வேலை செய்தார் எண்டு சொல்லுகினம்.*

*அவர் ஆர் எண்டது மலிஞ்சால் சந்தைக்கு வரும். பொறுத்திருங்கோ!*

★★★

*நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தின் எதிரில் தீபம் ஏற்ற முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட விவகாரம்;*

*ஊடகங்கள் பலவற்றில் முக்கியத்துவம் கொடுத்து பேசப்பட்டது.*

*வருடாவருடம் இந்த இடத்தில் எப்போதும் ஒரு "பிரச்சினை" வந்துகொண்டேயிருக்கிறது.*

*அகிம்சைவழியில் போராடி உயிர்நீத்த திலீபனை நினைவுகூரக்கூடாது என்று ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒரு காரணத்தை "தூக்கிக்கொண்டுவரும்" சிறிலங்கா பொலிஸ் இந்தமுறை "கொரோனாவை" காரணம் காட்டியது.*

*கொரோனா விதிகளை மீறி திலீபனின் நினைவிடத்துக்கு எதிரில் கஜேந்திரன் விளக்கேற்றியதாகவே வழக்குப் பதிவு செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.*

*இந்த சம்பவத்தின் பின்னர் யாழ்ப்பாண நீதிமன்றில் பொலிஸார் தடையுத்தரவு ஒன்றை வாங்கியுள்ளார்கள்.*

*நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் மதிக்காமல் அவரது சிறப்பு உரிமைகளையும் கருத்தில் எடுக்காது;*

*நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஏற்றிய தீபத்தை காலால் உதைத்து;*

*சேர்ட்டில் பிடித்து, கழுத்தில் தள்ளி தரதரவென இழுத்து வாகனத்தில் ஏற்றி கைதுசெய்து கொண்டு போனது என்பது;*

*சிறிலங்கா ஆட்சியாளர்களின் கோரமுகத்தை மீண்டும் ஒருமுறை துகிலுரித்துக் காட்டியுள்ளது.*

*எத்தினை தரம் இந்த கோரமுகத்தை சிறிலங்கா காட்டினாலும், சர்வதேச சமூகமோ, ஐக்கிய நாடுகள் சபையோ அதை ஒரு பொருட்டாக கருத்தில் எடுப்பதில்லை என்பதுதான் யதார்த்தம்.*

*ஒருபுறத்தே புலம்பெயர் தமிழ் அமைப்புக்களையும், தமிழர்களையும் "வாங்கோ" எண்டு கைகளை நீட்டியபடி;*

*காலால் திலீபனின் நினைவிடத்தில் ஏற்றப்படும் தீபங்களை காலால் உதைக்கும் கோட்டாபயவை நம்புவது என்பது....*

*முதலையை நம்பி அதன் முதுகில் ஏறி ஆற்றைக் கடப்பதற்கு ஒப்பானது.*

*இந்த இடத்தில் இன்னொரு விடயத்தை பேசியே ஆகவேண்டும்.*

*செல்வராஜா கஜேந்திரன் கோட்டாபய வின் ஆள் எண்டும், அவரின் பேரிலேயே இந்த நாடகத்தை செய்தார் எண்டும் ஒரு தரப்பால் குற்றம் சுமத்தப்படுகிறது.*

*ஐ.நா.வில் கோட்டாபய பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கமுடியாது. புலிகள் இன்னும் உயிர்ப்போடுதான் இருக்கிறார்கள் என்று சொல்லும் போது;*

*அதற்கு வலுச்சேர்க்கும் விதமாக கஜேந்திரனின் இந்த நடவடிக்கை அமைந்தது என்கிறார்கள்.*

*"நீதிமன்ற உத்தரவைத் தாருங்கள். நான் விளக்கேற்றாமல் போகிறேன்"*

*"என்னைக் கைதுசெய்யுங்கள்"*

*என்ற கஜேந்திரனின் கூற்றுகளும் அதன்பின்னர் நடந்தேறிய அசம்பாவிதங்களும் எங்களைப்போல சாதாரண சனத்துக்கு "சந்தேகத்தை" வரவைப்பதில் நியாயம் இருக்கிறது.*

*பலபேர் கூடிநிண்டு திலீபன் நினைவு தின தூபியை சுத்தம் செய்யும் போது தடுக்காத பொலிஸ்;*

*திடீரென கஜேந்திரன் தீபம் ஏற்றுவதைத் தடுத்து அவரைக் கைதுசெய்தது என்பது விசித்திரமே!*

*எங்களுக்கு என்ன சந்தேகம் எண்டால்;*

*கஜேந்திரன் அங்க போய் விளக்கேத்தப்போறார் எண்டு பொலிஸுக்கு தகவல் கிடைச்சது எப்பிடி?*

*இந்த இடத்திலதான் "பலத்த" சந்தேகம் வருகிறது.*

*அதைவிட பெரிய பம்பல் என்னண்டால்;*

*கைதுசெய்யப்பட்ட கஜேந்திரனை விடுதலைசெய்யாவிட்டால் "போராட்டம் வெடிக்கும்" என்று கூவின ஒரு சில விசிலடிச்சான் குஞ்சுகளின் அரசியல் குறளிவித்தைதான்!*

*எது என்னவோ;*

*இறந்தவர்களை சுதந்திரமாக நினைவு கூரும் உரிமை கூட எங்களுக்கு இல்லை என்பதை சிங்களப்பேரினவாதம் மீண்டும் ஒருமுறை "செவிட்டைப்பொத்தி" அடிச்சு சொல்லியிருக்கிறது. கோட்டாபயவோடு பேசப்போகும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும், தனிநபர்களும் இதை மனசில வைச்சுக்கொண்டு பேசுங்கோ. தின்னுங்கோ. கூடிக்கும்மாளம் போடுங்கோ!*




தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42.
தொலைபேசி : 015 200 900/ 015 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# அழித்துவிடமுடியா தமிழர் நினைவுகள்

தமிழரின் விடுதலை வேள்வியில் ஆகுதியாக்கியவர் தியாகத் தீபம் திலீபன். அவர் தன் உடலை வருத்தி உண்ணா நோன்பிருந்த 34 ஆவது தினம் இன்றாகும்.

ஈழத் தமிழரின் பிரச்சினையை தீர்க்க என்று கூறி இந்திய - இலங்கை ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட போதும், அது தமிழர்களுடைய தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கும் தமிழர் கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையிலான அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்க வழிகோலவில்லை. மேலும், இந்த ஒப்பந்தத்திற்கு தமிழர் தரப்பு ஆலோசனைகளையும் இந்திய - இலங்கை அரசுகள் பெறவில்லை. இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்பும் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தமிழர்களுக்கு எதிராக பெரும் மனித உரிமை மீறல்களையும் அடக்கு முறைகளையும் தமிழர் தாயகமாக கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களையும் மிக வேகமாக தொடர்ந்தார்.

இந்த நிலையில் தான், அரசிடம் தமிழினப் பிரச்சினைக்கு நீதி கேட்பதில் பயனில்லை என முடிவெடுத்த திலீபன், இந்திய அரசு தான் தமிழினப் பிரச்சினையில் தலையிட்டது, மக்களின் உரிமை பிரச்சினைக்கு உத்தரவாதம் அளித்தது, விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை ஒப்படைக்க வைத்தது. ஆகவே, இந்திய அரசிடமே தமிழ் மக்களின் உரிமையைக்கோரி போராடுவதன் மூலம் அதன் முகத்திரையை கிழிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

மகாத்மா காந்தியின் அஹிம்சை தத்துவத்தைத் தனது அடிப்படை அரசியல் கொள்கையாக பறைசாற்றும் இந்திய அரசிடம், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு நீதி கேட்டு, ஆயுதப் போராளியான திலீபன், அஹிம்சை வழியில் செப்டெம்பர் 15, 1987 அன்று ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதப் போரை ஆரம்பித்தார்.

1. மீளக்குடியமர்த்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2. சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4. ஊர்காவற் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றிலுமாகத் திரும்பப் பெற வேண்டும்.

5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை முற்றிலுமாக நிறுத்த வேண்டும் என்பதே திலீபனின் கோரிக்கைகள் ஆகும்.

இந்த ஐந்து கோரிக்கைகளும் புதிதானவை அல்ல. ஏற்கனவே, இலங்கை அரசுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்போது இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையான விஷயங்கள்தான்.

அவர் வலியுறுத்திய ஐந்து அம்சக் கோரிக்கைகள் இன்றும் ஈழ நிலத்தின் நிறைவேற்றப்படாத கோரிக்கைகளாக இருக்கின்றன.

அதேபோல, உண்ணாவிரத மேடை ஏறுவதற்கு முன்பு தன்னுடைய நண்பர்களிடம்,

1. கோரிக்கை நிறைவேறும் வரை உண்ணாவிரதம் இருப்பேன்.

2. ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்க மாட்டேன்.

3. எனக்கு மருத்துவப் பரிசோதனை எதுவும் செய்யக்கூடாது.

4. நான் உணர்விழந்த பிறகும் என் வாயில் ஒரு சொட்டு தண்ணீர் கூட ஊற்றக்கூடாது.

5. இறக்கும் வரை எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக்கூடாது என இந்த 5 உறுதிமொழிகளையும் வாங்கிக்கொண்டுதான் மேடை ஏறினார். அதே நேரம் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் திலீபனின் கோரிக்கைகளை முன் வைத்து அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அஹிம்சைப் போராட்டங்களை இந்தியா மதிக்கும். இந்தியாவின் அடிப்படைத் தத்துவம், ஆன்மீகத் தத்துவம், உயர்வான தத்துவம் அனைத்துமே அஹிம்சைக் கோட்பாடுதான் என தமிழர்கள் நம்பினர்.

மேலும், 1986ஆம் ஆண்டு இந்திய அரசால் தொலைத்தொடர்பு சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்ட போது, அதை திரும்பத் தர வலியுறுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்டப் போராட்டம் வெற்றிப் பெற்றதும் அஹிம்சைக்கு இந்தியா தலைவணங்கும் என மக்கள் நம்பியதற்கு மற்றொரு காரணம்.

ஆனால், திலீபன் தன் உறுதியான போராட்டம் தமிழர் வாழ்வில் மக்கள் புரட்சியூடான ஓர் மாற்றத்தை கொண்டு வரும் என நம்பினார். நாட்கள் நகர்ந்தன. ஆனால், இந்திய அரசு தரப்பில் திலீபனின் கோரிக்கைகள் தொடர்பில் எந்த ஒரு பதிலும் தெரிவிக்கப்படவில்லை.

தான் இறக்கப்போவது உறுதி என்று அறிந்திருந்தும் தனது கொள்கையில் மிகவும் உறுதியுடன் பயணித்தார் திலீபன். ஆனால், காந்திய தேசம் திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்காது போக, அவர் தனது போராட்டத்தின் 12ஆவது நாள் சாவைத் தழுவினார்.

தியாகத் தீபம் திலீபனின் மரணம் தொடர்பில், “திலீபனின் மரணம் பாரத நாட்டை தலைகுனிய வைத்த நிகழ்ச்சி. ஒருவன் தான் நேசித்த மண்ணுக்காக எத்தகைய உயர்ந்த உன்னத தியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்தான்” என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது அறிக்கையில் அப்போது குறிப்பிட்டிருந்தார்.

தியாகத் தீபம் திலீபனின் மரணம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே பின்னர் ஏற்பட்ட போருக்கு அடிப்படை காரணமாகவும் அமைந்தது. சாத்வீக ரீதியான திலீபனின் சாவை கண்டும் இலங்கை அரசு திருந்தவில்லை. இந்திய அரசும் ஈழத்தமிழர் பிரச்சினையின் உண்மை நிலையை இன்று வரையில் உணரவில்லை.

இலங்கையில் போர் முடிந்து இத்தனை வருடங்கள் கடந்துள்ளபோதிலும், அன்று திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகள் கூட அப்படியேதான் இருக்கின்றன. அறிவுக்கெட்டிய தூரம்வரை தமிழர்கள் பிரச்சினை தீர்க்கப்படும் வாய்ப்பில்லையென்றே குறிப்பிடத் தோன்றுகிறது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவுறுத்தப்பட்டு அவர்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படாமல் இழுத்தடிப்பு தொடர்கிறது. தமிழர்களுக்கு குறைந்தபட்ச தீர்வாக இருந்த மாகாண சபை முறைமை கூட இப்போது சேடம் இழுத்துக்கொண்டிருக்கிறது.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென இந்தியா கூறுவதை இலங்கை கணக்கில்கூட எடுக்காமல் இருக்கும் பரிதாப நிலைமை.

அன்றுமுதல் இன்றுவரை அஹிம்சை ரீதியிலும் ஆயுதப் போராட்டத்திலும் ஈடுபட்டு இன்னுயிர்களை கொடுத்த தமிழினம் இன்னமும் நீறு பூத்த நெருப்பாக வாழ்ந்துகொண்டிருக்கிறது.

எல்லாக் காலகட்டத்திலும் தமிழினம் ஏதோ ஒரு செய்தியை சொல்லிக்கொண்டிருந்தாலும் ஆட்சியாளர்கள் அவற்றை கண்டுகொள்ளாதிருப்பதே வரலாறாக இருக்கிறது.

திலீபனின் மரணம் வழங்கிய செய்தியை உணராதவர்கள் அதனைவிட வேறெதனை உணருவார்கள்? காலாகாலம் தியாகி திலீபனை நினைவுகூரும் தமிழினம், அதேநேரத்தில் இலங்கை, இந்திய அரசுகள் செய்த வஞ்சனைகளையும் மனதில் இருத்திக் கொண்டிருக்கும். அவற்றை அழித்துவிட முடியாது.

# முதல்வர் ஸ்டாலினுக்கு எதிராக களமிறக்கப்பட்ட ஆளுநர் ரவி

மோடியின் மாயாஜால மந்திரங்கள் அனைத்தையும் புறந்தள்ளி மக்கள் சேவையை முன்னிறுத்தி தமிழகத்தை ஆட்சி செய்கிறார் முதல்வர் ஸ்டாலின். ஸ்டாலின் ஆட்சிபீடம் ஏறியதும், மத்திய அரசை ஒன்றிய அரசு என அழைத்தார். ஒன்றிய அரசு எனும் வார்த்தைப் பிரயோகத்தை டில்லி அரசால் ஜீரணிக்க முடியவில்லை. மாநில அரசுகளுக்கு கொடுக்கவேண்டிய உரிமைகளையும் சலுகைகளையும் மத்திய அரசு முடக்கியுள்ளது எனும் பிரசாரம் மக்கள் மத்தியில் வலுவாகப் பதிந்துள்ளது.





மோடி அரசின் கொள்கைகள், மக்கள் நலனுக்கு எதிரான திட்டங்கள் அனைத்தையும் ஸ்டாலின் கடுமையாக எதிர்க்கிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் மோடி நினைத்த அனைத்தும் தமிழகத்தில் நடந்தன. அரசியல் ரீதியாக மோடிக்கு எதிராக ஸ்டாலின் செயற்படுகிறார். இந்நிலையில், அவர் தமிழக ஆளுநர் பதவியில் இருந்த பன்வாரிலால் விடுவிக்கப்பட்டு, பஞ்சாப் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். நாகாலாந்து மாநில ஆளுநராக உள்ள ஆர்.என்.ரவி, தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பன்வாரிலால் புரோஹித், 2017 ஒக்டோபரில் தமிழக ஆளுநராக பதவியேற்றார். நான்கு ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், அவர் மாற்றப்படுவார் என தகவல் பரவியது. கடந்த மாதம் 31 ஆம் திகதி, பஞ்சாப் மாநில ஆளுநர் பதவியும், சண்டிகர் யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர் பொறுப்பும், அவருக்கு கூடுதலாக வழங்கப்பட்டது.

என்.ஆர்.ரவி, பீஹார் மாநில தலைநகர் பாட்னாவில், 1952 ஏப்., 3 ஆம் திகதி பிறந்தவர். இவரது முழுப் பெயர் ரவீந்திர நாராயண ரவி. இயற்பியலில் முதுகலை பட்டம் பெற்றவர். சில காலம் பத்திரிகை துறையில் பணியாற்றினார். 1976இல் ஐ.பி.எஸ்., தேர்ச்சிப் பெற்றார். கேரள மாநிலத்தில் பணி ஒதுக்கப்பட்டது. அங்கு, 10 ஆண்டுகளுக்கும் மேலாக, எஸ்.பி., உட்பட பல்வேறு நிலைகளில் பணியாற்றினார். அதன்பின், மத்திய பணிக்கு மாற்றலாகி சென்றார்.

மத்திய புலனாய்வுத் துறை பணியில், ஊழல் மாபியாக்களுக்கு எதிராக சிறப்பாக பணியாற்றினார். மத்திய உளவுத்துறை பிரிவிலும் சிறப்பாக பணியாற்றினார். கடந்த 2014 முதல் கூட்டு புலனாய்வுக் குழு தலைவராக இருந்தார். நாகாலாந்தில் உள்ள ஆயுதக் குழுக்களுக்கும், மத்திய அரசுக்கும் இடையே, 2015இல் ஒப்பந்தம் ஏற்பட முக்கிய காரணமாக இருந்தார். பயங்கரவாத ஒழிப்பு மற்றும் அது தொடர்பான உளவுத் தகவல்களை சேகரிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர். கடந்த 2019 ஜூலை 20இல், நாகாலாந்து ஆளுநராக நியமிக்கப்பட்டார். தற்போது, தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய அரசு கொண்டு வந்த இந்திய குடியுரிமை திருத்தச் சட்டம், வேளாண்மை சட்டங்கள் ஆகியவற்றை திரும்பப் பெற வலியுறுத்தி, தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நீட் தேர்வு பற்றிய தமிழக அரசின் ஆய்வு மத்திய அரசை அசைத்துள்ளது. நீட் தேர்வு தேவை இல்லை. அதனை எதிர்நோக்கும் மாணவர்கள் அடையும் துயரங்கள் பற்றிய விரிவான அறிக்கை பாமரர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்த சூழ்நிலையில், பாதுகாப்புத் துறையில் இருந்து ஒருவர் ஆளுநராக வருவது, பல தரப்பினரிடையே பீதியை ஏற்படுத்தி உள்ளது. தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி வெளிப்படையாக தன் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

என்.ஆர்.ரவி, கிரண்பேடி போல் செயல்படுவாரோ என அச்சமடைந்துள்ளனர். கண்டிப்பான பொலிஸ் அதிகாரியான கிரண் பேடி, புதுச்சேரி மாநில ஆளுநராகக் கடமையாற்றியபோது அங்கு நடைபெற்ற களேபரங்கள் நாடறிந்ததே. தமிழக ஆளுநராக பன்வாரிலால் இருந்தபோது ஆய்வுசெய்கிறேன் எனப் புறப்பட்டார். அன்றைய ஆட்சிபீடத்தில் இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர அனைத்து தமிழக அரசியல் கட்சிகளும் கூட்டாக எதிர்ப்புத் தெரிவித்தன.

தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி வெளிப்படையாக தன் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார். முன்னாள் பொலிஸ் துறை அதிகாரியான கிரண்பேடியை புதுச்சேரி ஆளுநராக நியமித்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக நடத்திய ஜனநாயக விரோத நடவடிக்கைகளை, நாடே பார்த்து நகைத்தது. விளம்பரமே கூடாது என்று செயல்படும், நேர்மையான ஆட்சியை தந்து கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலினுக்கு இடையூறு செய்யும் வகையில், ஆர்.என்.ரவியை ஆளுநராக மத்திய அரசு நியமித்திருக்கிறதோ என சந்தேகப்படுகிறேன். புதிய ஆளுநர், தமிழகத்தில் ஜனநாயக படுகொலை நடத்துவதற்கு ஆயுதமாகப் பயன்படுத்த மத்திய அரசு முயன்றால், மக்களை திரட்டி, ஜனநாயக சக்திகள் போராட வேண்டிய சூழல் உருவாகும் என எச்சரிக்க விரும்புகிறேன் என அழகிரி கூறியுள்ளார்.

முதல்வர் ஸ்டாலின், புதிய ஆளுநருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அதேநேரம், ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் இது தொடர்பாக எவ்வித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. எதிர்க் கட்சித் தலைவரும் ஏனைய தலைவர்களும் ஆளுநர் என்.ஆர்.ரவிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழக ஆளுநராக பன்வாரிலால் பொறுப்பேற்றபோது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க. ஸ்டாலினுக்கு உரிய மரியாதை தரப்படாத நிலையில், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியை ஆளுநருக்கு அறிமுகம் செய்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின். முதல்வர் ஸ்டாலின், தான் பொறுப்பேற்றது முதல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் நட்பு பாராட்டி வருகிறார். முதல்வராக பதவியேற்றபோது, முன்வரிசையில் ஓ.பி.எஸ்., எடப்பாடி பழனிச்சாமி ஆகிய இருவரையும் உட்கார வைத்து தன்னுடைய நாகரீகத்தை வெளிப்படுத்தியிருந்தார் ஸ்டாலின்.

முழுக்க முழுக்க பொலிஸ்துறை பின்புலம் கொண்ட ஆர்.என்.ரவியை, நாகாலாந்து ஆளுநராக மத்திய அரசு ஏற்கனவே நியமித்தது. தற்போது, அவர் தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பதில் உள்நோக்கம் இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இடையூறு செய்வதற்காகவே, இதுபோன்ற நியமனங்களை மத்திய அரசு கடந்த காலங்களில் செய்திருக்கிறது. ஆளுநருக்கு மாநிலத்தில் எந்த அதிகாரமும் இல்லை. மாநில அரசு முரண்பட்டால் ஆட்சியைக் கலைக்கும் உரிமை ஆளுநருக்கு உண்டு.

2014 ஆம் ஆண்டு முதல் கூட்டு புலனாய்வுக் குழு தலைவராக என்.ஆர்.ரவி இருந்தார். நாகாலாந்தில் உள்ள ஆயுத குழுக்களுக்கும், மத்திய அரசுக்கும் இடையே, 2015இல் ஒப்பந்தம் ஏற்பட முக்கிய காரணமாக இருந்தார். பயங்கரவாத ஒழிப்பு மற்றும் அது தொடர்பான உளவுத் தகவல்களை சேகரிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர். கடந்த 2019 ஜூலை 2020 இல், நாகாலாந்து ஆளுநராக நியமிக்கப்பட்டார். நாகாலாந்து ஆயுதக் குழுக்களுக்கு ரவியைப் பிடிக்காது. சமாதானப் பேச்சுவார்த்தை எனும் போர்வையில் தமது வீரியத்தை ரவி குலைத்ததாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவது, தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் எனக் கூறப்படுகிறது. இந்த சூழலில், பாதுகாப்புத் துறை, உளவுத் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஆர்.என்.ரவி, தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டது, முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஆர்.என். ரவியின் நியமனம் காரணமாக பலதரப்பட்ட அரசியல் கேள்விகள், விவாதங்கள் நடக்க தொடங்கியுள்ளன. ஒரு காலத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு கொடுக்கப்பட்ட நெருக்கடி போலவே இப்போது தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினுக்கும் மத்திய அரசு ஆளுநர் மூலம் அழுத்தம் கொடுக்குமோ என்ற கேள்விகள் எழுந்துள்ளன. 1996 முதல் 1998 வரை தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்தவர் பி. சி. அலெக்சாண்டர். காங்கிரஸ் மத்தியில் ஆட்சியில் இருந்தபோது பி. சி. அலெக்சாண்டர் ஆளுநராக நியமிக்கப்பட்டார். எம்.ஜி.ஆர் மறைந்தபின் அ.தி.மு.க இரண்டாக பிளவுபட்டபோது ஆளுநராக இருந்த பி.சிஅலெக்ஸாண்டர் வலுவான முதல்வர் போல் செயற்பட்டார். முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி எப்படி கருணாநிதிக்கு சவாலாக இருந்தாரோ அதேபோன்று இன்றைய ஆளுநரான ரவியும் ஸ்டாலினுக்கு சவாலாக இருப்பார்.

புதிய ஆளுநர் ஆர்.என். ரவி, ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி. நாகாலாந்து ஆளுநராக இருந்தவர். உளவுத்துறையில் சிறப்பு அதிகாரியாக பணியாற்றியவர். தென் மாநில அரசியலை நன்கு அறிந்தவர். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலின் சிஷ்யர். இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகமாகியுள்ள நிலையில், இந்த விவகாரத்தை நன்கு கண்காணிக்கவே ரவியை பிரதமர் நியமித்துள்ளார் என்கின்றனர்.

தமிழகத்தில் பிரிவினைவாதம் தலைதூக்காமல் இருக்கவும் இவர் நியமனம் உதவும் என சொல்லப்படுகிறது. அரசியல் ரீதியாக ஒரு விஷயம் அலசப்படுகிறது. ஆளுநர் ரவி நேர்மையானவர், தேவையில்லாத அரசியல் விவகாரங்களில் தலையிட மாட்டார். இவரை ஆளுநராக நியமித்ததன் மூலம் தி.மு.க., அரசுடன், மத்திய அரசு சுமுகமாக செயல்பட வேண்டும் என பிரதமர் விரும்புகிறார் என்பது தெரிகிறது என்கின்றனர் டில்லி பா.ஜ.க. தலைவர்கள்.

புத்தகம் கொடுப்பதும் வாங்குவதும் ஸ்டாலினின் கொள்கை. தன்னைச் சந்திக்கும் தான் சந்திக்கும் அனைவருக்கும் ஸ்டாலின் புத்தகங்களைக் கொடுப்பார். ஆளுநர் ரவிக்கு கொடுக்கப்பட்ட புத்தகங்களில் ஒன்று கீழடி தமிழர் நாகரிகம் தொடர்பானது. மற்றொன்று, சென்னை வரலாறு தொடர்பானது. இரண்டுமே ஆங்கிலத்தில் உள்ள புத்தகங்களாகும். யாருக்கு புத்தகங்கள் கொடுத்தாலும் அதில் தமிழ் கலாசாரம் முன்னே வந்து நிற்குமாறு உள்ள புத்தகங்களை தேர்ந்தெடுத்து அவர் வழங்குவது கவனிக்கத்தக்க அம்சமாக இருக்கிறது. புத்தகத் தேர்வு பின்னணியில் முதல்வர் மட்டுமே கிடையாதாம். அவரின் சிறப்பு செயலாளர் மற்றும் முன்னாள் பள்ளிக்கல்வித்துறை முதன்மை செயலாளரான உதயசந்திரன் ஐ.ஏ.எஸ் இருப்பதாகவும் கூறுகிறார்கள். அந்த இரண்டு புத்தகங்களும் ஆளுநருக்கு கொடுக்கப்பட்ட சைகையாகும்.

மூத்த அரசியல்வாதி ஆளுநராக வருவார் என எதிர்பார்த்திருந்த நிலையில் பிரதமர் அதிர்ச்சி வைத்தியம் அளித்துள்ளார். அதேநேரம் அவரது நியமனம், தமிழகத்தில் அரசியல் ரீதியாகவும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே, மோதல் போக்கு உள்ளது. இந்த மோதல் போக்கு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ரமணி

தமிழ் மக்கள் உரிமைகளுடன் தாயக மண்ணில் தலைநிமிர்ந்து வாழ்வதை உறுதிசெய்வதற்காக, உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி, இறுதியில் வல்லரசுகளின் மௌனத்தால் தன் இன்னுயிரை நீத்த விடுதலைப் புலிகளின் யாழ். பிராந்தியத்தின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் தியாகி திலீபனின் 34ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்த திலீபனின் தியாகப் பயணம் பின்வரும் ஐந்து அம்சக் கோரிக்கைகளைப் பிரதானமாக கொண்டிருந்தன.

1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலிலுள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், இடைக்கால அரசு நிறுவப்படும் வரை 'புனர்வாழ்வு' என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

உடல் ஜில்லென்று பனிக்கட்டியைத் தொடுவது போல் குளிர்ந்து காணப்பட்டது. மனம் 'பட பட' வென்று அடிக்கத் தொடங்கியது. மீண்டும் 'நவீனன்' என்று அழைத்தேன். நவீனன் எழும்பி விட்டான்.

ஐந்து நிமிடங்களில் மேடையில் ஒரு பெரிய மெழுகுவர்த்தி எரியத் தொடங்கியது. மெழுகுவர்த்தியின் ஒளியில் திலீபனின் முகம் நன்றாகத் தெரிந்தது. ஒரே வினாடிதான்! அதற்குள் அந்த மெழுகுவர்த்தி காற்றின் வேகத்தினால் அணைந்துவிட்டது.

பலமாக வீசிய காற்று அதனை மீண்டும் எரிய விடுமா என்பது சந்தேகமாகத்தான் இருந்தது. ஆனால், ஐந்து நிமிடங்களில் மின்சாரம் வந்துவிட்டது. திலீபனின் நிலை எல்லையைக் கடந்துவிட்டது என்பது எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அதனால், என் மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. நாடித்துடிப்பைப் பரிசோதித்தேன். கணிக்க முடியவில்லை. மிகவும் மெல்லியதாக அடிக்கிறது. உடனே இரத்த அழுத்தத்தைக் கணித்தேன். அது மிகவும் குறைவாக இருக்கிறது.

50 என்ற நிலையில் ஒரு நோயாளியால் இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் உயிர் வாழ முடியும் என்பது எனக்குத் தெரியும்.





# யாகத்துக்கு அர்த்தம் கற்பித்த
# திலீபன்

3. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

4. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்க்காவற்படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படவேண்டும்.

5. தமிழ்க் கிராமங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும் என்பவையே குறித்த கோரிக்கைகளாகும்.

ஈழத்தமிழ் மக்கள் சார்பிலான குறித்த கோரிக்கைள் இந்திய உயர்ஸ்தானிகருக்கு அனுப்பப்பட்டு 24 மணித்தியால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு செப்டெம்பர் 15ஆம் திகதிவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. அன்றிலிருந்து உண்ணாவிரதப் போராட்டமாக உருவெடுத்த திலீபனின் போராட்டம் இதே நாளில் இம்மண்ணில் வித்தாகியது.

"எம்மைப் போன்று எதிர்கால சந்ததியும் துன்பியல் வாழ்க்கைக்குள் சென்றுவிடக் கூடாதென்பதற்காகவும், எதிர்கால சந்ததி வாழ ஒரு நாடு தேவை என்பதற்காகவும் மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்" என தனது இறுதி உரையில் கூறியிருந்தார்.

அதற்குப் பின்னர் மக்கள் போராட்டம் வீறுகொண்டு எழ, தியாகி திலீபனின் உயிர்த்தியாகமே காரணமாக அமைந்தது. இன்றுவரை திலீபனின் கனவை நனவாக்க தமிழ் மக்கள் போராடினாலும், அது வெறும் தீர்வுகளற்ற போராட்டமாகவே உள்ளது.

தியாகி திலீபனின் நினைவுதினத்தை முன்னெடுக்க கூடாதென கடந்த காலங்களைப் போன்று நல்லாட்சியிலும் முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. எனினும், அவற்றை தகர்த்தெறிந்து தமிழ் மக்கள் விரவி வாழும் தமிழர் தாயகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

தியாக தீபம் திலீபனின் போராட்டத்தில் அவருடன் பயணித்த வாஞ்சி என்பவர் திலீபன் மரணித்த அந்த நாள் குறித்து பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி இதே போன்ற ஒரு நாளில் அதிகாலை 5 மணிக்கு எதிர்பாராத ஒரு நிகழ்வு நடந்துவிட்டது. திடீரென்று மின்சாரம் தடைப்பட்டுவிட்டது.

எங்கும் ஒரே இருள்மயம். காற்றும் பலமாக வீசத் தொடங்கியது. பல நாட்களாக திலீபனுடன் சேர்ந்து நானும், எனது நண்பர்களும் முழுமையான உறக்கமில்லாமல் இருந்ததால், இன்று மிகுந்த சோர்வுடன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தோம்.

மாறன், ராஜன், தேவர், திலீபனின் அண்ணன் இளங்கோ என அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு உறங்கினோம். பன்னிரண்டு நாட்கள் உடல்களை சாறாகப் பிழிந்தெடுத்த அசதியுடன கூடிய உறக்கமின்றி, அது வேறொன்றுமில்லை. மேடைக்கு முன்னால் அமர்ந்திருந்த ஒருவர் என்னை வந்து தட்டியெழுப்பியதும், நான்தான் முதலில் திடுக்கிட்டு எழுந்தேன்.

கும்மிருட்டில் என்ன செய்வதென்று தெரியாமல், "நவீனன்" என்று அழைத்தபடி திலீபனின் கட்டிலில் கையை வைத்தேன். அவர் ஆடாமல், அசையாமல் படுத்திருந்தார். அதனால் மனம் அமைதியடைந்தது. அவரின்



**"அவர் விருப்பத்துக்கு மாறாக எப்படி அவருக்கு சிகிச்சையளிப்பேன்? எப்படி அவருக்கு நீர் ஊட்டுவேன்?**
**மனித நேயத்தை மதிக்கும் ஒரு வைத்திய சேவையாளன் என்ற நிலையை திலீபன் விடயத்தில் நிறைவேற்ற விடாமல் என் கைகளைக் கட்டிப் போட்டது எது?**
**எது? ஆம். சத்தியம் என்ற இந்த ஐந்து எழுத்துகளுகாகத் தானே திலீபன், அகிம்சை என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட போராட்டக் களத்தில் குதித்தான். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று உயரிய அம்சங்களினால் வேரூன்றி வளர்த்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால், 'கட்டுப்பாடு' என்ற நல்வழியில் கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக திலீபனை என் கண்ணெதிரிலேயே பலி கொடுப்பதைத் தவிர, வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை."**

உலகமே தலைகீழாகச் சுற்றுவது போலிருந்தது. திலீபன் அடிக்கடி கூறிய வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன.

"வாஞ்சி அண்ணை! எனக்கு என்ன நடந்தாலும் நீங்கள் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பலவந்தமாகவோ, சுய நினைவற்ற நிலையிலோ தர முயற்சிக்கக்கூடாது. அப்படி என் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் நான் இறக்கும்வரை எனக்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது. சுயநினைவோடு என்றாலும் சரி. சுய நினைவில்லை என்றாலும் சரி. இதுக்குச் சம்மதிக்கிறனெண்டு சத்தியம் செய்து தாருங்கோ"

என்று விடாப்பிடியாக நின்று என்னிடம் சத்தியம் வாங்கிய பிறகுதான் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார் அவர்.

அப்படியிருக்க, அவர் விருப்பத்துக்கு மாறாக எப்படி அவருக்கு சிகிச்சையளிப்பேன்? எப்படி அவருக்கு நீர் ஊட்டுவேன்?

மனித நேயத்தை மதிக்கும் ஒரு வைத்திய சேவையாளன் என்ற நிலையை திலீபன் விடயத்தில் நிறைவேற்ற விடாமல் என் கைகளைக் கட்டிப் போட்டது எது? எது? ஆம். சத்தியம் என்ற இந்த ஐந்து எழுத்துகளுகாகத் தானே திலீபன், அகிம்சை என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட போராட்டக் களத்தில் குதித்தான். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று உயரிய அம்சங்களினால் வேரூன்றி வளர்த்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால், 'கட்டுப்பாடு' என்ற நல்வழியில் கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக திலீபனை என் கண்ணெதிரிலேயே பலி கொடுப்பதைத் தவிர, வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை.

என் கடமையைச் செய்வதற்காக மேடையின் பின்பக்கம் இறங்கிச் சென்றேன். அங்கே பிரதித் தலைவர் மாத்தயா நின்றார். அவரிடம் திலீபனின் உடல் நிலையின் அபாயகரத்தைப் பற்றி எடுத்துரைத்தேன்.

திலீபனின் உடல்நிலை மோசமாகிவிட்ட விடயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரவத் தொடங்கியது. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும், பொதுமக்களும் மேடையைச் சுற்றிவளைத்துக் கொண்டனர். திலீபனுக்கு கடைசி நிமிடம் வரையும் ஒருவித சிகிச்சையும் அளிக்க முடியாமல் எமது கைகள் கட்டப்பட்டிருந்ததற்கு வேறு முக்கிய காரணமும் ஒன்றிருந்தது. எமது காதில் விழக்கூடியதாகவே பல எதிரணி உறுப்பினர்களும், எமது இயக்கத்துக்கு எதிரானவர்களும் பேசியதை காதால் கேட்டவர்களில் நானும் ஒருவன்.

"புலிகள் தந்திரமாக மக்கள் மனத்தை மாற்றுவதற்காக உண்ணாவிரதம் என்ற பெயரில் தண்ணியைக் குடிச்சுக்கொண்டு இருப்பார்கள். ஆர் இதைக் காணப்போகினம்? கடைசியில் 5 தீர்மானங்களும் நிறைவேறுமட்டும் வைத்தியம் செய்து ஆளைச் சாகவிடமாட்டினம். இதுதான் இந்த சாகும்வரை நீர் அருந்தாமல் உண்ணாவிரதம் இருப்பதன் உண்மை"

இப்படியான பேச்சுக்களுக்கு உண்மை வடிவம் கொடுத்து, புலிகள் பொய்யர்கள் என்ற கெட்ட பெயரை வரவிடாமல் காப்பாற்றுவதற்காகவும் எம் கைகள் கட்டப்பட்டிருந்தனவே தவிர, வேறு ஒன்றுக்காகவும் அல்ல.

எம் கைகள் மட்டும் கட்டுப்படாமல் இருந்திருந்தால், எமது உயிரினும் மேலான, தியாக தீபம் திலீபனை எமது உயிர்களைக் கொடுத்தாவது காப்பாற்றியிருப்போம். ஆனால் முடியவில்லையே? விதி! தன் வலிய கரங்களை மிக நன்றாகவே திலீபனின் கழுத்தில் இறுக்கிவிட்டது.

உயிருடன் அந்த மனித தெய்வம் நீண்ட நேரம் போராடிக் கொண்டிருப்பதை என் கண்களால் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டமைக்காக, நான் வெட்கப்பட்டேன். வேதனைப்பட்டேன். ஆனால், என்ன செய்ய முடியும்?

265 மணித்தியாலங்கள் தனது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த அந்த தியாக தீபம் திலீபன், 26.09.1987 அன்று காலை 10.48 மணியளவில், எம்மையெல்லாம் இந்தப் பாழும் உலகில் பரிதவிக்க விட்டு விட்டுவிட்டு தான் மட்டும் போய்விட்டான்.

ஆம். தமிழர் தம் விளக்கு அணைந்துவிட்டது! அணைந்தே விட்டது! டொக்டர் சிவகுமார், திலீபன் இறந்த பின்னர் அவரைப் பரிசோதனை செய்து தனது இறுதியான முடிவைச் சொல்லிவிட்டு, திலீபனின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்தபோது, மக்கள் கதறி அழத் தொடங்கினர்.

எங்கும் அழுகை சத்தம். விம்மல் ஒலி. சோக இசை. வானமே இடிந்து விட்டதைப் போன்ற வேதனை எல்லோரையும் ஆக்கிரமித்திருந்தது. வானத்து நிலவு கீழே விழுந்து விட்டது போன்ற உணர்வு!

முற்பகல் 11 மணிக்கு பிரேத பரிசோதனை செய்வதற்காக, அவரது உடலை யாழ். வைத்திய கல்லூரிக்கு எடுத்துச் சென்றோம். மாலை 4.15 மணியளவில் திரும்பவும் அதே மேடைக்கு எதிரில் அவரின் புகழுடம்பு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் புள்ளி போட்ட, பச்சையும், கறுப்பும் கலந்த இராணுவ உடையும், தொப்பியும் திலீபனுக்கு அணியப்பட்டு, 'லெப்டினன்ட் கேணல்' என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது.

அவர் செய்த தியாகத்துக்கு அவருக்கு எந்தப் பட்டமும் தகுதியில்லை, அல்லது ஈடாகாது என்பது எமக்குத் தெரியும். ஆனால், என்ன செய்ய முடியும்? அவரைப் படுக்க வைத்திருந்த பேழையை, விடுதலைப்புலிகளின் சிவப்பு நிறத்திலான கொடி அலங்கரித்திருந்தது. தந்தை, சகோதரர்கள், உறவினர்கள் ஆகியோர் உடலை வந்து தரிசித்துச் சென்றனர்.

பெட்டியைத் திறந்ததுமே அவரது அன்புத் தந்தையும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான, இராசையா 'ஓ' என்று அலறியவாறு திலீபனின் உடல்மீது விழுந்து புரண்டு அழத் தொடங்கிவிட்டார். அவரின் அழுகையைத் தொடர்ந்து பொதுமக்களும், சிறு பிள்ளைகளைப் போல் குலுங்கிக் குலுங்கி அழுத காட்சி நெஞ்சை உருக்கியது.

பொதுமக்கள் மணிக்கணக்காகக் காத்திருந்து, நீண்ட வரிசையில் வந்து தமது இறுதி அஞ்சலியை மண்ணின் மைந்தனுக்குச் செலுத்தினர். ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமார், தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கலங்கி அழுதவாறு தமது அஞ்சலியை செலுத்தினர்.

தலைவர் பிரபாகரன், சொர்ணம், குமரப்பா, புலேந்திரன், சந்தோசம், ஜொனி, பிரபா, இம்ரான், அன்ரன் மாஸ்டர், சங்கர் அண்ணா, நடேசன் மற்றும் ஏனைய இயக்க உறுப்பினர்களும் தத்தம் இறுதி அஞ்சலியைத் தமது தோழனுக்குச் செலுத்தினர்.

சாஜகான், நரேன், அருணா, சிறி, ராஜன், தினேஸ் போன்றோர் தம்மைச் சமாளிக்க முடியாமல் விம்மி விம்மி அழுதனர். திலீபனின் தியாகப் பயணத்தில் 12 நாட்கள் அவர் கூட இருந்து, அவரின் போராட்டத்தில் பங்குபற்றி, வேதனையின் எல்லைக்கே சென்றுவந்த எனக்கு, இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு இன்னும் எத்தனை நாட்கள் தேவையோ நானறியேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்!

திலீபனின் உயிர் அநியாயமாகப் போகவில்லை. அதற்குப் பதிலாக அவர் ஒரு படிப்பினையை எமக்குக் கற்பித்து விட்டுப் போயுள்ளார். அகிம்சைப் போராட்டம் என்பது மனிதநேயமும், உயர் பண்பும் மிக்கவர்களிடம் தான் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். ஆயுதங்கள்தான் எமது தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்தவரை சரியான பதில் தரமுடியும் என்பதையும், திலீபன் மறைமுகமாக உணர்த்திவிட்டுப் போயிருக்கிறார் என்பதே எமது கணிப்பு. அந்தத் தியாக தீபத்தின் இலட்சியங்கள் நிறைவேற, எம்மை நாம் அர்ப்பணிப்போமாக!

**நன்றி:- இணையம்**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் இலங்கைத்தொடர்பில் பேசப்பட்டு வரும் ஒரு முக்கிய கருபொருளாக தமிழ் மக்களின் பிரச்சினைகளே காணப்படுகிறது. அந்த வகையில் இவ்வருடம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் 76 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றியிருந்தார்.

உள்ளகப் பிரச்சினைகளுக்கு உள்ளக பொறிமுறையில் தீர்வு காணவேண்டும் என்றும், புலம்யெர் தமிழர்களை பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்றும், காணாமல் போனோருக்கு மரணசான்றிதழ் வழங்கப்போவதாகவும் அரசியல் கைதிகளுக்கு விடுதலை வழங்கப்போவதாகவும் அவரது உரையில் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் அரசியல் கட்சித் தலைவர்களிடம் வினவியபோது அவர்கள் இவ்வாறு தமது நிலைப்பாடுகளை தெரிவித்தார்கள்.

# ஜனாதிபதியின் கருத்துக்கு தமிழ்த் தலைவர்களின் பதில் என்ன?

## மனோ, செல்வம், சிறீதரன், திஸ்ஸ கூறிய விடயங்கள்



**கலந்துரையாடலுக்கு முன்னர் புலம்பெயர் தமிழர்களின் அமைப்புகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் நீக்கப்படவேண்டும். ஐ.நா பொதுச் சபையில் ஒப்புக்கொண்ட விடயங்களை ஜனாதிபதி நிறைவேற்றுவாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்கவும் தயார். அதற்கு பின்னர் அரசியலில் இருப்பதற்கான தேவையும் இல்லை.**

**தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்**

உள்ளக பிரச்சினைகளுக்கு உள்ளக பொறிமுறைகளில் தான் தீர்வுக்காணப்பட வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் அறிவித்திருந்தார். இந்த நிலைப்பாட்டை கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்கிறேன். இதில் மாறுபட்ட கருத்துக் கிடையாது. எமது பிரச்சினைகளை உள்ளக பொறிமுறைகள் ரீதியாக நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு. இதனை, அரசாங்கம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்கள் கடந்தும் உள்ளநாட்டில் நியாயமான பொறிமுறைகள் வழங்கப்படாமையினாலும், இங்கு நியாயம் கிடைப்பதற்கான அறிகுறிகள் கணிசமாக இருப்பதாலுமே வேறு வழியின்றி சர்வதேச பொறிமுறையை நாடவேண்டிய தேவை உருவாகியுள்ளது.

1950களில் இருந்து தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக தமிழ் மக்கள் நாட்டின் தலைமைகளை சந்தித்து கலந்துரையாடல் நடத்தியபோதிலும், உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படாமல் கிழித்தெரியப்பட்டன. வேறு வழியின்றி தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தயாரானார்கள். ஆயுதம் தூக்கும் விடயத்தில் எமக்கு நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் கூட, 1970 - 1980களில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்குவதற்கு நியாயமான பின்னணி காரணங்கள் இருக்கின்றன.

அந்த நிலைமையே தற்போதுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளிலும் உருவாகியுள்ளன. பிரச்சினைகளுக்கு உள்ளக பொறிமுறையை ஏற்படுத்திக்கொடுக்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்திலேயே ஐ.நா. பிரதிநிதிகள் சமூகத்துடனான தொடர்பாடல் ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் தமிழர்களின் பிரச்சினைகளுக்காக இந்த தொடர்புகள் ஆரம்பிக்கப்படவில்லை. 1980களில் தென் இலங்கை பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்துக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷவே சர்வதேசத்தை நாடினார். தற்போதைய அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, மனித உரிமைகள் செயற்பாட்டாளர் நிமல் பெர்னாண்டோ ஆகியோரே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் சென்றிருந்தார்கள். இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக பொருளாதார தடைகள் விதிக்கப்பட வேண்டுமென சர்வதேசத்திடம் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். நாடாளுமன்றத்தில் இதுதொடர்பில் பெருமையாகவும் பேசியிருந்தார்.

எமது நாட்டிலிருந்த 30 வருடகால யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அப்போதைய ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பெங்கி மூன் இலங்கைக்கு வந்தபோது கூட்டறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அதில், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறப்புக்கூற நடவடிக்கை எடுப்பதாகவும், யுத்தத்துக்கு பின்புல காரணமாக இருந்த தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்காக 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வை காண்பதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எழுத்து மூலமாக ஒப்புக்கொண்டிருந்தார்.

ஜனாதிபதி, இன்று எங்களை பார்த்து குறைக்கூறுவதற்கு பதிலாக தனது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இதுதொடர்பில் கலந்துரையாடி அறிந்துகொள்ள வேண்டும். அதேபோன்று காணாமல்போனவர்களின் பிரச்சினை உணர்வுபூர்வமான பிரச்சினை. பெரும்பாலான தமிழர்கள் உயிருடன் இல்லை என்பது கசப்பான உண்மை தான். அது அனைவரும் அறிந்ததே. இருந்தாலும் கூட அவர்களின் குடும்பங்களும், உறவுகளும் போராடுவதற்கு காரணமொன்று இருக்கிறது. காணாமல்போனவர்களில் ஒரு தரப்பினர் பலவந்தமாக கடத்தப்பட்டு காணாமல்போனார்கள். மற்றையத் தரப்பினர் தமது குடும்பத்தாலேயே இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்கள்.

காணாமல்போனவர்களின் பிரச்சினைகளுக்காக போராடும் குடும்ப அங்கத்தவர்கள் காணாமல்போனோரை திரும்பி கொண்டுவாருங்கள் என்று சொன்னாலும் கூட அதைவிட அதற்கு அப்பால்பட்ட நோக்கமொன்று இருக்கிறது. தமது உறவுகளை கடத்தி கொலை செய்தவர்கள் யார். அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்பவே அந்த உறவுகளின் கோரிக்கையாக இருக்கிறது. அந்த குற்றவாளிகள் யார் என்று கண்டறியப்பட்டால் அவர்களுக்கு மன்னிப்பளிக்கும் பக்குவம் எமது மக்களுக்கு இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

ஆனால், அவர்கள் யார் என்பது கண்டறியப்படவேண்டும். தென்னாபிரிக்காவில் கூட மெய் ஆணைக்குழுவொன்று உருவாக்கப்பட்டு அதனூடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது. இதற்கு மாறாக அனைவரும் வெளிநாடுகளுக்குச் சென்று தஞ்சமடைந்துவிட்டார்கள் என்று கூறி வருகிறார்கள். ஒருசிலர் சென்றிருக்கலாம். ஆனால், காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில அநேகமானவர்கள் பாதிக்கப்பட்டார்கள். 2005 முதல் 2010 வரையில் கொடுமையாக யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் நானும் ரவிராஜ் எம்.பியும். மக்கள் கண்காணிப்பு குழுவொன்றை அமைத்து கடுமையாக போராடினோம்.

அப்போதைய சர்வதேச மனித உரிமையாளர் ஆணையாளரை அழைத்துவந்து முதல் முதலாக காணாமல்போன உறவுகளின் குரல்களை ஒலிக்கச்செய்தோம்.

புலம்பெயர் தமிழர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவது நல்லவிடயமே. அதில் குறைகாண்பதற்கு எதுவும் இல்லை. ஆனால், புலம்பெயர் தமிழ் சமூகத்தின் அமைப்புகளை இந்த அரசாங்கம் பட்டியலிட்டு தடைசெய்துள்ளது. இன்று பேச்சுவார்தை நடத்த எதிர்பார்க்கும் புலம்பெயர் தமிழர்களும் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டவர்களே.

அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமாயின் புலம்பெயர் தமிழர்களின் அமைப்புகளுக்கு இந்த அரசாங்கம் விடுத்துள்ள தடையை நீக்கவேண்டும். நீக்கிய பின்னரே அதுதொடர்பில் பேசவேண்டும். ஜனாதிபதி சர்வதேச ரீதயாக பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்திருந்தாலும், தமது பெயர்களை தடைப் பட்டியலிலிருந்து நீக்கவேண்டுமென புலம்பெயர் அமைப்புகள் ஜனாதிபதியிடம் கூறவேண்டும். அதன் பின்னரே பேச்சுவார்த்தைக்குச் செல்லவேண்டும். தடையை வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைக்குச் சென்றால் இலங்கையிலுள்ள தமிழ் மக்களை பிரதிபலிப்பவர்களா என்ற சந்தேகம் புலம்பெயர் தமிழர்கள் மீது உருவாகிவிடும்.

அவ்வாறே, நீண்ட நாட்கள் சிறைகளில் இருந்து வரும் அரசியல் கைதிகள் நிபந்தனைகளின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள், வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருபவர்கள், விசாரணைக் கைதிகள் என்ற அடிப்படையில் மூன்று விதமான அரசியல் கைதிகள் இருந்து வருகிறார்கள். சுனில் ரத்நாயக்க மற்றும் துமிந்த சில்வா ஆகியோருக்கு கடந்த காலங்களில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. அதேபோன்று, அரசியல் கைதிகளாக இருந்து நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கவேண்டும். அதில் எந்த சிக்கலும் ஏற்படப்போவதில்லை.

அதேபோன்று, வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவரும் அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்குகளை வாப்பஸ் வாங்கிவிட்டு அவர்களை விடுதலை செய்யவும் விசாரணைக் கைதிகளாக இருப்பவர்களை பொலிஸ் விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்து அவர்களை விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் சம்பவத்தின் பின் மீண்டும் அரசியல் கைதிகளின் விவகாரம் தலைத்தூக்கியுள்ளது. தற்செயலாக லொஹானின் துப்பாக்கி வெடித்திருந்தால் 1980களில் இடம்பெற்ற குட்டிமணி உள்ளிட்ட சிலர் கொடூரமாக கொலைசெயயப்பட்ட சம்பவத்துக்கு இணையான ஒரு சம்பவமாக உருவாகியிருக்கும்.

எனவே, ஜனாதிபதி சர்வதேசத்தில் அறிவித்ததை நாட்டில் உண்மையாக நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுப்பாராக இருந்தால் எதிர்த்தரப்பில் இருந்துகொண்டு அவருக்கு ஆதரவளிக்க நான் தயாராக இருக்கிறேன். எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஜனநாயக ரீதியாக தொடர்ச்சியாக போராடிக்கொண்டே இருக்கிறேன். அவ்வாறு அந்த விடயங்கள் நிறைவேற்றப்படுமாக இருந்தால் அரசியலில் இருக்கவேண்டிய தேவை எனக்கு இல்லை. அரசியலிலிருந்து ஓய்வுப்பெற்று சென்றுவிடுவேன்.



**காணாமலாக்கப்பட்டவர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் அவர்களை கொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்வதற்கான யுத்தியாகவே தமிழர்கள் பிரச்சினையை இந்த அரசாங்கம் கையாளுகிறது.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்**

ஜனாதிபதி சர்வதேசத்துக்குச் சென்று பிச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாக கூறியிருந்தாலும், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளவும் பெற்றுக்கொள்ளும் ஒரு யுத்தியாகவே அதனை கருத வேண்டும். புலம்பெயர் அமைப்புகளில் பெரும்பாலானைவை தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் யாருடன் பேச்சுவார்த்தை நடத்த போகிறார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய வேண்டும் என ஜனாதிபதி நினைத்திருந்தால் அதனை அவர் செய்திருக்கலாம். அதனை ஐ.நாவுக்குச் சென்றுதான் கூறவேண்டும் என்றில்லை. வழக்குகள் முடிந்த அரசியல் கைதிகள், பொது மன்னிப்பு வழங்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கு கூட விடுதலை வழங்கப்படவில்லை. ஆனால், ஜனாதிபதியின் உரை அரசியல் கைதிகளை ஒட்டுமொத்தமாக விடுதலை செய்வதாக அமைந்திருக்கவில்லை.

காணாமலாக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமை சட்டங்களின் அடிப்படையில் போரின்போது சரணமடைபவர்கள், போருக்காக ஒப்படைக்கப்படுபவர்கள் மனிதாபிமான முறையில் பேணப்பட வேண்டும். கண்முன்னால் ஒப்படைக்கப்பட்டவர்கள் உறவுகளின் சாட்சியங்களுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு அவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்க வேண்டுமாயின் அவர்கள் உயிரிழந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்கள் படுகொலை செய்துவிட்டார்கள் என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேயே மரணச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும். சகலரையும் கொலை செய்துவிட்டதாக ஐ.நா சபையில் ஜனாதிபதி ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அவ்வாறாயின் கொலை செய்யப்பட்டவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்கக்கப்படுமாக இருந்தால் கொலைசெய்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைக்கப்போகிறது. ஆகவே சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

ஜனாதிபதி நாட்டின் நன்மையை கருதி பொதுவாக பேசுகிறார் என்றால் இந்த விடயத்திலும் அவர் அக்கரை காட்டியிருக்க வேண்டும். ஆனால், அவர் தமிழ் மக்களை ஒரு பொருட்டாக கருதவில்லை. அவர்களது உயிரின் பெறுமதியையும், போராடிக்கொண்டிருக்கும் உறவுகளின் மனக் கிடக்கைகளையும் அவர் கவனத்தில் கொள்ளவில்லை. இந்த பிரச்சினைக்கு உடனடி தீர்வு மரணச் சான்றிதழ் கொடுப்பதும் நட்டஈடு கொடுப்பதும் தான் என்றால் கொலைசெய்தவர்களை என்ன செய்யப்போகிறார்கள். ஆகவே படையினரை பாதுகாக்கவே அவர் முயற்சிக்கறார்.

அவர் கூறுவது போன்று சகலரையும் நடுநிலைமையாக பார்ப்பதாக அறிவித்திருந்தாலும் தன்னை பெரும்பான்மை மக்களே தெரிவுசெய்தார்கள் என்று அடிக்கடி தெரிவிக்கிறார். ஆகவே அதனடிப்படையிலேயே அவரின் செயற்பாடுகள் அமைந்துள்ளது. அவசரகால தடைச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்பன அமுலில் இருப்பதுடன் ஆசிரியர்களுக்கு போராடுவதற்கான ஒரு நியாயமான வழிமுறை இல்லாமல் போயுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள். இவ்வாறான வன்முறைகள் நாட்டில் இருக்கின்ற நிலைமையில் உள்ளக பொறிமுறையில் தீர்வுகாண்பது என்பது ஒட்டுமொத்தமான ஏமாற்று வார்த்தைகள். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்வதற்கான ஒரு யுத்தியாகவே இது அமைந்துள்ளது. ஐ.நா.வை ஏமாற்றுவதே இதன் உள்ளர்த்தம். இறுதிவரை இந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை கையாள்வார் என்ற நம்பிக்கை எமக்கில்லை.



**அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் எப்போதோ விடுதலை செய்திருக்கலாம். ஐ.நாவுக்கு சென்று கூறவேண்டும் என்றில்லை. சர்வதேசத்தை ஏமாற்ற முயற்சிக்கக் கூடாது.**

**இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்**

இலங்கையில் நடந்த 30 வருடகால யுத்தம் வெளிநாடுகளின் உதவியோடும் அவர்களின் ஆயுதங்களை பயன்படுத்தி ஐ.நா.மனித உரிமை நிறுவனங்களை கலைத்துவிட்டு தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் செயத இனப்படுகொலை. இதுவொரு உள்ளக பிரச்சினையல்ல. இது நேரடியாக சர்வதேசத்துடன் தொடர்புபட்ட விடயம்.

உள்ளக பிரச்சினை என்று கூறி சிறிய போத்தலில் முடி கொண்டுபோக முயற்சிக்கக் கூடாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு நினைப்பது மிகப்பெரிய அவலம். இது உலகத்தை ஏமாற்றும் செயல். வெளிநாடுகளிலுள்ள புலம்யெர் தமிழர்கள் வந்து முறைப்பாடு செய்யவும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக கூறுவது “கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன கதை”.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகளிடம் பேசித் தீர்வுகாண முடியாத கோட்டாபய ராஜபக்ஷ புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேசுவதென்பது காலத்தை இழுத்தடிக்கும் செயல்.

அரசியல் கைதிகளை எப்போதோ விடுதலை செய்திருக்கலாம். மரண தண்டனை கைதிகளை விடுதலை செய்யும்போது அரசியல் கைதிகளை விடுதலை செய்வதென்பது பெரிய விடயமல்ல. இதனை சர்வதேசத்துக்கு சென்று பேசவேண்டும் என்ற தேவை இல்லை. தன்னுடைய நல்லலெண்ணத்தை வெளிப்படுத்துவதாக இருந்தால் நேர்மையான அரசியல் தலைவனென்றால் அரசியல் கைதிகளை விடுதலை செய்துவிட்டு சர்வதேசத்தில் போய் சொல்லவேண்டும். இவ்வாறான கருத்துகள் எல்லாம் சர்வதேசத்தை ஏமாற்றும் முயற்சி. நேர்மையான தலைவராக இருந்தால் உடனடியாக அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும்.



**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. இதுதொடர்பில் அழுத்தத்தை பிரயோகிக்க தயாராகவே இருக்கிறோம்.**

**நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண**

புதிதாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கவேண்டும் என்பதே லங்கா சமசமாஜக் கட்சியின் நிலைப்பாடு. அதற்கான கோரிக்கைகளை தொடர்ச்சியாக முன்வைத்து வந்துள்ளோம். அவ்வாறு ஜனாதிபதி சர்வதேசத்துக்குச் சென்று தீர்வு வழங்குவதாக ஒப்புக்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அவற்றை நிறைவேற்றுவதற்கு அழுத்தத்தை பிரயோக்கிக்கவும் எங்களால் முடியும். இந்த விடயத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தலையிட வேண்டும்.

அரசியல் பிரமுகர்களின் கருத்துகள் இவ்வாறு இருந்தாலும் இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற அடிப்படையில் பிரச்சினைகளுக்கும் உடனடி தீர்வை காணவேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறது. தமிழ் மக்களின் இந்த பிரச்சினைகளை தொடர்கதையாக்காமல் விரைவாக முடிவுக்கு கொண்டுவந்து ஒரு சுமூகநிலையை உருவாக்க வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கையாகவும் உள்ளது.

உரையாடல்:
நா. தினுஷா



தொகுப்பு

யோ.தர்மராஜ்

# ஞானசார தேரரும் ஒரு அடிப்படைவாதி

## நீதி அமைச்சர் அலி சப்ரி பேட்டி

**ஏப்ரல் தாக்குதலின் சூத்திரதாரி முஸ்லிம்களின் 'அல்லாஹ்' என்றும் அனைத்து முஸ்லிம்களையும் ஒரு தீவிரவாதிகளைப் போன்று சித்தரித்து ஞானசார தேரர் பேசியதை நான் வன்மையாக கண்டிப்பதுடன், அவருக்கு தற்போது எவ்வித அடையாளமும் இல்லாத காரணத்தினால் இனங்களுக்கிடையில் இனவாதத்தை தூண்டிவிட முயற்சிப்பதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

**வசந்தம் தொலைக்காட்சியில் இடம்பெற்ற 'தீர்வு' நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

**அவருடனான செவ்வி வருமாறு,**

**கேள்வி:** ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்தபோது, காணாமல்போனோர் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மீண்டும் நாட்டுக்கு வருகைத் தர முடியும் போன்ற விடயங்கள் குறித்து கூறினார். இது குறித்து உங்களுடைய கருத்து என்ன?

**பதில்:** தேர்தலின் போது முழு நாட்டுக்குமானதும் மக்களிடையே ஒற்றுமையை கட்டியெழுப்பும் ஜனாதிபதியாகவும் செயற்படுவதாகவே உறுதியளித்தார். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தை மூடிவிடுவோம் என அச்சம் கொண்டனர். ஆனால் நாங்கள் அதனை மேலும் பலப்படுத்தியுள்ளோம்.

குறிப்பாக, கடந்த இரு வருடத்தில் ஒரு பில்லியன் ரூபா நஷ்ட ஈடாக செலுத்தியுள்ளோம். அத்தோடு, கிளிநொச்சியிலும் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தை திறந்துள்ளதோடு, அது என்னுடைய அமைச்சின் கீழேயே உள்ளது. மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு நாங்கள் எங்களால் செய்ய முடிந்ததை செய்தாக வேண்டும்.

இலங்கை என்ற ரீதியில் பல வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். எந்த வேறுபாடுகள் இருந்தாலும் அதனை நிவர்த்தி செய்து இலங்கையர் என்ற ரீதியில் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதனைக் கொண்டே ஜனாதிபதி கூறியுள்ளார். இதனை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி எங்களிடையேயுள்ள இடைவெளியை குறைத்துகொண்டு ஒற்றுமையாக முன்னோக்கிச் செல்வதே எங்கள் முன்னுள்ள சவாலாகும்.

**கேள்வி:** ஜனாதிபதி அவ்வாறு கூறினாலும் புலம்பெயர்ந்தோர் இலங்கைக்கு வருவதற்கு பல தடைகள் மற்றும் அச்சம் இருக்கின்றமைக்கு என்ன தீர்வு?

**பதில்:** நாட்டுக்கு விரோதமாக செயற்படாது எவ்வித சதித்திட்டங்களுக்கும் உள்வாங்காதிருப்போருக்கு நாட்டுக்கு வருவதில் எவ்வித தடைகளும் இல்லை. இதுவரை அவ்வாறு தடைகள் விதிக்கப்பட்டதாக எவ்வித சாட்சியங்களும் இல்லை. இதனால் எவ்விதப் பிரச்சினையும் ஏற்படவில்லை. அதேபோன்று, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் 16 விடுதலைப் புலிகளை விடுதலை செய்துள்ளனர்.

யுத்தத்திற்கு பின்னர் 12 ஆயிரத்து 784 விடுதலைப் புலிகளை புனர்வாழ்வளித்து சமுதாயத்திற்கு அனுப்பியுள்ளோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவர் தடுத்துவைக்கப்பட்டால் 18 மாதங்களுக்கு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்பதுடன் நீதிமன்றத்திற்கும் அதிகாரமிருக்காது. இதனால் இச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்படுவது குறித்து ஆலோசனை குழுவொன்று நியமிக்கப்பட்டதையடுத்து தற்போது வரை 50 இற்கும் அதிகமானோர் அதற்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதால் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

**கேள்வி:** காணாமல்போனார், இன்று நேற்று ஆரம்பித்த பிரச்சினையல்ல. ஒவ்வொரு ஆட்சியிலும் இது தொடர்கின்ற நிலையில், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்கங்களை அமைத்து போராடுவதோடு, என்றோ ஒருநாள் உறவுகள் வருவார்கள் என காத்திருக்கும்போது அவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்குவதை ஏற்றுக்கொள்வார்களா?

இதுவே எங்களுக்குள்ள சவாலாகும். இந்தப் பிரச்சினை வடக்கிற்கு மட்டுமானதல்ல. இராணுவத்திலும் கூட 6 ஆயிரத்து 500 பேர் காணாமல் போயுள்ளனர். இது குறித்து யாரும் பேசுவது கிடையாது. யுத்தமொன்று இடம்பெற்றால் இவ்வாறு நடக்கும். இதனாலேயே, யுத்தமொன்று வராமல் நாங்கள் பாதுகாக்க வேண்டும்.



காணாமல்போனோரின் உறவுகளால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது எங்களுக்கும் புரிகின்றது. எனினும், இதற்கு எங்களிடம் இருக்கும் மாற்று வழி என்ன, மரண சான்றிதழை வழங்க முடியும். அல்லது மரணிக்கவில்லை தற்போது அவர்கள் இல்லை என்ற ஒரு சான்றிதழை வழங்க முடியும். எனினும், அதுவும் ஒரு மரண சான்றிதழைப் போன்றதே. இதனைக் கொண்டு ஓய்வூதியம் மற்றும் அவர்களின் சொத்துகளையும் மீட்க முடியும். அத்தோடு, எங்களுடைய அலுவலகத்திற்கு விண்ணப்பித்து தேவையான உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

காணாமல்போனவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்பதால் ஒரே நிலைப்பாட்டிலிருந்தே கலந்துரையாடுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். எனினும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் இதற்கு ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகள் பல நாடுகளிலும் நடந்துள்ளன. இதனை நாங்கள் தொடர்ந்து இழுத்துக்கொண்டிருக்க முடியாது. மாறாக, ஒரு முடிவுக்கு வர வேண்டும். இராணுவத்தினரும் காணாமலாக்கப்பட்டுள்ள நிலையில் இந்த தீர்வை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும், இதனை குறித்த உறவுகளால் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பது குறித்த வருத்தம் எங்களுக்கு தெரியும். எனினும், இதற்கு ஒரு முடிவு வர வேண்டியுள்ளது.

**கேள்வி:** உள்ளகப் பிரச்சினைக்கு சர்வதேச பொறிமுறை வேண்டாம். உள்ளகப் பொறிமுறையே போதும் என ஜனாதிபதி கூறினாலும் தமிழ்த் தரப்புகளுடன் அரசு பேசுவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாய்ப்புள்ளதா?

சில மாதங்களுக்கு முன்னர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டாலும் கொவிட் தொற்றினால் அது ஒத்திவைக்கப்பட்டது. எனினும், பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தேவையொன்றும் உள்ளது. ஜனாதிபதி நாடு திரும்பியதும் இதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

**கேள்வி:** புதிய அரசியலமைப்பு பற்றி?

**பதில்:** புதிய அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்புகள் அவர்களின் பரிந்துரைகளை முன்வைத்துள்ளன. குறிப்பாக, குறித்த குழுவினால் அனைத்து கட்சிகளுக்கும் தங்களுடைய யோசனைகளை முன்வைப்பதற்கு வாய்ப்பளித்தது. அதன்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தங்களுடைய யோசனையை முன்வைத்துள்ளது. அனைவரின் யோசனைகளையும் முன்வைத்து சிறந்த அரசியலமைப்பை உருவாக்குவதே எங்களுடைய நோக்கமாகும்.

**கேள்வி:** சிறைச்சாலைகளில் இதுவரை எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் இருக்கின்றனர்?

**பதில்:** அரசியல் கைதிகள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களாகவே அடையாளப்படுத்த முடியும். அதன்படி, இதுவரை 26 பேர் இருப்பதாக எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** அநுராதபுர சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியை இராஜாங்க அமைச்சர் ஒருவர் அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக நீதி அமைச்சர் என்ற ரீதியில் அங்கு என்ன நடத்திருக்கும் என விளக்கமாகக் கூற முடியுமா?

**பதில்:** அங்கு என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது. அது தொடர்பாக நான் விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. சம்பவம் நடந்தது உண்மை. இதனால் இது குறித்து மூன்றுக் குழுக்களால் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அதன்படி, புலனாய்வுத் துறையினால் ஒரு விசாரணையும் எச்.ஆர்.சியினால் சுயாதீனமான விசாரணையும் நடத்தப்படுகின்றன.

இதேவேளை, அமைச்சரவையின் அனுமதியுடன் ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையிலும் ஒரு விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. இந்த விசாரணைகளுக்கு பின்னரே என்ன நடந்தது என்பது தெரியவரும். எனினும், சம்பவம் நடந்தது என்பது உண்மை. எனினும், இதனை தமிழர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக என்ன நடந்தது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் கொழும்பு சிறைச்சாலைக்கும் சென்றுள்ளனர். ஆனால், இந்தச் சம்பவத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளுக்கு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. ஒருவேளை, அநுராதபுர சிறைச்சாலையில் அவர்களுக்கு அச்சுறுத்தல் இருந்தால் வேறு இடத்திற்கும் மாற்ற முடியும்.

**கேள்வி:** அநுராதபுர சிறையிலுள்ள தங்களை யாழ். சிறைக்கு மாற்றுமாறு அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை நீங்கள் கனத்தில் எடுத்துள்ளீர்களா?

ஆம். அது தொடர்பாக ஆராய்ந்துக் கொண்டிருக்கின்றோம். எனினும், யாழ். சிறைக்கு மாற்றுவதால் அங்கு சில பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆகவே, தற்போது இதனை பிரச்சினையாக்குவதற்கு விரும்பவில்லை. யாழ். சிறைக்கு அனுப்புதல் மற்றும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக கைதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தால் அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாராகவுள்ளோம்.



- **80 வீதமான ஆசிரியர்களை அச்சுறுத்தியே போராட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளனர்.**
- **அநுராதபுர சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளை யாழ். சிறைக்கு மாற்றுவது பிரச்சினையை ஏற்படுத்தும்.**
- **மரண சான்றிதழ் வழங்குவதைவிட காணாமல்போனோர் பிரச்சினைக்கு மாற்றுவழியில்லை**

**கேள்வி:** ஆசிரியர்களின் போராட்டத்திற்கான தீர்வை அரசாங்கம் வழங்கலாமே?

**பதில்:** 28 வருடங்களாக இருந்த பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது, சம்பளத்தை இரு மடங்காகவும் அதனை ஒரே தடவையில் வழங்குமாறும் கோருகின்றதை எவ்வாறு தீர்ப்பது? 28 வருடங்களாக இருக்கும் பிரச்சினையை தீர்ப்பதற்கு தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்துவது பொருத்தமானதல்ல. நாங்கள் ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கின்றோம். எனினும், அவர்கள் சிந்திக்காது செயற்படுகின்றனர். சில சங்கங்கள் ஆசிரியர்களை பிணைக்கைதிகளாகக் கொண்டு செயற்படுகின்றன. இதனால் அரச பள்ளியில் கற்கும் மாணவர்களே பாதிக்கப்படுகின்றார்கள்.

ஒரு தலைமுறையின் எதிர்காலத்தை இரண்டு வருடங்களுக்கு பின்னோக்கித் தள்ளுகின்றனர். இது சரியா?. இந்த நேரத்தில் இவ்வாறு செய்வது சரியா. 28 வருடங்களாக பொருத்துக்கொண்டிருந்தவர்கள் தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறு செய்வது பொருத்தமானதா?.

கட்டம் கட்டமாக இல்லாது முழுவதுமாக தருமாறு கூறுகின்றனர். 18 வருடங்களாக சும்மா இருந்துக்கொண்டு சம்பளம் பெற்றவர்கள் தற்போதா போராட வேண்டும்? இணையவழி கற்றலிலிருந்து வெளியேறி அரசிடம் சம்பளமும் பெற்றுக்கொண்டு தனியார் வகுப்புகளையும் ஆசிரியர்கள் நடத்துகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபடும் 70 - 80 வீதமான ஆசிரியர்களை அச்சுறுத்தியே போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அழுத்தம் கொடுத்துள்ளனர். இவர்களுக்கு ஒரே தடவையில் கொடுத்தால் ஏனைய சங்கங்களும் இவ்வாறு கோருவர். அவ்வாறு கோரும்போது பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும். ஆகவே, கட்டம் கட்டமாக தருவதாகக் கூறினாலும் அதனை ஏற்றுக்கொள்ளாது மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடுகின்றனர்.

ஆசிரியர்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என்பதை ஏற்கின்றோம். அதற்காக அவர்கள் கேள்வி எழுப்ப உரிமையுண்டு. எனினும், தற்போதைய நிலையில் இவ்வாறு போராடுவது பொருத்தமற்றது. நடுநிலையாக சிந்தித்து செயற்பட வேண்டும். இவ்வாறு மாணவர்களின் கல்வியில் விளையாடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**கேள்வி:** ஏப்ரல் தாக்குதலின் சூத்திரதாரி நீங்கள் வணங்கும் 'அல்லாஹ்' என்றும் அனைத்து முஸ்லிம்களையும் ஒரு தீவிரவாதிகளைப் போன்றும் மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தப்படலாம் என்றும் கலகொட அத்தே ஞானசார தேரர் கூறியது பற்றி உங்களுடைய நிலைப்பாடு என்ன?

**பதில்:** இதனை கடுமையாக கண்டிக்கின்றோம். அவரும் ஒரு அடிப்படைவாதியே. அளுத்கமையில் கலவரம் நடப்பதற்கான முக்கிய நபர். ஆகவே, தற்போதைய சூழ்நிலையில் அவருக்கு இது தேவையற்ற வேலை. அவருக்கு தற்போது எவ்வித அடையாளமும் இல்லாத காரணத்தினால் இனங்களுக்கிடையில் இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கின்றார். இது குறித்து நான் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளதோடு, அரச ஊடகங்களில் அவருக்கு இடம்கொடுப்பது பற்றியும் நான் எதிர்ப்பு தெரிவித்துள்ளேன். இதற்கு எதிராக நான் தொடர்ந்து செயற்படுகின்றேன்.

ஜனாதிபதி ஆணைக்குழுவிலும் சஹ்ரான் போன்ற அடிப்படைவாதிகள் உருவாக்குவதற்கு எதிரிலுள்ள அடிப்படைவாதிகளே காரணம் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே, இதனை நாங்கள் கடுமையாக கண்டிப்பதோடு, அவரிடமிருக்கும் தகவல்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் இவ்வாறான கலவரங்கள் நடந்துள்ளதால் முழு சமூகத்தையும் அடிப்படைவாதிகளாகவும் தீவிரவாதிகளாகவும் சுட்டிக்காட்டுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

**கேள்வி:** நாட்டில், சீனாவின் அபிவிருத்திகளுக்கு மத்தியில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவது குறித்து கவனம் செலுத்தியுள்ளீர்களா?


**பதில்:** இலங்கையில் மூன்று மொழிகளே உத்தியோகபூர்வமான மொழிகளாகும். அதில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் தேசிய மொழிகளாகும். ஆங்கில மொழி இணைப்பு மொழியாகவும் உள்ளது. இந்த மூன்று மொழிகளுக்கு அப்பாலே ஏனைய மொழிகள் இணைக்க வேண்டும். எனினும், எல்லா இடங்களிலும் மொழி புறக்கணிக்கப்படவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்தில் அவ்வாறு நடந்ததும் உடனடியாக மாற்றப்பட்டது. தவறுகள் நடந்தால் அதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

**(நன்றி:- வசந்தம் டி.வி.)**




# ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. இலங்கையின் மிக மதிப்பிற்குரிய நிறுவனமாக 16ஆவது ஆண்டில் சாதனை படைத்துள்ளது

ஆகஸ்ட் 2021இல் எல்.எம்.டியால் வெளியிடப்பட்ட தரவரிசையில், மிக மதிப்பிற்குரிய நிறுவனங்களில், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. (ஜே.கே.எச்.) முதலாம் இடத்தை தக்கவைத்து, 16ஆவது ஆண்டாக சாதனை புரிந்துள்ளது. மேலும், ஜே.கே.எச்., அனைத்து 12 பண்பு தரவரிசைகளிலும் அதாவது நிதி, செயல்திறன், தர உணர்வு, மேலாண்மை சுயவிவரம், நேர்மை, புதுமையாக்கம், தனித்துவம், பெருநிறுவன கலாசாரம், சி.எஸ்.ஆர். மற்றும் பேண்தகைமை, தரிசனம், தேசிய முன்னோக்கு, மனிதவள மற்றும் மக்கள் மேலாண்மை மற்றும் நெருக்கடி மேலாண்மை என்பவற்றில் முதலிடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டது. எல்.எம்.டியால் நியமிக்கப்பட்டு மற்றும் கருத்துருவாக்கம் செய்யப்பட்டு நீல்சன் ஐகியூ நடத்திய கணக்கெடுப்பில், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் மேலாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட




பொறுப்பிலுள்ள 800 பதிலளித்தவர்களின் கருத்துகளின் அடிப்படையில் இலங்கையில் மிகவும் மதிப்பிற்குரிய நிறுவனங்களை வரிசைப்படுத்துவதற்காகவும் அவர்கள் ஏன் அவ்வாறு கருதப்படுகிறார்கள் என்பதை மதிப்பீடு செய்யவும் இக் கணக்கெடுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் எல்.எம்.டியின் மிகவும் மதிப்புமிக்க தரவரிசைகளை அறிமுகப்படுத்தியதில் இருந்து 17 ஆண்டுகளில் ஜே.கே.எச். 16ஆவது முறையாக முதலாவது இடத்தில் உள்ளது. மேலும் அதிக எண்ணிக்கையிலான (1,074) வாக்குகளுடன் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

ஜே.கே.எச்சின் தலைவர் கிருஷான் பாலேந்திரா எல்.எம்.டி. இன் ஆகஸ்ட் 2021 இதழில் தனது பேட்டியில், "எங்கள் மதிப்புகளுக்கு ஏற்ப எங்கள் வணிக செயல்முறைகளை செயல்படுத்த அர்ப்பணிப்புள்ள, புத்தாக்கமுடைய மற்றும் திறமையான தொழில் வல்லுநர்கள் குழுவால் மட்டுமே சிறந்து விளங்க முடியும் என்பதை நாங்கள் அறிவோம். ஒருமைப்பாடு, நம்பிக்கை, முதன்மைநிலை, புதுமையாக்கம் மற்றும் அக்கறை இவை எங்கள் மூன்று அடிமட்ட இலக்குகளை அடைய உதவுகிறது. இந்த முயற்சிகளுக்கு அங்கீகாரம் பெற்றதால், அதிக செயல்திறன் கொண்ட அணிகளை உருவாக்குவது மற்றும் குழு உணர்வு மற்றும் மன உறுதியை மேம்படுத்துவது முக்கியம் என்று நான் நம்புகிறேன். எங்கள் மக்களில் தொடர்ந்து முதலீடு செய்வதன் மூலம் அவர்கள் சிறப்பு அங்கீகாரத்தை பெறுவதற்காக ‘கூடுதல் மைல் தூரம்’ செல்ல ஊக்குவிக்கப்படுவார்கள். எல்.எம்.டியின் மிகவும் மரியாதைக்குரிய நிறுவனங்களில் 16ஆவது ஆண்டாக முதலாவது இடத்தைப் பிடித்ததைக் குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம். மேலும் இந்த அங்கீகாரத்துக்கு ஜோன் கீல்ஸில் உள்ள எங்கள் மக்களின் அர்ப்பணிப்பே காரணம் என்று கூறுகிறோம்." ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. (ஜே.கே.எச்) கொழும்பு பங்குச் சந்தையில் இலங்கையின் மிகப்பெரிய பட்டியலிடப்பட்ட பன்கூட்டு நிறுவனமாகும். இது 7 வெவ்வேறு தொழில் துறைகளில் உள்ள 70 க்கும் மேற்பட்ட நிறுவனங்களை இயக்கி வருகிறது. 150 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட ஜோன் கீல்ஸ் குழுமம் 14ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது மற்றும் எல்.எம்.டி. இதழால் கடந்த 15 ஆண்டுகளாக இலங்கையின் மிகவும் மதிப்பிற்குரிய நிறுவனம் என்று தரப்படுத்தப்பட்டுள்ளது. உலக பொருளாதார மன்றத்தின் முழு உறுப்பினராகவும், ஐ.நா. குளோபல் காம்பாக்ட்டின் பங்கேற்பாளராகவும் இருக்கும் ஜே.கே.எச். தனது சமூக பொறுப்புணர்வு பார்வையை "நாளைக்கு தேசத்தை மேம்படுத்துதல்" என்ற ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை மூலமாகவும், இலங்கையில் பிளாஸ்டிக் மாசுபாட்டைக் கணிசமாகக் குறைப்பதில் வினையூக்கியாக செயல்படும் பிளாஸ்டிக் சைக்கிள் எனும் சமூக தொழில்முனைவோர் முயற்சி மூலமாகவும் இயக்குகிறது.

# Galaxy Z Fold3 5G மற்றும் Galaxy Z Flip3 5Gஇன் Brand Ambassador யொஹானியுடன் ஒப்பந்தம் செய்யும் Samsung

Samsung இலங்கையின் No 1 Smartphone brand அதன் பிரிமீயம் Galaxy Z series Foldable Smartphoneகள், Galaxy Z Fold3 5G, Galaxy Z Flip3 5G மற்றும் அனைத்து எதிர்கால வெளியீடுகளின் இலச்சினை தூதுவராக (Brand Ambassador) இசைக்கலைஞரும் இளைஞர் மத்தியில் புகழ்பெற்றவருமான யொஹானி டி சில்வாவுடன் கைச்சாத்திட்டுள்ளது.

யொஹானி ஒரு பாடகி, பாடலாசிரியர், rapper மற்றும் பல இசைக்கருவிகளை வாசிப்பவர். ((Piano, guitar, trumpet மற்றும் ukulele) pop, rhythm & blues, hip-hop போன்றவற்றில் தீவிரமாக கவனம் செலுத்துபவர். Youtube இல் ஒரு பில்லியன் Subscribers களைக் கடந்த முதல் உள்நாட்டுக் கலைஞரும் இவரேயாவார்.

வியக்க வைக்கும் Galaxy Z Fold3 5G மற்றும் Galaxy Z Flip3 5G Smartphone களின் வடிவமைப்பு புதிய தொழில்நுட்பம் மற்றும் மடிக்கக்கூடிய தன்மை ஆகியன நுகர்வோருக்கு மறக்க முடியாத புதிய அனுபவத்தைத் தருகிறது. அத்துடன் Galaxy Z Fold3 மற்றும் Galaxy Z Flip3இன் large screen வேலை செய்வதற்கும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் தனித்துவமானதாகும்.

Galaxy Z Fold3 5G மற்றும் Galaxy Z Flip3 5G ஆகியவற்றின் புதுமையான வடிவமைப்பு, தோற்றம் போன்றவை நுகர்வோருக்கு மென்மையான Smartphone அனுபவத்தைக் கொடுக்கிறது. Gen Z மற்றும் ஆயிரக்கணக்கான நுகர்வோர் மத்தியில் யொஹானியின் மகத்தான புகழ் அவர்களுடனான எங்கள் பிணைப்பை வலுவாக்க உதவும்.

யொஹானி: Samsung இன் புதிய Foldable தொலைபேசிகள் நேர்த்தியாகவும் சுவாரஸ்யமான வண்ணங்களிலும் வருகின்றன. நான் அதன் Camera மற்றும் large cover screenஐ விரும்புகின்றேன். இவ் மடிக்கக்கூடிய தொலைபேசிகள் மிகவும் கச்சிதமாகவும் கையடக்கமாகவும் உள்ளன.



இந்த புதுமையான பயணத்தில் நானும் ஒரு நபராக இருப்பது மகிழ்ச்சியாகும். Samsungஇன் விளம்பர நடவடிக்கைகள் மற்றும் தகவல்கள் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என கூறினார்.

Kevin SungSu YOU: இலங்கைக்கான Samsung இன் நிர்வாக இயக்குநர், இலங்கையில் எங்கள் Foldable விளம்பரத்திற்காக youth icon யொஹானி டி சில்வாவுடன் கூட்டுச்சேர்ந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். அடுத்த சந்ததியினருக்கு Foldable Smartphone களுக்கு முக்கிய கவனம் செலுத்த இது வழிவகுக்கும். எங்கள் புத்தாக்கங்களுடனான முதன்மை தயாரிப்புகளின் இயல்புகளுக்கு ஏற்றவொரு brand ambassadorஐ தேடிக் கொண்டிருந்தோம். யொஹானியின் ஆளுமை சரியாகவே பொருந்துகின்றது. இவருடன் சேர்ந்து இலங்கைக்கு சிறந்த Foldable தொழில்நுட்பத்துடனான உற்பத்திகளை வெளியிட ஆவலாக இருக்கிறோம் என கூறினார்.

யொஹானி டி சில்வா ‘Foldable தொழில்நுட்பத்தை இலங்கைக்கு கொண்டு வரும் முயற்சியில் Samsung உடன் இணைந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். Samsung இலங்கைக்கு அதிநவீன மற்றும் முதன்மை தொழில்நுட்பத்தைக் கொண்டு வருகிறது. அதன் ஒரு பாகமாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்’ எனக் கூறினார்.

Samsung இலங்கையின் முதல் Foldable Smartphone ஐ அறிமுகப்படுத்தி வரலாற்றை உருவாக்கியுள்ளது. Z Fold3 5G மற்றும் Galaxy Z Flip3 5G இலங்கையின் முதல் Samsung Foldable சாதனம் புதுமையான வடிவமைப்பின் கலவையாகும். அதன் Ultra Thing Glass (UTG) மற்றும் hideway hinge தொழில்நுட்பம் பாராட்டக் கூடியது. இவ் Galaxy Z Fold3 5G மற்றும் Galaxy Z Flip3 5G தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளில் ஒரு மைல்கல்லாகும். இது குறிப்பிட்ட அளவிலேயே இலங்கைக்கு கொண்டுவரப்படுவதால் முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

Galaxy Z Fold3 5G மற்றும் Galaxy Z Flip3 5G அங்கீகரிக்கப்பட்ட Samsung விநியோகஸ்தரிடமும் John keels office Automation மற்றும் Softlogic Retail, Singer, Singhagiri மற்றும் Damro Network Partner Dialog, mobitel மற்றும் Samsung EStore (samsungsrilanka.lk) ஆல My Softlogic.lk மற்றும் Daraz.lk, Keells Super மற்றும் Kapruka.com இணையத்தளங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கையின் Samsung most Love Electronic Brandஆக தொடர்ச்சியான மூன்று வருடங்கள் Brand Finance Lankas நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் No 1 Smartphone Brand Samsung அனைத்து வயதினரிடமும் குறிப்பாக Gen Z மற்றும் millennial பிரிவுகளில் உள்ளது.

# இலங்கை - பங்களாதேஷ் கொமர்ஷல் வங்கிகளை கௌரவித்துள்ள ஐக்கிய இராச்சியத்தின் ‘குளோபல் பிஸ்னஸ் அவுட்லுக்’

2021இல் இலங்கையின் ‘தலைசிறந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை பிரிவு (SME) வங்கி’யாகவும் பங்களாதேஷின் ‘தலைசிறந்த வெளிநாட்டு வங்கியாகவும்’ கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் செயற்படும் குளோபல் பிஸ்னஸ் அவுட்லுக் (GBO) சஞ்சிகையே கொமர்ஷல் வங்கிக்கு இந்தக் கௌரவத்தை வழங்கியுள்ளது. உலகின் பல்வேறு தொழில்துறை வர்த்தகங்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த சஞ்சிகை வருடாந்தம் இவ்வாறான விருதுகளை வழங்கி வருகின்றது.

குளோபல் பிஸ்னஸ் அவுட்லுக் சஞ்சிகையால் கொமர்ஷல் வங்கிக்கு இவ்வாறான விருது வழங்கப்பட்டுள்ளமை இது நான்காவது தடவையாகும். 2020இல் இலங்கையின் தலைசிறந்த வர்த்தக வங்கியாகவும் தெரிவு செய்யப்பட்டது. அதேபோல் அதே ஆண்டு பங்களாதேஷின் தலைசிறந்த வெளிநாட்டு வங்கியாகவும் கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டது.

நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர பிரிவு தொழில்முயற்சிகள் இன்று எதிர்நோக்கியுள்ள தேவைகளை சரியான காலப்பகுதியில் உணர்ந்து அவற்றுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கி அவற்றுக்குப் பொருத்தமான உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் கொமர்ஷல் வங்கி மேற்கொண்ட முயற்சிகளுக்கான ஒரு அங்கீகாரமாக கொமர்ஷல் வங்கிக்கு ‘தலைசிறந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை பிரிவு வங்கி’ என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை கொமர்ஷல் வங்கியின் பங்களாதேஷ் கிளைக்கு அந்த நாட்டின் ‘தலைசிறந்த வெளிநாட்டு வங்கியாகவும்’ விருது வழங்கப்பட்டமைக்கு அந்த வங்கியில் புதிய கணக்குகள் திறக்கப்பட்டமை, வைப்புகள் மற்றும் முற்பணங்கள், கூட்டாண்மை பிரிவுக்கு வழங்கப்பட்ட சேவைகள், தனியார் வங்கிப்பிரிவு வாடிக்கையாளர்கள், புதிய உற்பத்திகள், பங்களாதேஷ் சந்தையில் வங்கியின் இணைய வழி சேவையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி என்பன காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ரெங்கநாதன் இந்த விருது பற்றி கருத்து வெளியிடுகையில், “இலங்கை மற்றும் பங்களாதேஷ் வங்கிகளுக்காக கிடைத்துள்ள விருதுகள் எம்மை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளன. குறிப்பாக SME பிரிவுக்கு நாம் வழங்கும் ஆதரவுக்காக இந்த விருது கிடைத்துள்ளமை அதிலும் குறிப்பாக இந்த நோய்ப்பரவல் தாக்கம் உள்ள காலத்தில் மிகவும் கஷ்டமானதோர் பொருளாதார பயணத்தின் கீழ் எமக்கு இந்த விருது கிடைத்துள்ளமை மிக்க மகிழ்ச்சி அளிக்கின்றது. நல்ல காலங்களிலும் சரி அல்லது கஷ்டமான காலப் பகுதியிலும் சரி நாம் அவர்களோடு

COMMERCIAL BANK

இருந்திருக்கின்றோம். அவ்வாறே தொடர்ந்தும் இருப்போம் என்பது இதன் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பங்களாதேஷிலும் மீண்டும் ஒரு தடவை அந்த நாட்டின் சிறந்த வெளிநாட்டு வங்கி என்ற அந்தஸ்தை நாம் தக்கவைத்துள்ளோம். அது மிகவும் போட்டிமிக்க ஒரு சந்தையாகும்” என்று கூறினார்.

2020இல் SME பிரிவுக்கான தனது அர்ப்பணத்தில் கொமர்ஷல் வங்கி உலகளாவிய நோய்ப்பரவல் நிலையின் கீழ் பாதிக்கப்பட்ட இந்தப் பிரிவுக்கு தேவையான ஆதரவை வழங்கியுள்ளது. கணிசமான அளவு கொவிட்-19 கால ஆதரவுக் கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஆண்டின் முடிவுப் பகுதியில் பல்வேறு வகையான நிவாரணத் திட்டங்களின் கீழ் பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்கு தொழிற்படு மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் கட்டாய உதவித் திட்டமான “சௌபாக்கியா கொவிட்-19 மீள் எழுச்சி வசதிகள்” திட்டத்தின் கீழும் வங்கியின் சொந்த கடன் திட்டங்களின் கீழும் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

SME பிரிவு வங்கிச் சேவைக்கான தனது பரிமாற்ற செயற்பாட்டை கொமர்ஷல் வங்கி 2020இல் பூர்த்தி செய்துள்ளது. மத்திய மயப்படுத்தப்பட்ட கடன் செயற்பாட்டு அலகும் இதில் அடங்கும். இந்த முறைமையானது கொமர்ஷல் வங்கிக்கு SME பிரிவுக்கு இலங்கையில் உள்ள தனியார் வங்கிகளில் ‘சௌபாக்கியா’ திட்டத்தின் கீழ் மிகப் பெரிய அளவிலான உதவிகளை செய்த வங்கி என்ற இடத்தை வழங்கியுள்ளது.

இலங்கையில் முழுவதும் காபன் நடுநிலையான முதலாவது வங்கியான கொமர்ஷல் வங்கி, உலகின் முதல் ஆயிரம் வங்கிகள் என்ற பட்டியலில் இடம்பிடித்த இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகவும் அப்பட்டியலில் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் இடம்பிடித்த இலங்கையின் ஒரே வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கி, இலங்கையில் 268 கிளைகளையும் 931 தானியங்கி வங்கி இயந்திரங்களையும் (ஏ.டி.எம்) கொண்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது. வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகள், 19 கிளைகளைக் கொண்டுள்ள பங்களாதேஷை உள்ளடக்குகின்றன. அதேபோல், மியன்மாரின் நேய்பியுடோவில் நுண்நிதி நிறுவனமொன்றையும், மாலைதீவில் முழுமையான செயற்பாடுகளைக் கொண்ட முதல் வரிசை வங்கியொன்றை பெரும்பான்மை பங்குரிமையோடு வங்கி கொண்டுள்ளது.

# கட்டணம் செலுத்துவதை வலுப்படுத்துதல் மற்றும் பயோமெட்ரிக் அம்சங்கள் அடங்கிய SOLO சேவை வசதிகளை மேம்படுத்தும் HNB



இலங்கைக்குள் டிஜிட்டல் வங்கி செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக HNB முன்னெடுக்கும் முயற்சிகளின் மற்றுமொரு விசேட மைல்கல்லான தமது முதன்மை மொபைல் தொலைபேசி கட்டணம் செலுத்தும் செயலியான HNB SOLO தொடர்பில் புதிய கட்டணம் செலுத்தும் திறன் மற்றும் பயோமெட்ரிக் அம்சங்களை உள்ளடக்குவதன் மூலம் அந்த சேவையை மேலும் மேம்படுத்தியுள்ளது.

HNB SOLO செயலியின் இந்த சமீபத்திய மேம்பாட்டின் மூலம் வங்கிப் பாவனையாளர்களுக்கு குடிநீர் மற்றும் மின்சார கட்டணங்கள் முதல் தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி மற்றும் இன்டர்நெட் கட்டணங்கள், மற்றும் SOLO மூலம் காப்புறுதித் தவணைகள் ஆகியவற்றை விரைவாகவும் எளிதாகவும் செலுத்தும் திறனை வழங்குகிறது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த வாடிக்கையாளர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பிரதிப் பொது முகாமையாளர் சஞ்ஜேய் விஜேமன்ன, தற்போதைய சூழலில் வாடிக்கையாளர்கள் தங்கள் அன்றாட பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள எளிதான மற்றும் பாதுகாப்பான கட்டண முறையை வழங்குவது அவசியம். இந்த பங்கை நிறைவேற்றுவதற்காக SOLO மிக எளிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் நன்மைகளை அனுபவிக்க அல்லது டிஜிட்டல் மற்றும் QR குறியீடுகளின் அடிப்படையில் பணம் செலுத்துவதற்கு SOLO உடன் இணைந்த வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகர்களில் விரைவான அதிகரிப்பை நாங்கள் ஏற்கனவே பார்த்திருக்கிறோம்.

கட்டணம் செலுத்துகையில் எமது புதிய அம்சங்களை உள்ளடக்கியதுடன், SOLOவை பாவனையாளர்கள் தேர்வு செய்வதற்கும் பயன்படுத்துவதற்கு இலகுவாக்குவதற்காகவும் நாங்கள் அதிகமான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளோம். அதுபோலவே நிதி நிர்வாகம் குறித்து என்றுமில்லாதவாறு புதிய அனுபவத்தையும் அதனுடன் அவர்களுக்கு வழங்குகின்றோம். இது HNB SOLO இன் புதிய விசேட மைல்கல்லாக அமைவதுடன் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காகவும் எடுக்கும் முக்கியமான எதிர்கால நடவடிக்கையாகவும் கருத முடியும் என அவர் தெரிவித்தார்.

இந்த புதிய மேம்பாடுகளில் பயோமெட்ரிக் பாதுகாப்பு அமைப்பு அடங்கும். பாவனையாளர்களுக்கு, முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பம் மற்றும் கைரேகை சரிபார்ப்பு தீர்வுகள் சேர்க்கப்பட்டுள்ளன. கூடுதலாக வாடிக்கையாளரின் விருப்பப்படி பயன்படுத்தக்கூடிய நான்கு இலக்க கடவுச்சொல் தேர்வும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

தினசரி அடிப்படையில் தங்கள் கணக்கில் இருந்து வெளியேற விரும்பாத வாடிக்கையாளர்கள் 60 நாட்கள் தங்குவதற்கான விருப்பத்தையும் வங்கி வழங்குகிறது. இந்த SOLO செயலி HNB வாடிக்கையாளர்களுக்கு மட்டுப்படுத்தப்படாததால், எவரும் தங்கள் சேமிப்பு / நடப்புக் கணக்கு மற்றும் டெபிட் ஃகிரெடிட் கார்டுகளைப் பதிவு செய்து SOLO இல் கிடைக்கும் வசதிகளை அனுபவிக்கலாம்.




# விநோதமான தற்செயல் நிகழ்வுகள்



வரலாற்றில் பல சுவாரஸ்யமான தற்செயல்கள் நிகழ்வுகள் உள்ளன. அதில் மிகவும் பிரபலமானது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான லிங்கன்/கென்னடி ஒற்றுமைகள்.

ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியான வருடம் - 1860

கென்னடி ஜனாதிபதியான வருடம் - 1960 சரியாக நூறு வருடங்கள்.

இருவருமே நீக்ரோக்களின் விடுதலை சார்ந்த சிந்தனை உடையவர்கள்.

இருவரும் தமது 30களில், 20களைக்கொண்ட பெண்களை மணந்துகொண்டவர்கள்.

இருவரின் மனைவியரும் வெள்ளை மாளிகையில் வாழும்போது பிள்ளை பெற்று, பிறந்ததும் இறந்தது.

லிங்கன், கென்னடி இருவரும் தலையின் பின் பகுதியில் சுடப்பட்டு இறந்தார்கள்.

இருவருமே அமெரிக்காவின் தென் மாநிலங்களை சேர்ந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இருவருமே வெள்ளிக்கிழமை தத்தம் மனைவிகளின் அருகில் இருக்கும்போது, சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

லிங்கன் இறந்தது Ford அரங்கத்தில். கென்னடி இறந்தது லிங்கன் என்ற காரில். அந்த காரை தயாரித்தது Ford மோட்டார் கம்பெனி.

இருவருக்கு பின் பதவி ஏற்றவர்கள் பெயரும் ஜோன்சன் என்று முடியும். ஆண்ட்ரு ஜோன்சன், லிண்டன் ஜோன்சன்.

ஆண்ட்ரு ஜோன்சன் பிறந்தது - 1808

லிண்டன் ஜோன்சன் பிறந்தது - 1908 . சரியாக நூறு வருடங்கள்.

ஆண்ட்ரு ஜோன்சன், லிண்டன் ஜோன்சன் இருவருமே அமெரிக்காவின் தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

லிங்கனை கொன்றது ஜோன் வில்க்ஸ் பூத். கென்னடியை கொன்றது லீ ஹார்வி ஆஸ்வால்டு. இரண்டு பெயர்களும் ஆங்கிலத்தில் 15 எழுத்துகள்.

பூத், லிங்கனை அரங்கத்தில் கொன்றுவிட்டு ஒரு கிடங்கு நோக்கி ஓடினான். ஆஸ்வால்டு, கென்னடியை ஒரு கிடங்கிலிருந்து கொன்றுவிட்டு தியேட்டர் நோக்கி ஓடினான்.

லிங்கன், கென்னடி இரண்டு பெயர்களும் ஆங்கிலத்தில் 7 எழுத்துகள்.

ஆண்ட்ரு ஜோன்சன், லிண்டன் ஜோன்சன் ஆங்கிலத்தில் 13 எழுத்துகள்.



# நல்லது செய்ததால் வந்த வினை

ஒரு விவசாயி நல்ல அறுவடை காண்பதற்காக தன் வயலை விதைத்து நாற்றுகள் முளைத்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். நல்ல அறுவடை காணலாம் என எண்ணி விவசாயி வயலை கவனிக்காமலே விட்டுவிட்டார். அப்படியிருக்கையில், ஒருநாள் அந்த விவசாயியின் உறவுக்காரர் அந்த வழியே சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த உறவுக்காரர் வயலை எதிர்பாராதவிதமாக திரும்பிப்பார்த்தார். அங்கே நாற்றுகளை விட களைகளே அதிகமாக தெரிந்தன. உடனே அந்த உறவுக்காரர் நல்ல நோக்கத்துடன் களைகளை பிடிங்கி வீசி தன் உறவுக்காரருக்கு உதவலாமென வயலில் இறங்கினார்.

அப்படி பிடிங்கிவிட்டு அவர் வீட்டுக்கு போய்விட்டார். பின்னால் கால்நடைகள் வயலை நாசம் செய்துவிட்டன. இதனையறிந்த வயல் சொந்தக்காரர் என்ன நடந்திருக்குமென கவலைப்பட்டு சோர்ந்துபோனார்.

அப்படியிருக்கையில் அவரது உறவுக்காரர் வந்தார். என்ன நீ இப்படி இருக்கிறாய்? ஏன் சோர்வாக இருக்கிறாய்? எனக் கேட்டார். வயல் நாசம் பண்ணி கிடக்குது யாரோ தெரியல என்றார். நாசம் பண்ணிக்கிடக்கிறதா. இருக்காதே நான்தான் களைகளை கண்டு பிடிங்கிவிட்டேன். இன்னும் நிறைய இருக்கிறது. காலையில் உன்னிடம் சொல்லலாம் என்றுதான் வந்தேன் என்றார் அந்த உறவுக்காரர்.

ஆவேசம் பொங்கியெழுந்த வயல்காரர் உறவுக்காரரின் சட்டையைப் பிடித்து, பொறாமை பிடித்தவனே நான் நல்லா இருப்பது உனக்கு பிடிக்கலயா? ஏன் என் வயலை நாசம் செய்தாய் என்று கத்தினார்... திட்டினார்...

உறவுக்காரருக்கோ அதிர்ச்சியாகிவிட்டது. நாசம் செய்தேனா, என்ன சொல்கிறாய்? நான் களைகளைத்தானே பிடுங்கினேன். உனக்கு உதவலாமென எண்ணித்தான் வயலில் கால் வைத்தேன் என்றார்.

பொய் சொல்லாதே... நான் நல்ல அறுவடை காணக்கூடாதென நீ என் வயலை நாசம் செய்துவிட்டாய். இங்கிருந்து நீ வெளியேறு. இனி என் முகத்திலும் முழிக்காதே என்று கத்தி கூப்பாடு போட்டார். வயல்காரரின் குடும்பத்தாரும் அவரை அவமானப்படுத்தி திட்டி அனுப்பிவிட்டார்கள்.

இடிவிழுந்தாற்போல அந்த உறவுக்காரர் மெல்ல நகர்ந்தார். வயலையும் எட்டிப்பார்க்கப் போனார். அங்கே ஒருவர் இருந்தார் அவரிடம் விசாரித்தபோதுதான் தெரிந்தது. கால்நடைகள் வயலை நாசம் செய்தன என்று.... புன்னகைத்தபடி நல்லது செய்தேன், பொல்லாப்பாய் என் தலையில் இப்படி ஒரு இடி விழுந்ததே ஆண்டவா. ஒரு உறவுக்காரராக என் கடமையை செய்ய நினைத்தது தவறா?... என மனதினுள் முணுமுணுத்தபடி நடந்தார்.

(நிஸா இஸ்மாயில்
மருதமுனை)

## தமிழ்ப் பெயர்கள் அறிவோம்

1. Twitter — கீச்சகம்
2. Telegram —தொலைவரி
3. Skype — காயலை
4. Bluetooth — ஊடலை
5. WiFi — அருகலை
6. Hotspot — பகிரலை
7. Broadband — ஆலலை
8. Online — இயங்கலை, நேரலை
9. Offline — முடக்கலை
10. Thumbdrive — விரலி

## பொன்மொழிகள்

* கிணற்றில் தவறி விழுந்துவிட்டது பற்றி வருத்தப்பட வேண்டாம். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நிம்மதியாகக் குளித்து விட்டு வா.

* சின்ன விடயங்களை கண், காது, மூக்கு வைத்து ஒன்றுக்கு ஒன்பதாக்கும் பழக்கத்தை மனிதர்கள் கனவுகளிடம் இருந்துதான் கற்க வேண்டும். ஏனெனில், உணர்வுகளை கனவுகள் மிகைப்படுத்திக் காட்டும்.

* புத்தகம் இல்லாத வீடு – ஆன்மா இல்லாத கூடு.

* எல்லாத் துயரங்களையும் ஆற்றிவிடும் சக்தி காலத்திற்கு இருக்கிறது.

* தன் குற்றம் மறப்பதும் பிறர் குற்றம் காண்பதுமே முட்டாள்தனத்தின் விசேட குணம்.

* ஒரு நூலகத்தையும், ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவருக்கு வேறெதுவும் தேவையில்லை

* இன்ப வாழ்வுக்கு வழி அமைதி.

* எவருக்கும் நீங்களாக போய் அறிவுரை சொல்லாதீர்கள். நீங்கள் அழைக்கப்பட்டால் தவிர எதிலும் தலையிடாதீர்கள்.

* வேத புத்தகங்களைப் படித்தால் மட்டும் போதாது. அதன்படி ஒட்டி ஒழுகுவதன் மூலமே வேதாந்தம் காட்டும் பாதையை அடையலாம்.

* கோபத்தை வெற்றிகொள்வதற்கு ஒரே வழி, அதைத் தாமதப்படுத்துவது.

* அதிர்ஷ்டம் வீரனை கண்டு அஞ்சுகிறது. கோழைகளை திணறடிக்கிறது.



# விண்வெளியில் சூரியனுக்கு ஒட்சிசன் எங்கே இருந்து கிடைக்கிறது?

சூரியனில் அணுக்கரு இணைவு என்ற வேதி வினை நடைபெறுகிறது.

இந்த அணுக்கரு இணைவு முறையில் இரண்டு அணுக்களுக்கு நடுவில் ஏற்படும் அதீத “ஈர்ப்பு விசை”யால் அவை ஒன்றோடொன்று இணைந்து ஒரு பெரிய அணுவை உருவாக்கும்.

இவ்வாறு இணையும் முறைக்கு ஒட்சிசன் தேவையில்லை. ஆனால், இவ்வாறு இணையும்போது வெப்பம் அதிகளவில் வெளியிடப்படும். இப்போது உதாரணத்துக்கு ஒரு விடயத்தைப் பற்றி பார்ப்போம்.

இப்போது நீங்கள் ஒருவருடன் மல்லுக்கட்டி நிற்கிறீர்கள். அப்படி நிற்கும்போது இருவரும் தத்தமது முழு பலத்தை உபயோகித்து ஒருவரை ஒருவர் நன்கு தள்ளுகிறீர்கள். அப்படி மல்லுக்கட்டும்போது உங்கள் உடல் மெதுவாக வெப்பமடையும்.

அப்படி வெப்பமடையும்போது உடலில் இருந்து வியர்வை வெளியேறும். இந்த வியர்வை நீங்கள் மல்லுக்கட்டும்போது உங்கள் உடலுக்குள் எரிக்கப்படும் கலோரிகளின் வெப்பம் வியர்வையாக வெளியேறுகிறது.

அதேபோல்தான் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அணுக்கள் சூரியனில் அதிக அழுத்தத்தில் இணையும்போது வெளிப்படும் அதீத வெப்பம் நெருப்பாக தீப்பிடித்து எரிகிறது. இந்த வினைக்கு ஒட்சிசன் என்ற ஒன்று தேவையில்லை.

1. pH மதிப்பு 7 ஐ விட அதிகமாக இருந்தால் அக்கரைசல்?

*காரத்தன்மையுடையது*

2. நம் பற்களிலுள்ள எனாமல் எந்த சேர்மத்தினாலானது?

*கல்சியம் பொசுபேற்று*

3. பசால்ட் மற்றும் கிரானைட் இரண்டும் எந்த வகை பாறையை சார்ந்தது?

*தீப்பாறை*

4. பறவைத்தீவு என அழைக்கப்படுவது எது?

*நியூஸிலாந்து*

5. வலிமை குறைந்த அமிலங்கள் எவை?

*கரிம அமிலங்கள்*

6. கார் மின்கலன்கள் மற்றும் பல சேர்மங்களைத் தயாரிப்பதில் பயன்படுவது?

*கந்தக அமிலம்*

7. சூரிய ஒளி பூமியை வந்தடைய எடுத்துக்கொள்ளும் நேரம்?

*8 நிமிடங்கள்*

8.வீட்டிற்கு ஒரு பியானோ உள்ள நாடு எது?

*இங்கிலாந்து*

9. நமது கால் பாதங்களில் எத்தனை எலும்புகள் இருக்கின்றன?

*16 எலும்புகள்*

10. போலியோ தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?

*ஆள்பர்சேலின்*




# உலகின் மிகப்பெரிய பூனை

உலகின் மிகப்பெரிய பூனை என்பது இரு வழிகளில் தீர்மானிக்கப்படுகின்றது. ஒன்று, அதன் மூக்கிலிருந்து வால் வரைக்குமான நீளத்தை அளந்து மிகப்பெரியது எது என்று அறிகிறார்கள். இரண்டாவது, அதன் தோளிலிருந்து கால் பாதம் வரையிலான அளவை உயரமாக கணிக்கும் முறை. அப்படிப் பார்க்கும்போது வீட்டில் வளர்க்கும் Mymains Stewart Gilligan என்ற 4 அடிக்கு 48.5 inches long (123cm) அதிகமான நீளமான பூனைதான் உலகின் மிகப்பெரிய பூனை.

இது இறந்துவிட்டதால் வாழ்ந்துகொண்டிருக்கும் இத்தாலியின் 120 cm நீளமான Barivel என்ற பூனைதான் இப்பொழுது உலகில் மிகப்பெரிய பூனை.



# பறை ஆட்டம்

பறை ஆட்டம் என்பது தமிழர்களின் பாரம்பரியமான நடனமாகும். பறையாட்டம் உணர்ச்சிமிக்கது. மற்றும் எழுச்சி மிகுந்தது. அதிர்ந்தெழும் பறையின் ஓசைக்கேற்ப ஆடக்கூடியது என்பதால் பறையாட்டம் கிளர்ந்தெழும் உடல் அசைவுகளைக்கொண்டது. ஆதி மனித சமூகம் தங்கள் கூடுதலுக்காகவும், தங்கள் குழுவுக்கு ஆபத்துகளை உணர்த்தவும், விலங்குகளிடமிருந்து தங்களை தற்காத்துக்கொள்ளவும் எழுப்பிக்கொண்ட சத்தம்தான் பறையாட்டத்தின் மூலம் எனக் கருதப்படுகிறது.

ஆவேசம், மகிழ்ச்சி, உற்சாகம் என உணர்ச்சிகளை எழுப்பி, கேட்போரை ஒரே நேர்க்கோட்டில் இணைக்கும் சக்தி வாய்ந்தது இது. பறை என்ற இசைக்கருவியை இசைத்து ஆடப்படுவதால் இது பறையாட்டம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு போர் இசைக்கருவியாகும். போர்ப்பறை என்றும் அழைக்கிறார்கள்.

விலங்குகளைக் கொன்று, தின்று மிஞ்சிப்போகும் தோலை எதிலேனும் கட்டிவைத்து, காயவைத்து மனம் போனபோக்கில் அடித்து ஆடிய ஆட்டந்தான் காலப்போக்கில் கலை வடிவமாகவும், வாழ்வியல் உணர்ச்சிகளை உணர்த்தும் சத்தமாகவும் மாறி, திருமணம், இறப்பு, சிறு தெய்வ திருவிழா நிகழ்வுகள் என மக்களின் அன்றாட வாழ்க்கையின் அத்தனை சுக துக்கங்களிலும இடம்பெறும் கலையாகியது.

ஆரிய வருகைக்குப் பின் வருணாசிரம சமூக அடிப்படை மேலோங்கிய தருணங்களில் கடினமான, இசைக்கச் சிரமமான இசைக்கருவிகளை பிறருக்கும், இலகுவான இசைக்கருவிகளை தங்களுக்குமாக மேலாதிக்கவாதிகள் பிரித்துக்கொண்டனர். மேலும் தொழில் சார்ந்த சாதியக் கோட்பாடு, கலை நிகழ்த்துவோரையும் சாதி சார்ந்து பிரித்து வைத்தது. அதன்படியே ஆதி திராவிட தமிழர்களின் கலையாக பறையாட்டம் ஒதுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்கள் எனச் சொல்லி பலநூறு ஆண்டுகள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட சமூகங்கள், உரிய கல்வி கிடைக்காமல், நாகரீக நீரோட்டத்தில் இணைய முடியாமல் தவித்த தருணங்களில், அவர்களின் வாழ்க்கை முறையையே காரணமாகக் கூறிய நவீன சமூகம், அவர்களின் வாழ்வோடு கலந்திருந்த பறையாட்டத்தை சாவுமேளம், தப்பாட்டம் என முத்திரை குத்தியது.

ஒரு கட்டத்தில் பறையடித்தல் என்பது சாதியக் குறியீடாகவும், அடிமைத்தனத்தின் அடையாளமாகவும் மாறிவிட, அச்சமூகத்தின் விடுதலை வேட்கை கொண்ட இளைஞர்கள் பறையடித்தலை அவமானமாக கருதத் தொடங்கினர். இவ்விதம் மெல்ல, மெல்ல அக்கலை அழியும் நிலைக்கு வந்தது. சிறுதெய்வ வழிபாட்டு ஆலயங்களில் பால்குடம், பூக்குளித்தல், தீச்சட்டி எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகளில் இக்கலை நிகழ்வதுண்டு. இடைக்காலத்தில் பெருவாரியான ஆதி திராவிட மக்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியதன் விளைவாக செபஸ்தியர், அந்தோணியர், ஆரோக்கியமாதா, வியாகுலமாதா, சந்தியாகப்பர் போன்ற கிறிஸ்தவ கோவில்களிலும் இக்கலை நிகழ்த்தப்படுவதுண்டு.

# விரயமாகும் தேங்காய் தண்ணீரின் நன்மைகள்



இளநீரின் நன்மைகளைப் பற்றி அனைவருக்கும் தெரியும். இப்போது நாம் பார்க்கப் போவது இளநீர் பற்றி அல்ல, தேங்காய் தண்ணீரின் நன்மைகளைப் பற்றித்தான்.

தேங்காய் தண்ணீர் மிகவும் சுவையாக இருப்பது மட்டுமின்றி, அவற்றை 7 நாட்கள் தொடர்ந்து குடித்து வந்தால், உடலில் நல்ல மாற்றங்களைக் காணலாம். மேலும், தேங்காய் தண்ணீர் மிகவும் சிறப்பான, உடலை சுத்தப்படுத்தும் பானங்களுள் ஒன்று.

**நோயெதிர்ப்பு மண்டலம் வலிமை பெறும் :**

தேங்காய் தண்ணீரைக் குடிப்பதன் மூலம் நோயெதிர்ப்பு மண்டலம் வலிமை பெறுவதோடு, சிறுநீர்ப் பாதை தொற்றுகள், ஈறு நோய்களை ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள் மற்றும் காய்ச்சல், சளி, இருமலை ஏற்படுத்தும் வைரஸ்களையும் தேங்காய் தண்ணீர் அழித்து வெளியேற்றிவிடும்.

**தைரொய்ட் ஹோர்மோன்கள் :** தைரொய்ட் பிரச்சினை உள்ளவர்கள், தேங்காய் தண்ணீர் குடித்து வந்தால், அவை உடலின் ஆற்றலை அதிகரிப்பதோடு, தைரொய்ட் ஹோர்மோன்களின் உற்பத்தியை அதிகரித்து, தைரொய்ட் சுரப்பி சீராக செயல்பட வழிவகுக்கும்.

**சிறுநீரக பிரச்சினைகள்:** சிறுநீரக பிரச்சினைகள் இருந்தால், தேங்காய் தண்ணீரைக் குடித்து வருவதன் மூலம், சிறுநீரக நோய்களைக் கட்டுப்படுத்தலாம். மேலும், தேங்காய் தண்ணீர் உடலிலுள்ள டொக்ஸின்களை வெளியேற்றுவதோடு, சிறுநீரக கற்கள் இருந்தால், அவற்றைக் கரைத்துவிடவும் செய்யும்.

**செரிமான பிரச்சினை:** செரிமான பிரச்சினை உள்ளவர்கள், தேங்காய் தண்ணீரை தொடர்ந்து ஏழு நாட்கள் குடித்து வந்தால், அப்பிரச்சினை நீங்குவதை நன்கு உணரலாம். ஏனெனில், தேங்காய்



தண்ணீரில் நார்ச்சத்து வளமாக நிறைந்துள்ளது. இவற்றைத் தொடர்ந்து குடித்து வந்தால், வாய்வுத் தொல்லையிலிருந்தும் விடுபடலாம்.

**எடையைக் குறைக்கும் :** தேங்காய் தண்ணீரை எவ்வளவு குடித்தாலும் கொழுப்புக்கள் சேராது. பசியும் கட்டுப்படும். இதன்மூலம் உடல் எடை அதிகரிப்பதைத் தடுக்கலாம்.

**உயர் இரத்த அழுத்தம் :** உயர் இரத்த அழுத்தம் இருந்தால், தினமும் காலையில் ஒரு கப் தேங்காய் தண்ணீர் குடித்தால், அவை உடலின் எலெக்ரோலைட்டுக்களை சீராக்கி, அப்பிரச்சினையைக் குறைக்கும்.

**தலைவலி :** இரவில் அதிகமாக மது அருந்திவிட்டு, மறுநாள் காலையில் எழும்போது கடுமையான தலைவலியை உணரும்போது, தேங்காய் தண்ணீர் குடித்தால், தலைவலி நீங்குவதோடு, ஆல்கஹால் மூலம் உடல் வறட்சி அடைவது தடுக்கப்பட்டு, ஹேங்ஓவர் பிரச்சினை நீங்கும்.

**நீர்ச்சத்து அதிகமாகும் :** தினமும் ஒரு கப் தேங்காய் தண்ணீர் குடித்து வந்தால், உடலில் வறட்சி ஏற்படுவது தடுக்கப்பட்டு, நாள் முழுவதும் பொலிவான தோற்றத்துடனும், போதிய ஆற்றலுடனும் செயற்பட முடியும்.

**கர்ப்பிணிகளுக்கு நல்லது :** கர்ப்பிணிகள் தேங்காய் தண்ணீர் குடித்து வந்தால், கர்ப்ப காலத்தில் ஏற்படும் பல்வேறு ஆரோக்கிய பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# அடர்த்தியான புருவங்களுக்கு



அடர்த்தியான புருவங்களே, பெண்களுக்கு மேலும் அழகு சேர்க்கின்றன. சிலருக்கு புருவங்கள் அதீத வளர்ச்சி பெற்றிருக்கும். சிலருக்கு வளர்ச்சி மிகக்குறைவாகக் காணப்படும். இதுபோன்ற பெண்களுக்கு, புருவங்களிலுள்ள முடி வளர்ச்சிக்கு விளக்கெண்ணெய் பெரிதும் துணையாக இருக்கிறது. அத்துடன் சம அளவு பாதாம் எண்ணெயும், ஒலிவ் எண்ணெயும் கலந்து, சில துளிகள் அரோமா எண்ணெயும் கலந்து மசாஜ் செய்யலாம். அதனால், அவ்விடங்களில் இரத்த ஓட்டம் அதிகரித்து, முடி வளர்ச்சியும் அதிகரிக்கும்.

எண்ணெய் தடவி மசாஜ் செய்வதற்கு முன்பு, புருவங்களை இரண்டு விரல்களால் மெதுவாக கிள்ளி விட்டால், புருவத்தில் முடிவளர உதவுவதோடு, அடர்த்தியாகவும், கருமையாகவும் வளர வழிசெய்கிறது. தினசரி குளிப்பதற்கு முன்பாக, புருவங்களின் மேல் கொஞ்சம் தேங்காய் எண்ணெயை தடவி, மசாஜ் செய்து விட்டு, ஊறியதும் குளிக்கலாம்.

புருவங்களை எப்போதும், திரெட்டிங் முறையில் அகற்றுவதே நல்லது. சிலர் வெக்சிங் முறையிலும் அகற்றுவதுண்டு. வெக்சிங் செய்வதால் அந்த இடத்துத் தசைகள் சுருங்கி தொய்ந்து போகக்கூடும். பிளேடு உபயோகித்துப் புருவங்களை ஷேப் செய்வதும் சிலரது பழக்கம்.

அவசரத்திற்கு அவர்கள் அப்படிச் செய்வதுண்டு. இந்தமுறை மிகமிக ஆபத்தானது. அப்படி அகற்றும்போது, அந்த இடத்து முடிகள் மறுபடி வளரும்போது ரொம்பவும் அடர்த்தியாக வளரும்.

கண்களுக்கு அடிக்கடி ஐபேட் உபயோகிக்கலாம். கண்கள் குளிர்ச்சியாவதுடன், புருவங்களின் சீரான வளர்ச்சிக்கும் உதவும். புருவங்களின் வளர்ச்சிக்கு லாவண்டர், ரேஸ்மெரி மாதிரியான அரோமா எண்ணெய்கள் மிகச் சிறந்தவை.

# பாதிப்பாகும் குழந்தைகளின் உடல் பருமன்



இன்றைய காலத்தில் உடல் பருமன் பெரியவர்களை மட்டும் பாதிக்கவில்லை, குழந்தைகளையும்தான். அதிலும் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் பருமனால், அவர்களுக்கு டைப் 2 நீரிழிவு, இதயநோய், தூக்கமின்மை போன்ற நோய்கள் விரைவில் வந்துவிடுகின்றன. ஆகவே, அவர்களுக்கு இத்தகைய நோய்கள் எல்லாம் தாக்காமலிருக்க, ஒரு சில டிப்ஸ்களை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

★ குழந்தைகள் பருமனாவதற்கு அவர்களின் உடலிலிருக்கும் மரபணுக்கள் பெரும்பாலும் காரணமாகின்றன. ஆகவே, மறக்காமல் மருத்துவரை உடனே அணுகவேண்டும். ஏனெனில், மரபணுவில் ஏதாவது திடீரென மாற்றங்கள் ஏற்பட்டாலும், குழந்தைகள் பருமனாவார்கள்.

★ குழந்தைகளின் உடல் எடை சரியாக உள்ளதா என்பதை அடிக்கடி சரிபார்த்துக்கொண்டே வரவேண்டும். மேலும், அதற்கேற்றவாறு உணவுப் பொருட்களைக் கொடுக்கவேண்டும். ஏனெனில், அதிகமான உணவுப்பொருட்களை கொடுத்தால், அதிலுள்ள தேவையற்ற கொழுப்புகள் குழந்தைகளின் உடலில் சென்று உடல் பருமனை ஏற்படுத்திவிடும். ஆகவே, அவர்களின் உயரத்திற்கேற்ப உடல் எடை இருக்குமாறு பார்த்து வரவும்.

★ குழந்தைகளை எப்போதும் விளையாட்டில் ஈடுபடுத்த வேண்டும். அதாவது, குழந்தைகள் வீட்டில் உட்கார்ந்து டிவியை பார்த்துக் கொண்டிருந்தால், அவர்களை விளையாடச் சொல்லவேண்டும். ஏனெனில், இதனால் குழந்தைகளின் இதயம் ஆரோக்கியமாக இருக்கும். அதிலும் ஓடுதல், நடத்தல், குதித்தல், சைக்கிளிங் மற்றும் நீச்சல் போன்ற விளையாட்டுகளை விளையாட வைக்கலாம்.

★ குழந்தைகளுக்கு அதிகமான அளவில் பாஸ்ட் ஃபுட் உணவுகளான பிரெஞ்ச் ப்ரைஸ், சிப்ஸ், ப்ரைடு சிக்கன், மில்க் ஷேக் போன்றவற்றை கொடுக்க வேண்டாம். ஏனெனில், இவற்றில் அதிகளவு கொழுப்புகள் நிறைந்துள்ளன. இதனை அதிகம் சாப்பிட்டால், பிற்காலத்தில் இதயநோய் விரைவில் வந்துவிடும்.

★ அதிக அளவில் கொழுப்புகளுள்ள பாலைக் கொடுப்பதை விட, குறைந்த அளவில் கொழுப்புகளிருக்கும் பாலைக் கொடுக்கவேண்டும். இல்லையென்றால், அவர்கள் பிற்காலத்தில் பருமனாகத்தான் ஆவார்கள்.

★ பால் பொருட்களை கொடுக்கும்போது கூட, கலோரிகள் மற்றும் கொழுப்புக்கள் அதிகமுள்ள உணவுகளை கொடுப்பதைத் தவிர்க்கவேண்டும்.

★ பருமனாகும் குழந்தைகள் விரைவில் மனஅழுத்தத்திற்கு ஆளாவார்கள். ஏனெனில், பருமனாக இருப்பதால், நிறைய பேர் கிண்டல் செய்வார்கள். ஆகவே, அவர்கள் எடையைக் குறைக்க ஊக்குவிப்பதோடு, அவர்களுடன் அன்பாக, பாசத்துடன் நடக்கவேண்டும்.

★ மாலை வேளையிலோ அல்லது மற்ற வேளைகளிலோ, அவர்களுக்கு உண்ண உணவுகளைக் கொடுக்கும்போது, ஆரோக்கியமற்ற உணவுகளைக் கொடுக்காமல், அவர்களுக்கு ஏதேனும் பழங்கள் மற்றும் காய்கறிகளை சாலட் செய்து கொடுக்கலாம்.

## காரிகை களம்

# எலும்புகளின் தேய்மானத்தை தடுக்கும் செம்பு காப்பு





தாமிரம் என்று அழைக்கப்படும் செம்பானது உடலின் அத்தியாவசியமான, உடலுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துக்களில் ஒன்றாகும். நட்ஸ், மீன் போன்ற உணவுகளில் தாமிரம் இயற்கையாகவே உள்ளது. அதிகளவு ஜிங்க் மற்றும் விற்றமின் ‘சி’ எடுத்துக்கொள்வது உங்கள் உடலில் தாமிரக் குறைபாட்டை ஏற்படுத்தும். அதிகளவு மது அருந்துவதும் தாமிரக் குறைபாட்டை ஏற்படுத்தும்.

ஆய்வுகளின்படி செம்பு காப்பு அணிவது உங்கள் சருமம் தாமிரத்தை உறிஞ்சும் அளவை அதிகரிக்கிறது.

இது உங்கள் எலும்பு தேய்மானத்தை சரிசெய்ய பயன்படுகிறது. இதன்மூலம் மூட்டுவலி, வீக்கம் மற்றும் வலியை குறைக்கலாம். செம்பு காப்பானது மனிதர்களுக்கு ஒரு மருந்து போல் செயற்படுகிறது, மேலும், செம்பு காப்பு அணிவது எலும்புகள் தேய்மானமடைவதைத் தாமதப்படுத்துகிறது.

செம்பு உடலில் இருக்கும் 99 சதவீத பாக்டீரியாக்களை இரண்டு மணிநேரங்களில் அழிக்கிறது. பாக்டீரியாக்களை அழிப்பதற்கு இதனுடன் நேரடி தொடர்பு தேவைப்படுகிறது. அதற்கு செம்பு காப்பு சிறந்த தேர்வாக இருக்கிறது.

இரத்த வெள்ளை அணுக்களின் உற்பத்திக்கு தாமிரம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். குழந்தைகளிடையே நடத்தப்பட்ட ஆய்வில் தாமிரக் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு செம்பு காப்பு அணிவித்த பிறகு சில நாட்களில் அவர்களின் இரத்த வெள்ளை அணுக்களின் உற்பத்தி அதிகரிப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நமது உடல் கொலாஜன் மற்றும் எலாஸ்டினை உற்பத்தி செய்வதற்கு தாமிரம் சிறந்த என்டிஒக்சிடன்ட் ஆகும். வயதாவதை தாமதப்படுத்துவதற்கும், சருமத்தில் சுருக்கங்களை குறைப்பதற்கும் கொலாஜன் மிகவும் அவசியமானதாகும்.


சமநிலையற்ற அல்லது குறைவான தாமிரம் என்பது நரம்பியல் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடியது. சமநிலையற்ற தாமிர மாற்றங்கள் மூளையில் பாதிப்பை ஏற்படுத்தி அல்சைமர் நோயை உண்டாக்க வாய்ப்புள்ளது. கையில் செம்பு காப்பு அணிவதன் மூலம் இந்தக் குறைபாடு ஏற்படுவது தடுக்கப்படும்.

# எடை குறைய உதவும் தண்ணீர்

**அதிக எடைகொண்ட பெண்கள் தங்களுடைய வயது மற்றும் எடைக்கு ஏற்ற தண்ணீரின் அளவை விடவும், குறைந்தது 1 லீற்றர் அளவுக்கு அதிகமாகக் குடிக்கவேண்டும்.**

**அப்படி மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, ஓராண்டுக்குக் கிட்டதட்ட வழக்கமாக எடை குறைவதை விட, இரண்டு கிலோ அதிகமாகக் குறைவது கண்டறியப்பட்டுள்ளது.**

**தேவையில்லாமல் தங்களுடைய வாழ்க்கை முறையை வேறு வகையில் ஏதும் மாற்றாமல் தண்ணீரைக் குடிப்பதை மட்டுமே வழக்கமாக்கிக் கொண்டால், அதன் முடிவு உங்களையே ஆச்சரியப்பட வைப்பதாக இருக்கும். வழக்கத்தை விட ஒரு நாளைக்கு அரை லீற்றர் தண்ணீர் அதிகமாகக் குடித்தால், 2 கலோரிகள் அதிகமாக எரிக்கப்படுகின்றன. அதுவே ஒரு வருடத்திற்கு என்றால் மொத்தமாக கிட்டத்தட்ட 17,000 கலோரிகள் எரிக்கப்படுகின்றன. அதாவது 2 கிலோ அதிகமாகக் குறைக்க முடியும்.**



# ஸ்ரீலங்காவா..? சீனலங்காவா..?



என்னதான் நடக்கிறது
எம் தாய் மண் மேலே
நாடோடியாய் வந்தவன்
நாட்டை விற்கையிலே
தமிழ் தேசியம் பேசிய
பெருச்சாளிகளே
எங்கே உங்கள் நாக்குகள்?

கம்பளிப் போர்வை போர்த்தி
நடுவறையில் பிணமாக
குறட்டைவிட்டு தூங்குறாயோ

எழுந்து எம் தாய் மண்ணை
மீட்டிடவே குரல் நீயும்
எமக்காக கொடுக்காயோ
அந்த ஒற்றைக் கதிரையன்
செவியிலே தமிழால்
சங்காய் முழங்கி ஓதாயோ

அகிம்சையாய் தெருவிலே
நாம் தொடுத்த நடைபவனி
தடுத்த உன் ஆதிக்கம்
இன்று நீ நடக்க தெருவின்றி

ஊரவன் தெருவிலே பணம்
கொடுத்து போறாயோ

எவன் வாழ்வு சிறக்க
எம் தாய் மண்ணை
விற்றுப் போட்டாய்
பல வருட குத்தகைக்கு
விட்டும் விட்டாய்
அழிப்பதாய் நினைத்து
நீயும் அழிந்து கொண்டே
இன்றுவரை இருக்கிறாய்

மறவாதே செவிடோடு குருடே
இங்கு அழிவது ஓர் இனமல்ல
உன் என் பாட்டன் பாட்டி
பாதம் பட்ட சொந்த மண்ணடா
எம் தீவுகளை நீ விற்று
தீக்கிரையாய் ஆக்கின்றாயோ
இது தமிழன் ஆண்ட
குமரிக்கண்ட மிச்சமென்று
ஒருபோதும் மறந்திடாதே

வாயடைத்துப் போய்
வங்காள விரிகுடாவில்
மூழ்கி நாம் சாவதா
கேள்வி கேட்காமலேயே
விடை அறிந்து விட்டோம்
புறப்படுங்கள் மூட்டையோடு
பின் முதுகை காட்டியபடி

வன்னித்தமிழ் மறவன்
இந்திராபுரம், பளை

# தைரியம்



வறண்டிருந்த பூமியும்
களிமண்ணாகியது
கடும் மழையின் தாக்கத்தில்
கடல்களும் கரை தாண்டவே

பாலைவன பூமியும்
பசும்பாலாகியது
பசுங்கன்று ஓடிவந்து
தாய் முகம் பார்க்கையிலே

வாடிக் கிடந்த விதையொன்று
விருட்சமாய் மாறியது
வித்திட்டவன் சலிக்காமல்

விடியலில் நீரூற்றையிலே
சளைக்காது பயணத்தில்
சரித்திரமாய் தடம் பதிக்க
ஊக்கம் கொடுக்கும்
உரிமையாளன் ஒவ்வொருவர்
வாழ்விலும் வரமானவர்களே

நீ ஊக்கம் கொடுக்கும்
உரிமையாளன் இல்லையெனின்
உறிஞ்செடுக்கும் உரமற்றவனாய்
இருந்து விடாதே
தட்டி விடுவதைக் காட்டிலும்
தைரியம் ஊட்டுதல் சிறந்ததே

ஷீமா ஹரீஸ்
பேராதனைப்
பல்கலைக்கழகம்

தூறல்கள்

# நதியடியாய் நகரும் ஞாபகங்கள்



(வாலி சான்றிதழ்)

இளமைக் கோலங்கள்
இனிதான காலங்கள்
வருடங்கள் பல கடந்தும்
அழியாத ஞாபகங்கள்

நண்பர்கள் நாங்கள்
கூடி விளையாடுவதும்
வேடிக்கை விளையாட்டில்
களிப்புடனே புரளுவதும்
இடையிடையே சண்டையிட்டு
உறவாடல் பிசகுவதும்
சில நொடிகள் நகர முன்னே
மீண்டும் உறவாடுவதும்
நதியடியாய் நகரும்
அழியாத ஞாபகங்கள்

பள்ளிக் காலங்களில்
பகட்டாக உடையணிந்து
பக்கத்து மாணவிக்கு
கண்சாடை காட்டுவதும்
கடைக்கண்ணால் ஆசிரியை
எமை நோக்கி முறுவலிக்க
வகுப்பறைத் தோழர்கள்
எமைப்பார்த்துப் பரிகசிக்கும்
இனிதான ஞாபகங்கள்
நதியடியாய் நகர்கிறது

பல்கலைக்கழகம் பட்டப்படிப்பு
நட்புகளில் மாற்றம்
நடத்தைகளில் ஏற்றம்
பலமொழிகள் பல இனங்கள்
அடித்த கூத்துகளும்
ஆடிய ஆட்டங்களும்
கவலைகள் தெரியாமல்
காலங்கள் ஓடியதும்
விடைபெறும் தருணமதில்
கண்களிலே நீர் கசிய
விம்மிய விம்மல்களும்
இணைபிரியோம் என்றிருந்த
நட்புகளைப் பிரிந்து வந்த
மறக்க இயலாத ஞாபகங்கள்
நதியடியாய் நகர்கிறது

உயர்பதவி பெற்றதுவும்
உறவினர்கள் ஊரவர்கள்
திருமணங்கள் பேசியதும்
திருமணம் முடித்ததுவும்
பிள்ளை குட்டி பெற்றதுவும்
பிள்ளைகள் வளர்ந்ததுவும்
பேரக்குழந்தைகளைப்
பேணி இப்போ வளர்ப்பதுவும்
சுகமான வேதனைகள்
நதியடியாய் நகரும் ஞாபகங்கள்

ஏ.ஆர்.ஏ.சத்தார்

# அரசியல்வாதி



வீடு வீடாய் நடந்து வாக்கு கேட்டு
வென்ற ஐயா ஐந்து வருடத்தை
கழித்து விட்டு வாசலில் வந்து நின்று
புன்னகைத்து பாசமாகப் பேசுகிறார்

உங்கள் குறை எதுவோ தீர்த்துவைப்பேன்
ஊரை வாழ வைப்பேன் என்ன அழகாக
உணர்ச்சி பொங்க பேசுகிறார்..!

கடந்த நாடாளுமன்ற தேர்தலில்
வெற்றிக் கொடிகட்டி ஊர்வலம் போனவர்
ஐந்து வருடத்திற்கு பிறகு வந்து நிற்கிறார்
மாடி மனை வீடு உல்லாச விடுதிகள்
சொந்த மக்களுக்கு உறவினர்களுக்கு
மட்டும் பட்டம் பதவி வேலைவாய்ப்பு
ஊரை மறந்து விட்டு கொழுத்துப் பெருத்தவர்
அவரை நம்பிய தொண்டர்கள் எவரும் இல்லை

அடுத்த தேர்தலுக்கு வந்து ஐயா என்கிறார்
இந்த முறை மட்டும் ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்
போனமுறை செய்யாமல் விட்டதை எல்லாம்
செய்து காட்டுவேன் என்று கும்பிடுகிறார்
தேர்தலுக்கு மட்டும் தேடிவரும்
அரசியல்வாதி வேண்டாம்

இவர் போன்ற பச்சோந்திகளுக்கு
இனியும் இடம் கொடுக்கக்கூடாது
இந்தக் குள்ளநரியை விரட்டியடிக்க வேண்டும்

உண்மையான தொண்டன் ஊரிலே இருப்பவன்
எல்லோரையும் நேசிப்பவன்
அவரையே அனுப்புவோம்
எங்கள் துயர்கள் மறந்து ஒற்றுமையாய்
எல்லோரும் வாழ இடம்கொடுத்து வெல்லுவோம்

செ.துஜியந்தன்
பாண்டிருப்பு

# செம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம்தான் கலந்தனவே



உடலோடு உணர்வோடு
மண்ணில் புதையுண்ட
விதைபோல

வேர் ஊன்றி
மனதில் விதையாகி
உயிர்கொண்ட நேசம்

மழைகண்ட தளிர்
போல பாசம்
நானிங்கு இனி
ஏது என்றாகி

நெடுநாள்
காணாமல் நின்றவள்
கோபமும் கொண்டிருந்தாள்

கண்டபோது
பனிக்கூழாகி
உருகி நின்றாள்

வேரோடு
தனை தாங்கும்
ஆதாரம் அவன் என்றே

மனதில் புடமிட்ட
பாவையிவள்

கொடிபோல
படர்ந்து பாவைக்
கொடியாக அவன்
மெய்மீது படிந்து
நின்றாள்

அன்பென்ற
பொருளோடு திளைத்திட்ட
நேயம் காமம் துளியுமின்றி
அவன் நெஞ்சத்தில்
தாங்கி நின்றான்

இதயங்கள் இரண்டான
போதும் ஒன்றுக்குள்
ஒன்றாகி வாய்மொழி
ஊமையாகி இரு
உள்ளங்கள்
புது உலகொன்றில்
சங்கமமாகின

மருதூர் மௌஜூன்

# தலையெழுத்து



அதிகாரத்தின் காட்டம் எல்லாம்
அகதிகளைப் போல் செய்வதறியா
அமைதி காக்கும்
அரை வயிறு பட்டினி தொழிலாளியிடம்
ஆணவம் அதிகாரம் இதையெல்லாம்
ஆளும் சில்லறை லாபிகள்
ஆவது அறியாது ஆவணம் கூட
இல்லாதவனுக்கே இழைக்கிறது
இப்படியே கடக்குமா வாழ்க்கை
இல்லையேல்
ஈன்றவர்களின் இரண்டாம்
அலையாய் தொடருமா?
உரைகின்ற மனதை என்னவென்பேன்

காலை ஊன்றி எழ எத்தனிக்கும் போது
எதிரில் குழுந்தைகளின் பொன்முகங்கள்
எதிர்த்தால் ஏது நமக்கு சோறு என்ற
ஐயமே வழமையான வாழ்க்கைக்கு
அழைத்துச் செல்கிறது
ஒருநாள் விழித்தெழுவோம் - அன்று
ஓடுவான் வறுமைக்கு காரணமானவன்
ஔவையின் மரபணு கலந்த வீரத்தாயின்
பிள்ளைகள் நாம் எதிர்ப்போம் ஒருநாள்
எங்கள் கையெழுத்தினால் - அன்று
எம்மை ஆள எமக்குள் ஒருவன்
உதயமாவான்

காஹவத்தை - ஷபிக்

# செய்த வினை



வீடு வரை உறவு காடுவரை பிள்ளை
என்பதெல்லாம் கனவாகி போனது

இறுதியாய் உண்ட ஒரு வெள்ளித்தட்டு
கஷாயம் குடித்த கோப்பை ஒன்று
அங்கம் மறைத்த ஆடையொன்று
ஆளிருந்தும் அனாதையாக

முகத்தில் முத்தமிட்டு நெஞ்சில்
தலைசாய்த்து கத்திக் கதறியழ
ஆளிருந்தும் இங்கு அனுமதியில்லை

மண்ணுக்கு ஆசைப்பட்டு மனிதா நீ
மண்ணை மண்ணுக்குள்ளே சிறை செய்தாய்
மண் இன்று விடுதலை கோரி உன்னிடம்

மனு கேட்டு மன்றாடுகிறது
மன்றாடும் மண் இன்று மனிதா
உன்னை அணைக்கத் தயாராக இல்லை

நெருப்போடு வெந்து போக சொல்கிறது
நெருப்பாவது அணைக்கிறதே
ஆச்சரியம் தான்

வாழும் காலத்தில்
நாம் எங்கே வாழ்ந்தோம்?
வாழ்வோரை வீழ்த்தியன்றோ
பார்த்தோம்
பொறாமை வஞ்சகம் இன்னும்
எத்தனை எத்தனை..!

அதனால் இன்று இறப்பர் உடலை சுற்றியுள்ள
ஈக்களை விரட்டக் கூட இங்கு ஆளில்லை
எல்லாம் நாம் செய்த வினை
இன்று விளைகிறது

பொருள் பணம் கொட்டிக்கிடந்தும்
கொண்டு செல்ல இயலவில்லை

அதோ மற்றுமொரு உடல் இறப்பர் உறைக்கு
செல்ல தயாராகிறது

எண்ணிலடங்கா ஈக்கள் எங்கிருந்தோ
வருகின்றன பிணத்தை மொய்த்திட

எம்.ராமதாஸ்
இறம்பொடை





# கோஸ்டா ரிக்கா

நாட்டின் 51% பகுதி காடுகள் கொண்டதுதான் மத்திய அமெரிக்க நாடான கோஸ்டா ரிக்கா. இந்நாட்டில் 12 விதமான பருவநிலைகள் உள்ளன. அதற்குக் காரணம் இந்நாட்டைச் சுற்றி இரண்டு பெருங்கடல்கள் இருப்பதே. ஆனால், அளவில் இந்த நாடு, தமிழ்நாட்டில் பாதி கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதுவும் 2000ஆம் ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டுக்குள் காடுகளின் பரப்பளவை 2,25,000 ஹெக்டேயர் அதிகரித்துள்ளனர்.

கோஸ்டா ரிக்கா உலகின் மிகவும் மகிழ்ச்சியான நாடு என்று பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நாட்டிற்கு இராணுவமே இல்லை என்றால் பார்த்துக்கொள்ளுங்கள், எவ்வளவு அமைதியை விரும்பும் நாடாக இது இருக்கவேண்டும் என்று.


இந்நாட்டில் தெருக்களுக்கும், சாலைகளுக்கும் பெயர் கிடையாது. எனவே முகவரி என்கிற கான்செப்டே இங்கு கிடையாது. அப்போது எப்படி கடிதம் எல்லாம் அனுப்புகிறார்கள்? "அந்தப் பெரிய புளியமரத்திற்கு வடக்கே உள்ள மூன்றாவது வீடு" போன்றவையே அங்கே அட்ரஸ்.

இந்நாட்டு கடற்கரைபோல் அழகான கடற்கரைகள் உலகில் எங்கேனும் இருக்குமா என்பதே கேள்விக்குறிதான். இந்நாட்டிலுள்ள ஒரு கடற்கரையின் மண் கறுப்பு நிறத்தில் இருக்கும். இதுபோன்ற கடற்கரைகள் சற்றே அரிதுதான். ஒருசில நாடுகளிலேயே கறுப்பு நிற கடற்கரைகள் உள்ளன.

இந்நாட்டிலும்தமிழர்களிடம்உள்ளதுபோல்,வாழைஇலையில் உண்ணும் பழக்கம் இருக்கிறது. இவர்கள் உணவுக்கும், இந்திய உணவுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. ஆனால், இந்தியாவிலிருந்து 15,000 கிலோமீற்றர் தொலைவில் இந்த நாடுள்ளது, அந்நாட்டின் பாரம்பரிய உணவு, அதுவும் நம்மைப் போல வாழை இலையில். இந்த நாட்டில் ஒரு மர்மத் தீவுள்ளது. இங்கே நிறைய புதையல் இருப்பதாக நம்பப்படுகிறது. 350 தொன் தங்கம் இங்கே இருப்பதாக நம்பப்படுகிறது.

ட்ரெஷர் ஐலண்ட் என்ற உலகப்புகழ்பெற்ற கதையை படித்திருக்கிறீர்களா? அந்த ட்ரெஷர் ஐலண்ட் இந்த தீவை மையமாக வைத்தே எழுதப்பட்டது. இந்தத் தீவுக்குள் வசிக்க யாருக்கும் அனுமதியில்லை. ஆனால், இந்த தீவின் அருகே ஸ்கூபா டைவிங் செய்யலாம். இது பல்லுயிர் பெருக்கம் நிறைந்த கடற்பகுதி ஆகும். இந்நாட்டின் சிறப்பே இதன் இயற்கை சுற்றுலாதான். இங்கு காடுகள் நடுவேயுள்ள ஆறுகளில் படகுப் பயணம் செய்வது, எரிமலைகளைக் காண்பது, காடுகளில் ட்ரெக்கிங் செய்வது என்பன சிறப்பான அனுபவத்தை தரும்!







# எகிப்தின் அலெக்சாண்டிரியா நூலகம்

எகிப்திலுள்ள அலெக்சாண்டிரியா என்ற ஊர் மிகவும் பழமையானது. இது பல ஆயிரம் ஆண்டுகள் ஆண்ட எகிப்திய அரசாட்சி முடிவுற்றபின், கி.மு 3 ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் கைகளுக்கு சென்றது. இதை "மிகப்பெரிய புகழுடைய அலெக்சாண்டர்" என்பவர் எகிப்தைக் கைப்பற்றி, கிரேக்க ஆட்சியை முதன்முதலில் அங்கே நிறுவினார். அதன் பின்னர் எகிப்தில் ஒரு புதிய நகரை உருவாக்கி அந்த நகரத்திற்கு "அலெக்சாண்டிரியா" என்று பெயர் வைத்தார். 2300 ஆண்டுகளாக அதே பெயர் இன்றைக்கும் தொடர்ந்து இருந்து வருகின்றது. இவரது இறப்பிற்குப் பின்னர் இவரின் தளபதிகளில் ஒருவரான "தொலமி" அலெக்ஸாண்டரியாவை ஆட்சி செய்தார். அப்போதே தமிழர்களுக்கும், கிரேகர்களுக்குமான வணிகம் தொடக்கநிலையில் இருந்தது.

தொலமி காலத்தில் அலெச்சாண்டரியாவில் கி.மு.3இல் ஒரு மிகப்பெரிய நூலகம் உருவாகியது. பல நாடுகளின் விலைமதிக்க முடியாத பல துறை சார்ந்த பல ஆயிரக்கணக்கான நூல்கள் எகிப்திய, கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, அப்போதே அந்த நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தன. பிறகு ஒருநாள் எதிர்பாராதவிதமாக உள்ளூர் கலவரத்தில் அந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. யார் தீ வைத்தார்கள் என்பது இன்றளவும் அவிழ்க்க முடியாத புதிராக உள்ளது. அந்தத் தீயில் அனைத்து நூல்களும் எரிந்து சாம்பலாகிப் போயின.

இன்றைக்கு அந்த பழைய நூலகம் இருந்த அதே இடத்தில், எகிப்திய அரசு ஒரு புதிய நூலகமொன்றை எழுப்பியுள்ளது. கட்டட வடிவமைப்பில் உலகின் பல வழக்கில் உள்ள மற்றும் வழக்கொழிந்துபோன முதன்மையான 120 மொழிகளின், 200 எழுத்துகள் அந்த புதிய நூலக வட்ட சுவரில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதில் "ஈ, உ, ணி" உள்ளிட்ட தமிழ் எழுத்துகளும் உள்ளன.

1974 இல் அலெக்ஸாண்ட்ரியா பல்கலைக்கழகம் ஒரு குழு அமைத்து அதே இடத்தில் புதிதாக நூலகம் அமைக்க திட்டமிட்டது. பின்னர் பிப்லியோதிகா அலெக்ஸாண்டிரியா என பெயரிடப்பட்டு 2002 இல் இந்நூலகம் திறக்கப்பட்டது. இதில், மாநாட்டு மண்டபம், கோளரங்கம், கலைக்கூடம், அருங்காட்சியகம், பார்வையற்றோருக்கான நூலகம், இளைஞர்களுக்கான நூலகம், சிறுவர்களுக்கான நூலகம், பல்லூடக நூலகம், இணைய காப்பகம், கையெழுத்துப் பிரதி மற்றும் புத்தக நூலகம் என அனைத்தும் அடங்கியுள்ளன. நூலகத்தின் வெளிச் சுவர் கிரானைட் கற்களால் செய்யப்பட்டுள்ளது.


நூலகத்தின் வடிவமைப்பு உருளை வடிவிலும், ஒரு பக்கத்திலிருந்து சாய்ந்ததாகவும், நிலத்துக்கு அடியில் சில தளங்களும், உள்ளே 7 அடுக்குகளாகவும் ஒவ்வொரு அடுக்கிலும் வருட வாரியாக மொத்தம் 8 மில்லியன் புத்தகங்களும் உள்ளன. நோர்வேயைச் சேர்ந்த ஸ்னோஹெட்டா (Snhetta) எனும் கட்டிடக்கலை நிறுவனத்தால் குறித்த கட்டிடம் கட்டப்பட்டது.




## ஊர்வலம்

# மனிதகுல வரலாற்றை பதிவுசெய்யும் குறுந்தகடு

பிரிட்டன் விஞ்ஞானிகள் 360 டெராபைட் மின்னணுத் தகவல்களை உள்ளடக்கக்கூடியதும், 1380 கோடி ஆண்டுகளுக்கு மேல் நிலைத்திருக்கக் கூடியதுமான ஐந்து பரிமாண குறுந்தகடு (5D data storage) ஒன்றினை உருவாக்கியுள்ளனர். பிரிட்டனைச் சேர்ந்த சௌதாம்ப்டன் பல்கலைக்கழகத்தின் கண்ணாடி மின்னணுவியல் ஆய்வு மையம் இந்த குறுந்தகட்டை உருவாக்கியுள்ளது. நனோ தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட கண்ணாடி இழைகளைக் கொண்டு சிறிய நாணயத்தின் அளவில் இது உருவாக்கப்பட்டுள்ளது.



ஐந்து பரிமாணப் பதிவு முறை மூலம் அதிவேகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இந்த குறுந்தகட்டில் தகவல்களைப் பதிவுசெய்யவும், பதிவிட்டவற்றை மீளப்பெறவும் முடியும்.



நவீன தொழில்நுட்பம் காரணமாக ஒவ்வொரு தகவல் புள்ளியும் 5 மைக்ரோ மீற்றர் (ஒரு மீற்றரின் பத்து இலட்சத்தில் ஒரு பகுதி) இடைவெளியில் அமைந்துள்ளதால், மிகச் சிறிய இடத்திலேயே அதிக தகவல்களைப் பதிவுசெய்ய முடிகிறது. 1,000 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்பத்தை இந்தக் குறுந்தகடு தாக்குப்பிடிக்கும் என்பது இதன் மற்றொரு சிறப்பம்சமாகும். 190 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் கூட இந்தக் குறுந்தகடு 1,380 கோடி ஆண்டுகள் நிலைத்திருக்கும். சாதாரண வெப்பநிலையில் இந்தக் குறுந்தகடுகள் எல்லையற்ற வாழ்நாளைக் கொண்டிருக்கும். இத்தகைய சிறப்பு மிக்க இந்தக் குறுந்தகடுகளுக்கு, 'சுப்பர்மேன் மெமரி கிறிஸ்டல்ஸ்' (Superman memory crystal) என்று பெயரிடப்பட்டுள்ளது.



இதில் பதிவுசெய்யப்பட்ட தகவல்கள் பல கோடி ஆண்டுகளுக்கு அழியாமல் இருக்கும் என்பதால், வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்கும் துறையினருக்கு இந்த குறுந்தகடுகள் வரப்பிரசாதமாக அமையும் எனக் கூறப்படுகிறது.



# குறும்பன் பதில்கள்

**காதலிக்கும் போது அதிகமாக பேசப்படுவது பொய்யா?**

எஸ். பிரவீன் - பரகடுவ

காதலிக்கும் போது சொல்லும் எல்லாமே பொய்களா என்றால் நிச்சயமாக இல்லை.

ஆனால் காதலிக்கும் போது சொல்லும் மிகப்பெரிய பொய் 'இந்த உலகத்தில் எனக்கு இருக்கது நீ மட்டும்தான். நீ இல்லைனா செத்துருவேன்' என்பதுதான்.

**எல்லோரும் எல்லா நேரமும் ஒரே மாதிரி இருப்பதில்லையே?**

ஆர்.அரிச்சந்திரன் - கரவனெல்லை

ஆம் நிச்சயமாக, எதிர்பார்ப்பு இல்லாமல் வாழ பழகிக்கொள்ளுங்கள் தோழரே!

**மற்றவர் என்ன செய்கிறார் என்பதை பார்ப்பதையே வேலையாக சிலர் செய்கிறார்களே! ஏன் குறும்பா?**

எம்.ஹுசைன் - பொல்காவலை

இதுதான் வாழ்க்கை. மற்றவன் என்ன செய்கிறான் என்பதை பார்ப்பதிலேயே போய்விடும். இப்போகூட பாருங்க, நீங்க வாழ்க்கை இல்லை வாழ்க்கை என்று சொல்ல நினைப்பீர்கள்.

**புரிதல் என்றால் என்ன?**

விஷாலினி - கிண்ணியா

எந்தவொரு விடயத்தையும் தன் பக்கத்தில் இருந்து மட்டும் பார்க்காமல், பிறர் பக்கத்தில் இருந்தும் பார்ப்பதுதான் புரிதல் தோழரே. முயற்சித்துப் பாருங்கள்.

**எல்லா விடயங்களையும் இரகசியமாகவே செய்யும் குழந்தைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இரா.நாவலர் - சுன்னாகம்

குழந்தையின் சிறிய தவறுகளைக் கூட ஊதி பெரிதாக்கி அதையே குத்திக் காட்டிக்கொண்டிருக்கிறோம் என்று பொருள்.



**கொரோனா காலத்தில் சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்காமல் இருக்கிறார்களே குறும்பா?**

கல்கிஸ்ஸை

ஆம். அவர்களுக்கு ஒன்று மட்டுமே சொல்வேன்.



நீங்கள் உயிரிழந்த பிறகு, உங்களுக்காக உங்கள் நிறுவனம் வேறு ஒருவரை வேலைக்கு அமர்த்திவிடும் - ஆனால் உங்கள் குடும்பத்திற்கு ஏற்படும் இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது. அனைவரும் அவதானமாக இருங்க... ஆபத்து மிக அருகில்...

# தொட்டதெல்லாம் பொன்னாகும்..!

குதிரைகள் குடிக்கும் நீர் நிலைகளில் இருந்து நீர் அருந்துங்கள். குதிரை ஒருபோதும் கெட்ட தண்ணீரை குடிக்காது.

பூனை தூங்கும் இடத்தில் உங்கள் படுக்கையை இடுங்கள். அமைதி தராத இடத்தில் பூனை உறங்காது.

புழு துளைத்த கனிகளை உண்ணுங்கள். நச்சுக் கனிகளை புழு துளைக்காது.

பூச்சிகள் உட்கார்ந்திருக்கும் காளானை தைரியமாக உணவாக எடுத்துக் கொள்ளுங்கள். விஷக் காளான்கள் மீது பூச்சிகள் உட்காராது.

முயல்கள் குழி பறிக்கும் இடத்தில் மரத்தை நடலாம். மரம் செழிப்பாக வளரும்.

பறவைகள் வெப்பத்தை தவிர்க்க ஓய்வெடுக்கும் இடத்தில் உங்களுக்கான நீர் ஊற்றினை தோண்டுங்கள்.

பறவைகள் தூங்கப்போகும் நேரத்தில் தூங்கச் சென்று, அவை விழிக்கும் நேரத்தில் எழுந்திருங்கள். நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும்.

அதிகம் இயற்கையான உணவுகளை உண்ணுங்கள். வலுவான கால்களையும், துணிச்சல் மிக்க இதயத்தையும் பெறுவீர்கள்.

மீன்களைப்போல அடிக்கடி நீரில் நீந்துங்கள். நீங்கள் பூமியில் நடக்கும்போது கூட மீன்களைப் போலவே உணர்வீர்கள்.

அடிக்கடி வானத்தைப் பாருங்கள். உங்கள் எண்ணங்களில் வெளிச்சமும், தெளிவும் பிறக்கும்.

நிறைய அமைதியாக இருங்கள், கொஞ்சம் பேசுங்கள். உங்கள் இதயத்தில் மௌனம் குடிகொள்ளும். உங்கள் ஆன்மா எப்போதும் அமைதியாக இருக்கும்.



உங்களுடைய கேள்விகளை குறும்பனிடம் கேளுங்கள்
whatsapp - 076 2728213
e-mail- kurumpan@yahoo.com

# தமிழன் தர்பார்



தொகுப்பு:
மணி ஸ்ரீகாந்தன்

## இது எங்க ஏரியா

## இது எப்படி இருக்கு!

இந்தா வரும், அந்தா வரும்னு எதிர்பார்த்துக்கிட்டிருந்த மழை பிச்சுக்கிட்டு கொட்ட ஆரம்பிச்சது. அந்த வீட்டம்மா ரொம்பக் கவலையான முகத்தோட வீட்டுக்கும் வாசலுக்குமா நடந்துக்கிட்டு இருந்தாங்க. பதற்றத்தோட கடிகாரத்தையும், வாசலையும் மாறி மாறி அவங்க பார்த்துக்கிட்டிருந்ததை கவனிச்ச அவங்களோட வீட்டுக்காரர், “என்னாச்சும்மா? ஏன் இவ்ளோ டென்ஷன்?”னு கரிசனையா விசாரிச்சார்.

அந்தம்மாவும் கவலை குறையாம, “உங்க தங்கச்சி ஒரு கல்யாண வீட்டுக்குப் போயிருக்கா. இந்த நேரம் பார்த்து மழை இந்தப் போடு போடுதே... அதான்”னு இழுத்தாங்க. மனைவிக்கு தன் தங்கச்சி மேல இருந்த அக்கறையைப் பார்த்து சந்தோஷம் தாங்கல அந்த ஆளுக்கு. ‘அடடா! அண்ணி – நாத்தனார்னா இப்பிடில்ல இருக்கணும்’னு உள்ளூர சந்தோஷப்பட்ட அந்த ஆளு, “நீ கவலைப்படாத... அவ பத்திரமா வந்துடுவா”னு சமாதானப்படுத்தினார். உடனே அந்தம்மா, “அவ எப்போ, எப்படி வர்றானு யாருக்குக் கவலை? நான் போன வாரம் வாங்கின புது பட்டுப் புடவையை அவ கட்டிக்கிட்டுப் போயிருக்கா. அந்தப் புடவை என்னாகுமோனுதான் பதறிட்டு இருக்கேன்...”னாங்களாம்.





‘‘எதிரியின் மிரட்டலுக்கு எல்லாம் நான் பயப்பட மாட்டேன்!’’

‘‘அப்படியானால் ‘விரட்டலுக்குத் தயார்!’ என்று பதில் ஓலை அனுப்பிவிடலாமா மன்னா!’’



‘‘மச்சான் ஏன்டா சிரிச்சிட்டே வாற?’’

‘‘அந்த பொலிஸ்காரனுக்கு அறிவே இல்லடா..’’

‘‘ஏன்டா? உனக்கு பைன் அடிச்சிட்டானா?’’

‘‘குடிச்சிட்டு வண்டிய ஓட்டிட்டு வாற என்ன.. ஊதிக்காட்டுன்னு கேட்டான்..’’

‘‘அப்புறம்?’’

‘‘ஊதினன்.. மாஸ்க்கை கழட்டிட்டு ஊது என்டான்..’’

‘‘ஐயய்யோ.. அப்புறம்?’’

‘‘மாஸ்க்கை கழட்டிட்டு ஊதினேன்.. சரி போன்னு சொல்லி அனுப்பிட்டான்..’’

‘‘எப்பிடிடா..? நீதான் குடிச்சிருக்கியேடா?’’

‘‘டேய், அவன் மாஸ்க்கை கழட்டினா தானேடா அவனுக்கு மணக்கும்..!’’



சபீனா சோமசுந்தரம்.

## குறும்பா வட்டம்

மாடிமனை கட்டிவைத்து வாழ்ந்தார்
மாது,மது சொர்க்கமென ஆழ்ந்தார்
கோடி பணம் கரைந்துவிட
கூத்திகளும்
கலைந்துவிட
வாடுகிறார்
நோயினிலே
வீழ்ந்தார்!





பாலமுனை பாறூக்

## மன்னிப்பு



மகன் விபத்தில் இறந்தவுடன் கணவனை இழந்த மருமகள் ராணியை தன்னோடு கூட்டிப்போய் வைத்துக்கொண்டாள் பார்வதி, வயதான தன்னை பாரமாக நினைத்து அவள் துரத்தி விட்ட முதியோர் இல்லத்தில்!

தாரை செ.ஆசைத்தம்பி











தொலைபேசி இல - 0740107194
அனுப்பவேண்டிய முகவரி : இல.91, விஜேராம மாவத்தை, கொழும்பு-07 மின்னஞ்சல் முகவரி: thamilandharbar@yahoo.com



## தென்கச்சி கோ.சுவாமிநாதன் சொன்ன கதை

## இசை மருத்துவம்!



மனசு சரியில்லே – ன்னா உடனே சில பேர் சங்கீதத்தைக் கேட்க ஆரம்பிச்சுடறது வழக்கம். மனசை சரி பண்றதுக்கு அது ஒரு நல்ல வைத்தியம்தான்.

ஏன்னா, இன்றைக்கு மனநோயாளிகளுக்கே சங்கீதத்தை ஒரு வைத்தியமா உபயோகப்படுத்திக் கிட்டிருக்காங்களே..! மனநோய்க்கு எத்தனையோ விதமான சிகிச்சை முறைகள் உண்டு.

Psycho Therapy – ன்னு ஒண்ணு. இது மனோதத்துவ சிகிச்சை!

Psyciatric Therapy – ன்னு ஒண்ணு. இது மனோவசிய சிகிச்சை!

Recreation Therapy – ன்னு ஒண்ணு. இது மனமகிழ் சிகிச்சை!

இதைத் தவிர, அதிகப்படியான உணர்ச்சிகளுக்கு யோக சிகிச்சை உபயோகப்படுது.

இதையெல்லாம் விட சிறந்த பலனைக் கொடுக்கக் கூடிய ஒரு சிகிச்சை முறை – Music Therapy – இசை சிகிச்சை!

இசையினால் நோய்கள் குணமாகும்ங்கறது பழங்காலத்தில் இருந்தே இருந்துகிட்டு வர்ற ஒரு நம்பிக்கை. அது மட்டுமில்லை. இன்னன்ன ராகம் இன்னன்ன நோயைக் குணப்படுத்தும் – ன்னு வேற சொல்றாங்க.

இதுக்கெல்லாம் தெளிவான விஞ்ஞான நிரூபணம் இல்லேன்னாலும் கூட, இதெல்லாம் இப்பவும் ஆராய்ச்சிக்குரிய விஷயங்கள்.

இதைப்பத்தியெல்லாம் மேற்கொண்டு நிறைய ஆராய்ச்சி பண்ணி நிறைய கண்டுபிடிக்கலாம். அதையெல்லாம் சிறப்பா உபயோகப்படுத்தலாம்.

இந்தோளம் ராகம், வாத நோய்க்கு நல்லதாம். சாரங்கா – ராகம், பித்தம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு நல்லதாம்.

பைரவி ராகம் ஆஸ்துமாவுக்கும், சுவாச நோய்களுக்கும் நல்லதாம். அசாவேரி ராகம் தலைவலியைக் குணப்படுத்துமாம்.

நீலாம்பரி ராகம் இருக்கு பாருங்க... அது உடல் இறுக்கத்தையும், மன இறுக்கத்தையும் போக்கி நம்மளை உறக்கத்தில் ஆழ்த்தக் கூடிய ராகம்.

பிலகரி, பூபாளம், நாட்டை இதெல்லாம் நம்ம உறக்கத்தைக் கலைச்சு கண்விழிக்கச் செய்யக் கூடிய ராகங்கள்.

கவலை – பசி, இது ரெண்டையும் மறக்கணுமா? அதுக்கு கரகரப்பிரியா ராகம்! சோக உணர்வைத் தரக் கூடிய ராகங்கள் : முகாரி, சிவரஞ்சனி, ரேவதி.

அதிர்ச்சி, பாதிப்பு, பரபரப்பு இதையெல்லாம் போக்கி மன அமைதியைத் தரக் கூடிய ராகங்கள் மத்யமாவதி, சகானா.

இசை – இருக்கே இது கேக்கறவங்களுக்கு மட்டும்தான் நல்லது செய்கிறதுன்னு இல்லே... அதைப் பாடறவங்களுக்கும் பயிற்சி பண்றவங்களுக்கும் கூட நல்லது செய்கிறது!

பாடுகிறவங்களுக்கெல்லாம் இரத்த ஓட்டம் சீரடையும். முகத்தில் புதுக்களை உண்டாகும். தோலின் சுருக்கங்கள் நீங்கும். இளமையான தோற்றப் பொலிவு உண்டாகும்.

அதனால்தான் சங்கீத வித்துவான்கள் பலபேரைப் பாருங்க. பார்க்கறத்துக்கு ஜோரா இருப்பாங்க. முகம் நல்லா இருக்கும்.

பாடறப்போதான் ஒரு மாதிரியா இருக்கும். அது பரவாயில்லை. எல்லாருக்கும் அப்படி இருக்காது.

இசையை ‘‘சங்கீத யோகம்” ன்னு சொல்லு வாங்க. ஏன்னா யோகப் பயிற்சிக்கும் இதுக்கும் சம்பந்தமுண்டு.

ராக ஆலாபனை பண்றப்போ உள்ளே இழுக்கிற மூச்சு அங்கேயே கொஞ்ச நேரம் இருக்கும். அப்புறம்தான் வெளியிலே வரும். அது பிராணாயாமம் மாதிரி.

ஆரோகணம், அவரோகணம் பாடறப்போவெல்லாம் மூச்சை இழுத்து படிப்படியா வெளியே விட வேண்டியிருக்கு இல்லையா? அதெல்லாம் யோகப் பயிற்சி மாதிரிதான்.

இதைத் தவிர இசைக் கருவிகள் இருக்கு பாருங்க... அதைப் பத்தியும் சிலது சொல்றாங்க. வீணையின் நாதம் இரத்தக் கொதிப்புக்கு நல்லதாம். அதிகப்படியான இரத்த அழுத்தத்தைக் குறைத்து மனசுக்கு அமைதியைக் கொடுக்குமாம்.

புல்லாங்குழல், நாதஸ்வரம், இதெல்லாம் கவலையால் ஏற்படற நோய்களைக் குணப்படுத்தி மனதில் மகிழ்ச்சியைப் பெருக்குமாம்.

மிருதங்கம் மாதிரியான தாள வாத்தியங்கள் எல்லாம் – மனத்தளர்ச்சி, மனச்சிதைவு இதையெல்லாம் குணப்படுத்துமாம். மறதியைப் போக்குமாம். ஞாபகசக்தியைப் பெருக்குமாம்.

இப்படி என்னென்னமோ சொல்றாங்க..! அதனால் இதைப் பத்தியெல்லாம் நிறைய ஆராய்ச்சி பண்ணினா துல்லியமா விஷயங்களைத் தெரிஞ்சிக்கலாம்.

இந்தத் தகவலை என்னுடைய நண்பன் ஒருத்தன் கிட்டே சொல்லிக்கிட்டிருந்தேன். அவனுக்கு சங்கீதம்ன்னா என்னன்னே தெரியாது. அவன் ஒரு நாள் அவசரமா என்னைத் தேடி வந்தான்.


“சேர்! வீணை இசை இரத்தக் கொதிப்பைக் குறைக்கும்ன்னு நீங்க சொல்றீங்க.

ஆனால், எங்க பக்கத்து வீட்டில் ஒரு வீணை வித்துவான் இருக்கார். நேத்திக்கு அவருக்கே இரத்தக் கொதிப்பு திடீர்ன்னு ஏறிப்போச்சு தெரியுமா?”ன்னான். எனக்கு ஆச்சரியமா இருந்தது..!

“நேத்திக்கு என்ன நடந்தது அவங்க வீட்டில்? அவர் வீணை வாசிச்சாரா?”ன்னு கேட்டேன்.

“இல்லை சேர். அவர் வீணையை எடுத்து நான் வாசிச்சேன்!’’ அப்படிங்கறான் இவன்!

சமூக வலைத்தளங்களில் நீங்கள் படைக்கும், பகிர்ந்த, படித்துச் சுவைத்த சுவாரஸ்யமான விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அத்தோடு சிரிப்புத் துணுக்குகள், வித்தியாசமான செல்பிகள், புகைப்படங்கள், நச்சுன்னு நாலு வரியில் எழுதப்படும் ஹைக்கூ உள்ளிட்டவற்றையும் எம்மோடு பகிர்ந்துகொண்டால் சிறப்பானதை தெரிவுசெய்து “தமிழன் தர்பார்” பக்கத்தில் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.



காரைக்கவி

# சீத்துவக்கேடு 154



எங்கட ஊரில தனிய வைரவர் எண்டில்லை. காளி, வீரபத்திரர், கண்ணகி, நாச்சிமார் அல்லது கன்னியர், முனியப்பர், சேவகர், நாகதம்பிரான் எண்ட மற்ற சிறு தெய்வங்கள் இல்லாட்டில் காவல் தெய்வங்களுக்கும் நிறைய கோயில்கள் கன குறிச்சியளிலும் இருந்தன. உந்தக் கோயில்கள் எல்லாத்திலையும் கூட பொங்கல், மடை எல்லாம் வலு விசேஷமா நடக்கும்.

எங்கட ஊரில களபூமியில் ஒரு மிகப்பெரிய காளி கோயில் இருந்தது. அந்தக் கோயிலைச் சுத்தி மர வேலை, இரும்பு வேலை செய்யற ஆக்கள் நிறைய இருந்தவை. சிறந்த மிருதங்க, இசை, நாடகக் கலைஞர்கள் எண்டு வலு கெட்டிக்காரர் கனபேர் இருந்தவை.

அதால வருஷா வருஷம் நடக்கிற அந்தக் கோயில் அலங்காரத் திருவிழாவில விடிய விடிய நாடகம் வில்லுப்பாட்டு, இசை நிகழ்ச்சி எண்டு திருவிழா களைகட்டும்.

அதேபோல் மணற்காட்டு மாரி அம்மன் கோயில், பாலாவோடை அம்மன் கோயில், சிவன் கோயில் எல்லாத்திலையும் காளிக்கு தனிக்கோயில் இருந்தது. உந்தக் கோயில்கள் எல்லாத்திலையும் சூலம் கண்டிப்பா நட்டிருக்கும்.

முந்தி பறங்கியர் ஆட்சியில எங்கட ஊரில சூல வழிபாடு மிக முக்கியமான ஒண்டா இருந்தது. முந்தி பறங்கியர் எங்கட நாட்டுக்கு யாவாரம் செய்ய எண்டு வந்துபோட்டு பிறகு கொஞ்சம் கொஞ்சமா நாட்டைப் பிடிச்சவை எண்டு அப்பு சொல்லுவார்.

உப்பிடி உவங்கள் பறங்கியர் எங்கட நாட்டைப் பிடிச்சிருந்த செல்வங்கள் எல்லாத்தையும் கொள்ளை அடிச்சு தங்கட நாட்டுக்கு கொண்டுபோனது மட்டுமில்லாமல் பிறகு தங்கட சமயத்தை மெல்ல மெல்ல பரப்பினவங்கள் எண்டுவார் அப்பு.

உப்படி சமயத்தைப் பரப்பேக்கை அவங்கள் எங்கட சமயக் கோயில்களை இடிச்சு கொள்ளை அடிச்சதும் இல்லாமல், அந்தக் கோயில்களை இடிச்ச கல்லுகளை கொண்டுபோய் தங்கடை சமயத் தலங்களையும் கோட்டைகளையும் கட்டினவங்கள் எண்டுவார் .

உப்பிடி எங்கட ஊரில வியாவிலில இருந்த பழைய ஐயனார் கோயில் ஒண்டை இடிச்சுக் கொண்டுபோய்த்தான் காரைநகர் கடல் கோட்டையை கட்டினவங்களாம் எண்டு அப்பு சொல்லுவார்.

உப்பிடி உவங்கள் சமயத்தை பரப்பேக்கை எங்கட கனபேர் படிப்புக்கும் பதவிக்கும் சலுகைகளுக்கும் மற்ற வசதிகளுக்காகவும் சைவ சமயத்தை விட்டு வேதத்துக்கு மாறினவை எண்டு அப்பு சொல்லுவார்.

உது எப்பிடி எண்டால் ஒருத்தன் கட்டின கோமணத்தை எடுத்து இன்னொருத்தன் கட்டின மாதிரி எண்டுவார் அப்பு.

உப்பிடி உவங்கள் வெருட்டி உருட்டி சமய மாற்றத்தை கடுமையா செய்யேக்கை எங்கட ஆக்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் எங்கட சமயத்தை கட்டிக் காத்தவையாம். அப்பிடி சமயத்தை காப்பாத்திறதில முக்கிய பங்கு உந்த சூலங்களுக்கும் சிறு தெய்வ வழிபாட்டுக்கும் இருந்தது எண்டு அப்பு சொல்லுவார்.



அதிலும் கூட எல்லாரும் சூலம்தான் வைச்சுக் கும்பிட்டவையாம் பறங்கியள் சோதினைக்கு வரேக்கை உந்தச் சூலம் சிலுவை மாதிரி மாறி இருக்குமாம். அதால அவங்கள் ஊரில உள்ள ஆக்கள் தங்கட சமயத்தைத்தான் பின்பற்றுகினம் எண்டு சந்தோசமா போவாங்களாம். பிறகு அவங்கள் போக, பழையபடி சூலமா மாறுமாம் எண்டு அப்பு சொல்லுவார்.


அதால எங்கட சமயத்தைக் காப்பாத்தி இண்டைவரைக்கும் வைச்சிருக்கிற சிறு தெய்வ வழிபாட்டைச் சரி, சூலத்தைச் சரி நாங்கள் எந்தக் கரைச்சல் வந்தாலும் எந்த நிலைமையிலையும் கைவிடப்படாது கண்டியோ எண்டு அப்பு சொல்லுவார்.

அப்பு உப்பிடிச் சொல்லேக்கை, ''ஓமோம் அவங்கள் முந்தி விரதம் பிடிக்கிற ஆக்களையும் சாப்பிட்ட வாழை இலையை வைச்சுக் கண்டுபிடிச்சுக் கரைச்சல் குடுத்தவங்களாம். அப்பிடி அவங்களின்ரை கரைச்சல் தாங்கேலாமல் சாப்பிட்ட வாழை இலையை எங்கட ஆக்கள் அவங்களின்ரை கண்ணில படக்கூடாது எண்டு வீட்டுக் கூரைக்கு மேல எறிஞ்சவையாம்'' எண்டா ஆச்சி.

உப்பிடி முந்தி அவை எங்கட ஆக்கள் அவங்கள் பறங்கியருக்குப் பயந்து வீட்டுக் கூரையில சாப்பிட்ட பிறகு வாழை இலையை எறிஞ்சு போட்டதை இப்பவும் விளக்கம் இல்லாமல் எங்கட ஆக்கள் ஒரு சடங்கு மாதிரி செய்துகொண்டு வருகினம் எண்டு சொல்லி ஆச்சி சிரிச்சா.

**(தொடரும்)**

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

### மேஷ ராசி அன்பர்களே!

பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய வாரம். கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் உங்களால் சமாளித்துவிட முடியும். குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது பொறுமையும், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையும் அவசியம். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தீர்ந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம். சகோதரர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைப்பது தாமதமாகும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

வருமானம் திருப்தி தரும். சிறிது சேமிக்கவும் முடியும். உறவினர்கள் வருகையால் தடைப்பட்ட சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடி முடியும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் செய்தி கிடைக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது. பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

### மிதுன ராசி அன்பர்களே!

அனுகூலமான வாரமாக இருக்கும். புதிய முயற்சிகள் வெற்றி கரமாக நிறைவேறும். உறவினர் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்புண்டு. முக்கிய முடிவுகளை நன்கு யோசித்து எடுப்பது நல்லது. வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும். வியாபாரத்தை விரிவுபடுத்த அல்லது வேறு இடத்துக்கு மாற்றும் முயற்சிகள் சற்று இழுபறியாக இருக்கும் என்பதால் பொறுமை அவசியம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு நிம்மதியான வாரம். குடும்பப் பொறுப்புகளை உற்சாகமாக நிறைவேற்றி பாராட்டுப் பெறுவீர்கள்.

### கடக ராசி அன்பர்களே!

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கண வன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர் வருகை சில குழப்பங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது. வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். குடும்ப நிர்வாகத்தை கவனித்துவரும் பெண்கள், குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வீண் செலவுகளுக்கும் இடமில்லை. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக் கூடும் என்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வழக்குகள் மற்றும் கடன்கள் விடயத்தில் முன்னெச்சரிக்கை அவசியம். வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகளுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் சிறுசிறு சலனம் ஏற்படக்கூடும். புகுந்தவீட்டு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை மிக அவசியம்.

### கன்னி ராசி அன்பர்களே!

பணவரவு திருப்திகரமாக இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் சாத்தியம் உள்ளது. சகோதர வகையில் இருந்துவந்த கருத்துவேறுபாடுகளும் கசப்புணர்வுகளும் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உங்கள் முயற்சிக்கு நண்பர்களின் பூரண ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். பிள்ளைகள் மூலம் ஆதாயம் கிடைக்கக்கூடும். தாயாரின் உடல்நலனில் கவனம் செலுத்தவும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு சற்று சிரமமான வாரம் என்றே சொல்ல வேண்டும். பிள்ளைகள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

### துலா ராசி அன்பர்களே!

கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். சிரமமான நேரங்களில் நண்பர்கள் உதவி செய்வார்கள். பழைய கடன்களைத் தந்து முடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். பணவரவு போதுமான அளவு இருக்கும். செலவுகளும் அளவாகவே இருக்கும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கி இணக்கமான சூழ்நிலை உண்டாகும். விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருப்பது மகிழ்ச்சி தரும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திருப்திகரமான வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும். உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு மனஸ்தாபங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிவு உண்டாகக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். விற்பனையும் சுமாராகத்தான் இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். வேலைக்குச் சென்றுவரும் பெண்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். சலுகைகள் கிடைக்கும்.

### தனுசு ராசி அன்பர்களே!

குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் நிறைந்திருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சமாளிக்கும் அளவுக்குப் பணவரவு இருக்கும். வாரப் பிற்பகுதியில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிலருக்கு தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நண்பர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதல் உழைப்பு தேவை. சக வியாபாரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்பட்டாலும், பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் உற்சாகமாகச் செயற்பட வைக்கும்.

### மகர ராசி அன்பர்களே!

குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் நீங்கி, மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந் திருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் மனவிருப்பத்தின்படி நடந்துகொள்வார்கள். தாயின் தேவைகளைப் பூர்த்திசெய்து, மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை எதுவும் இருக்காது. வாடிக்கையாளர்கள் அனுசரணையாக இருப்பார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதை சஞ்சலப்படுத்தும். கணவருடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு.

### கும்ப ராசி அன்பர்களே!

உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு தந்தைவழி உறவினர்கள் வருகையால் வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்டநாளாகச் செலுத்தமுடியாமல் இருந்த தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றி நிம்மதி பெறும் வாய்ப்பு ஏற்படும். சகோதரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தருவார்கள். வாரப் பிற்பகுதியில் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவதற்காக பாடுபடுவீர்கள். அதிக உழைப்பின் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்பட்டு நீங்கும். குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் நீங்கும்.

### மீன ராசி அன்பர்களே!

பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைப்பது இழுபறியாகும். வழக்குகளில் சாதகமான போக்கு ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயம் கிடைக்கவும் வாய்ப்புண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் சிலருக்கு சிறியளவில் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

தமிழன் தொடர்கதை

# யார் அது?

வன்னித் தமிழ் மறவன்

அத்தியாயம் - 11

ராமுக்கு என்ன நடந்தது? ஏன் அவனும் படுத்து கிடக்கிறான்? என்று நேர்ஸிடம் மறுபடி சீனு கேட்கவே,

நேற்று இரவு ராமால் தூங்க முடியவில்லையாம். நீங்க நினைத்து பயப்படுவதுபோல் அவருக்கு ஏதும் இல்லை.

இரவு இரண்டு மணிபோல் தேவை டாக்டர் பார்க்க வரும்போது ராம் தூங்காமல் தேவையே பார்த்தபடி இருந்திருக்கிறார். அதனால் தேவுக்கு டாக்டர் சிலீபிங் இங்ஜெக்சன் கொடுத்து தூங்க வைத்துவிட்டு அவர் கையில் மானிடர் பொருத்தி விடும்படி கூறியிருக்கிறார். பயப்படுவதுபோல் ஏதுமல்லை. அவர் நன்றாக தூங்க வேண்டும் என்பதற்காக டாக்டர் இப்படி செய்திருக்கிறார்.

அவருக்கு தூக்கம் சரியாக இல்லை என்பதால் பல பிரச்சினை களுக்கு ஆளாகவேண்டிய சூழ்நிலை உருவாகும். ராமின் மனநிலையில் பிரச்சினை வந்துவிடக்கூடாது என்றே தூங்க வைத்ததாக என்னிடம் கூறினார்.

இன்னும் இருபது நிமிடத்தில் எழுந்துடுவார். நீங்கள் யோசித்து ஏதும் குழப்பிக்கொள்ள வேண்டாம். இதனால் ராமுக்கு நன்மையே என்று கூற, மன ஆறுதலுக்கு வந்த சீனுவும் ரமணாவும் ராமுக்கு நல்ல ஓய்வு கிடைத்திருக்கிறது என்ற மகிழ்ச்சியுடன் ராம் விழிக்கும்வரை காத்திருந்தார்கள்.

சிறிதுநேரத்தில் ராம் விழிக்கவே அருகில் சென்ற ரமணா, சீனுவிடம் தேவுக்கு இரவு நடந்த அனைத்து சம்பவங்களையும் கூற ஒரு நிமிடம் பதறிப்போனார்கள்.

இதேவேளை தேவின் தங்கை கயலின் திருமணம் இன்னும் மூன்று நாட்களில் என்பதால் அங்கே தேவின் வீட்டில் திருமண வேலைகளை ஆரம்பிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டமையால் சீனுவும் ரமணாவும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். இன்றே அவர்கள் போகவேண்டி இருந்தது. வைத்தியசாலையில் தேவை கவனிக்கும் பொறுப்பை ராம் எடுத்துக்கொண்டான்.

அப்போது ராம், “டேய் சீனு சாயங்காலம் ஆறு மணிக்கு ACP எடிஷ் வரச்சொல்லி இருக்கிறார். போகவேணும் வந்துடுங்கடா.”

“ஓகேடா போவோம். நாங்களும் வந்துடுறோம்” என்று கூறிவிட்டு தேவ் வீட்டிலுள்ள திருமண வேலைகளை பார்க்கச் சென்றார்கள். ராமும் தேவ் கூடவே அருகில் இருந்து கவனித்துக்கொண்டான். ஒருவழியாக நேரங்களும் விரைந்தோடவே மாலையானதும் ராம் ACP எடிஷ்க்கு கோல் பண்ணினான்.

“சார் நான் ராம். ஆறு மணிக்கு ஜெரிஸ்டார் ஹோட்டலுக்கு வாறோம்.”

“வேண்டாம் வேண்டாம். நான் நாளை கூறுகிறேன். இன்று வேறு வேலையாக ஒரு இடத்திற்கு வந்திருக்கிறேன். நாளை வாருங்கள் பேசிக்கலாம்” என்று ACP எடிஷ் கூறவே, நண்பனுக்கு இப்படி ஆனதற்கு யார் காரணம் என்று தெரிந்துகொள்ள முடியவில்லையே என்று வருந்தியவன் ரமணாக்கும் சீனுக்கும் கோல் பண்ணி, ‘‘இன்று ஹோட்டலுக்குப் போகவில்லை. நாளை பேச வரச் சொல்லி இருக்கிறார்’’ என்று கூறிவிட்டு இன்று இரவு அங்கு நின்றே வேலைகளைப் பார்க்கக் கூறினான் ராம்.

அதற்கு அவர்களும் இரவுவேளை தேவ் வீட்டிலே நின்று வேலைகளை செய்ய முடிவு பண்ணினார்கள்.

வைத்தியசாலையில் தேவை பார்த்துக் கொண்டிருக்கும் ராமுக்கு நேரம் போவதே தெரிவதில்லை. அப்படியாக ஆறு மணியானதும் இரவு சிப்ட் நேர்ஸ் உள்ளே வந்தார்.



“ஹாய் ராம். இரவு நன்றாக தூங்கினீர்களா? சிலீபிங் இங்ஜெக்சன் கொடுத்தோம். இப்போ உங்களுக்கு எப்படி உடல்நிலை இருக்கிறது?” என்று நேற்று இரவு சிப்டில் இருந்த நேர்ஸ் கேட்கவே,

“இப்போ உடல்நிலை பரவாயில்லை நேர்ஸ். தேவை பார்த்து சொல்லுங்க என்ன முன்னேற்றம் இருக்கு’’ என்று கூறவும்,

‘‘தேவின் இன்றைய ரிப்போட்டை பார்த்தவர் எந்த முன்னேற்றம் இருப்பதாகவும் ரிப்போ|;டில் இல்லையே’’ என்றார்.

அப்படியே தேவ் பற்றி விசாரித்த அந்த நேர்ஸ், ராமைப் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அப்போது ராம், “நேர்ஸ் உங்க பெயர் என்ன கேட்கலாமா?’’ என்று கேட்கவே,

“இதில் என்ன தவறு இருக்கிறது. பெயர் தானே. வேறேதும் தவறான கேள்வி இல்லையே. என் பெயர் சொப்னா.”

விழிகளை விரித்து பார்த்தவன்,

‘‘இப்போ உங்க பேர் என்ன என்று சொன்னீங்க’’ என்று மறுபடி கேட்கவே,

‘‘சொப்னா’’ என்று மறுபடி கூறவே,

இப்படி பிரச்சினையில் வந்து மாட்டிட்டோமே. என்ன செய்வது என்று புரியாமல் அறையின் வெளியிலே வந்து நின்றான்.

உடனே சீனுவிற்கு கோல் செய்த ராம்,

“சீனு டேய் நாம இவ்வளவு செய்ததுக்கு பலன் இல்லாமல் போகப் போகிறது. ஒண்ணுமே புரியலடா என்ன செய்றது.”

“டேய் பதட்டப்படாம முதல் என்ன பிரச்சினை அதைச் சொல்லுடா.”

“இங்க தேவ் அறையில் இருக்கும் நேர்ஸ் வேறு யாரும் இல்லைடா. கயல் தோழி பூர்ணாவின் அக்கா சொப்னா தான்டா. இப்போதான் பெயர் கேட்டு தெரிஞ்சுகொண்டேன்.”

ஆனால், நாம் யாரென்று தெரியவில்லை. அவங்களுக்கு தெரிஞ்சுதுண்ணா எல்லாம் போய்டும்.

“என்னடா ராம் என்ன சொல்லுறாய்? அப்படி ஏதும் நடக்காது. நடந்ததை சொல்லி அவகூட ஏதாவது பேசி சமாளிடா. கயல் மேரேஜ் மட்டும் இது தெரியாமல் பாத்துக்க சொல்லுடா.”

“ஓகேடா சீனு நான் பாத்துகிறேன். நீ வேலையைப் பார்” என்று கூறிய ராம், மறுபடி உள்ளே வந்தவன்,

‘‘சாரி அவசரமா கோல் பண்ணனும். அதுதான் போனேன்’’ என்று கூறியபடி இருக்கையில் அமர்ந்தான்.

அப்படியே நேர்ஸ் சொப்னாவிடம்,

“நாங்கள் யார் என்று உங்களுக்குத் தெரியாதா?’’ என்று கேட்கவே,

“இல்லை ராம். இங்கு வந்த பின்னே உங்களை - தேவை - உங்கள் நண்பர்களை எனக்குத் தெரியும்’’ என்றார்.

அப்போது ராம்,

“உங்கள் தங்கை பூர்ணா தானே.”

“ஆமாம். அது எப்படி உங்களுக்குத் தெரியும்?”

“பூர்ணாவின் தோழி இப்போ திருமணமாகப் போகும் கயல்தானே.”

“ஆமாம். இது எல்லாம் உங்களுக்கு எப்படி...”

“அந்தக் கயலின் அண்ணன்தான் இந்த தேவ். தேவின் நண்பர்கள்தான் நாங்கள்’’ என்று ராம் கூறவே அதைக் கேட்டு மலைத்துப்போன பூர்ணாவின் அக்கா, சிறிது நிமிடம் பேசாதிருந்தார்.

அந்த வேளை, சொப்ணாவிற்கு வீட்டிலிருந்து இரவு வேளைக்கான உணவை எடுத்துக் கொண்டு வந்த பூர்ணா, ஹொஸ்பிட்டல் வெளியே நின்றுகொண்டு, உணவைக் கொடுப்பதற்காக எங்கே நிக்கிறாய் என்று கேட்பதற்கு சொப்ணாவிற்கு கோல் பண்ணினார்.

வந்த பூர்ணாவின் கோலை அட்டன் செய்தவர் முதலாவதாகவே கூறியது.....

யார்?...அது....

தொடரும்.....

## சொல்ல மறந்த கதை-10

### 1825-1898(தென்னிந்தியாவில்)

மாட்டோட மல்லுக்கட்டி
வயக்காட உழுத சனம்....
சேலத்துல ஓரிடத்தில்...
கரும்பு தோட்டம்
செஞ்ச சனம்.....

பொழப்புக்காக..
பொறந்த அந்த பொன்னான
மண்ணவிட்டு...
தொலைதூரம் வந்துருக்கு...

மாந்தை கடற்கரையில்...
தொடங்குது நடைபயணம்....
வெயில் எரிக்கிறது....
கையும் கணக்கிறது....

நடையா நட நடந்து...
காலும் கடுக்கிறது.....
சுட்டெரிக்கும் மணல்...
பாத கால கிழிக்கிறது....

“மேலு எரியுதம்மா....
வாந்தி வாரதப்போல்
இருக்குதம்மா....”

சின்னப்பய ராசன் இப்ப
தேம்பி தேம்பி
அழுவுறா....

அழுவாத எம்மவனே...
இன்னும் கொஞ்சம்
தூரம் தாண்டா...
கருப்பட்டி வாங்கி தாரே
மெல்ல நடந்திடடா....

மவன தேத்துகிற....
ராசன் அப்பே முனியாண்டி....
நடக்கும் நடய பாத்து....
பாதைகளும் அழுகிறது..

பத்து கட்ட தூரம்
இப்ப வந்திருக்கும்
இந்த சனம்..

கூட வந்த கூட்டத்துல
தூரமா ஒரு கூச்சல் சத்தம்
என்னா நடந்துருக்கும்...
ஓடோடி பாக்குராங்க...
வந்தவிங்க எல்லாரும்....

சுப்பையானு
ஒத்த ஆளு...
சுருட்டு கூட புடிப்பாரு....
பஞ்சம் பொழைக்க இங்க
மவராசே வந்தாரு....

“மூக்கு வாயில் இரத்தம்
வந்து...
மூர்ச்சையாகி
கெடக்குராரு....”

பச்சிலய தேடிவந்து
கசக்கி எல்லா ஊத்துராங்க
ஒன்னும் சரிவரல.......

மூச்சி பேச்சி
ஒன்னும் இல்ல....
கண்ணு குழி ஆகிருச்சி....
என்னாச்சி ஏதாச்சி...
கூட வந்த மனுசனுக்கு...

நெஞ்சி மேல தலய வச்சி..
நாடி துடிப்பு ஏதும்
இருக்குதானு
உத்து கேட்டுக்கிறா ...
முனியாண்டி.....

உசுரு போகவில்ல..
நாடி துடிப்பிருக்கு....
பச்சத்தண்ணி தெளிச்சிவிட்டு....
மரத்து நெழலு கிட்ட
கொஞ்ச நேரம் தலசாச்சா.....

போன சீவே வந்துருனு.
பொலம்புகிறா அந்த பய...

என்ன இங்க சத்தமின்னு
கூட்டத்த ஒடச்சிக்கிட்டு
ஓடி வந்தா கங்காணி..

மயங்கி கெடக்கும் அந்த
சுப்பையாவ பாக்குறாங்க....

சீக்கு வந்த சொத்தப்பய
பொழப்புக்கு இவே
ஒதவ மாட்டா......

காப்பாத்தி என்னப்பன்ன
போட்டு புட்டு வந்துருனு
கங்காணி ஆணயிட்டான்......

இந்த சேதி கேக்கயில
இடி விழுந்த சேதியாட்டம்...
இடிஞ்சி போயி நிக்கிதய்யா
கூடி வந்த கூட்டமெல்லாம்.......

நம்ம
ஒன்னுமண்ணா வாழ்ந்தோமே...
இப்ப
உசுரு இழுத்துக்கிட்டு
கெடக்கயில...
எப்புடி நாம உட்டுப்புட்டு
போகுறது.....

ஒப்பாரி வச்சி இப்ப
கத்தி கதருராங்க..
பொம்பளங்க கூட்டமெல்லாம்...

சீவன் இன்னும் போகவில்ல...
அவ கண்ண கொஞ்சம்
பாக்கயில..
அந்தரத்தில் விட்டுப்புட்டு...
எப்புடி தான் போகுறது..

கங்காணியின் அதிகார சத்தம்
அங்க பட்டாசு சத்தம் போல
வெடியா வெடிக்கிறது...

சுப்பையாவின் உசுரு இங்க
துடியா துடிக்கிறது...
கூட வந்த மக்க மனம்
தவியா தவிக்கிறது....

கொலசாமி ஐயனாரே
என்ன செய்ய நாங்க இப்போ.....
நீயாச்சும் சொல்லுவியா....
பாப்பாத்தி வேண்டுகிறாள்....

தொடரும்...

எம்.ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் சிறுகதை



# பாதியில் முடிந்த படிப்பு

- ஸாலிஹ் அஸீம்

ப்ரியா அவளின் வகுப்பிலேயே நன்கு படிக்கக்கூடிய மாணவி. ஆசிரியர்கள்கூட அவர்கள் வாயில் விரலை வைக்கும் அளவுக்கு அவளின் படிப்பு சிறப்பாக அமைந்திருந்தது.

ஒரு போட்டியாக இருந்தாலும் சரி, கலை இலக்கிய நிகழ்வாக இருந்தாலும் சரி, ஏன் படிப்பாக இருந்தலும் சரியே. அவள்தான் முதலிடம். அந்தளவுக்கு ப்ரியா கெட்டிக்காரியாக விளங்கினாள்.

அவளுக்கு ஒரு அக்கா இருந்தா. அவளுக்கு பல இடங்களில் திருமணம் பேசியும் அவை ஒன்றுமே சரியாக அமையவில்லை. அதற்குக் காரணம் அத்திருமண ஒப்பந்தகளுக்காக அவர்கள் கேட்கும் சீதன இலஞ்சத்தை கொடுக்குமளவுக்கு வசதி அந்த ஏழைக் குடும்பத்திற்கு இருக்கவில்லை.

இதனால் அக்காவின் திருமணம் தள்ளிக்கொண்டே சென்றது. ப்ரியாவின் படிப்பு அக்காவின் திருமணம் இரண்டுக்கும் இடையில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்த அவர்களின் பெற்றோர், கடைசியில் ப்ரியாவின் படிப்பைவிட அவள் அக்காவின் திருமணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க முடிவெடுத்தனர். காரணம், கல்வியா வாழ்க்கையா என்ற போராட்டத்தில் வாழ்க்கைதான் முக்கியம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

‘‘ப்ரியா... எங்களை மன்னிச்சிடுமா. உன்னுடைய படிப்புக்கு செலவு செய்வதால் அக்காவின் திருமணம் தள்ளிப் போகுதுமா. பருவத்தில் செய்யாத பயிரும் திருமணமும் பயனற்றதா போயிடுமா. அதனாலே இப்போதைக்கு உன்னோட படிப்புக்கு எங்களால செலவழிக்க முடியாதுமா. அதனால உன்னோட படிப்பை இத்தோட நிறுக்கிக்கோமா’’ என்று அவளுடைய அம்மா கெஞ்சலுடன் சொல்ல, அது அவளுக்கு தலையில் இடி விழுந்ததைப் போலவே இருந்தது.

இருந்தாலும் அதனை தாங்கிக்கொண்ட ப்ரியா, ‘சரிமா... அப்படியே செய்றேம்மா’’ என்று தன்னுடைய அக்காவுக்காக தனது கல்வியை இடைநிறுத்த முடிவெடுத்தாள்.

இரண்டொரு மாதங்கள் சென்றிருக்கும் ப்ரியாவுக்கு கற்றுக்கொடுக்கும் அவளுடைய திறமையை நன்குணர்ந்த ஆசிரியை அவளுடைய உறவினரிடம் விடயத்தைச் சொல்ல இரண்டு மகன்களைக்கொண்ட அவ்வுறவினர்கள், நாங்க மூத்தவளுக்கு நம்முடைய மூத்த மகனை திருமணம் முடித்து கொடுக்கிறோம். ப்ரியாவின் படிப்பு முடிந்து அவளை இரண்டாவது மகனுக்கு மணம் முடித்துக் கொடுக்கிறோம். அதுவரைக்கும் ப்ரியாவோட படிப்புக்கான செலவையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று அந்த நல்லவர்கள் சொல்ல, அதனைக் கேட்டு ப்ரியாவின் குடும்பமும் மிகவும் மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக்கொண்டது.

இருந்தாலும் அவளின் அக்கா தனது திருமணத்திற்கு சில காலம் வேண்டும் என சொல்ல, அதனையும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அதனால் ப்ரியாவின் படிப்பு மீண்டும் தளிர்க்கத் தொடங்கியது. அவளுக்கும் மனதுக்குள் மகிழ்ச்சி பொங்கியது. ஒரு வருடம்வரை சென்றும் விட்டது.

அக்காவோ இன்னுமின்னும் திருமணத்தை தள்ளிப்போட்டுக் கொண்டேயிருந்தாள்.

இதனால் பொறுமையிழந்த மாப்பிள்ளை வீட்டார் திடீரென ப்ரியாவின் வீட்டுக்கு வந்தார்கள். வந்தவர்கள்,

‘‘இங்க பாருங்க. ஒரு வருடத்திற்கு மேலயும் ஆகிப்போச்சு. இன்னும் உங்களுடைய மகள் திருமணத்தை தள்ளிப்போடுவது அந்தளவுக்கு நல்லதில்லை. அதனாலே இண்டைக்கு திருமணம் முடிக்க முடியுமா, முடியாதா என்று ரெண்டுல ஒரு முடிவை எங்களுக்கு சொல்லுங்க. அப்பதான் நாங்களும் வேறு ஏதாவது செய்யலாம். மாப்பிள்ளையின் அப்பாவுக்கும் சுகமில்லாமலிருக்கு’’ என்று அவர்கள் சற்று கடுமையாகவும் கண்டிப்பாகவும் கேட்க,

திக்குமுக்காடிப்போன ப்ரியாவின் அம்மா, உடனே அவளின் அக்காவை அழைத்து விடயத்தைச் சொல்லி சம்மதத்தைக் கேட்டதுடன்,

‘‘இதற்குமேல் தள்ளிப்போட முடியாது. நீ கட்டாயம் சம்மதம் தெரிவிக்கத்தான் வேண்டும்’’ என்று கட்டாயமாகக் கூறினாள்.

அதனைக் கேட்ட அக்கா சற்றும் தாமதிக்காம,

‘‘என்னால் அப்படி அவசரத்திற்கெல்லாம் திருமணம் செய்ய முடியாது. அவசரமென்றால் வேறு யாரையாவது மணந்துகொள்ள சொல்லுங்கள்’’ என்று எடுத்தெடுப்பில் சட்டென்று சொல்ல, கடுப்பாகிவிட்ட மாப்பிள்ளை வீட்டார்,

‘‘உங்க மகளுக்கு இந்தளவு திமிர் இருக்கக்கூடாது. இப்பவே இப்படியென்றால் திருமணத்திற்கு பின் எப்படியிருப்பாள்? அதனாலே எங்களுக்கு இந்தத் திருமணம் வேண்டாம். நாங்க ப்ரியாவுக்கு செலவழித்த படிப்புச் செலவை தந்துவிடுங்கள். நம்முடைய உறவை இதனோடு முடித்துக் கொள்வோம்’’ என்று கடுமையாக சொல்லிவிட்டனர். அதோடு எழுந்தும் சென்றும் விட்டனர்.

இதனால் அவளை கண்டபடி திட்டினாள் ப்ரியாவின் அம்மா.

மறுநாள் எழுந்து பார்த்தபோது ப்ரியாவின் அக்கா அங்கிருக்கவில்லை. பின்னர் பதறியடித்துக்கொண்டு தேடியபோதுதான் அவளுடைய காதலனுடன் அவள் ஓடிவிட்டது தெரியவந்தது. அதனால் பாதியில் ப்ரியாவின் படிப்பு முடிய, வேறு வழியில்லாமல் அவள் உடுப்பு கடைவொன்றுக்கு வேலைக்கு போகத் தொடங்கினாள், படிப்பு கடனைச் செலுத்தி முடிப்பதற்காக.

முற்றும்

# உதைபந்து விருது மேடையில் எட்டு வைத்தியர்களுக்கு கௌரவம்



உதைபந்து உலகில் பிரபலமான யு.ஈ.எவ்.ஏ. சம்பியன்ஸ் லீக் விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது. ஐரோப்பிய உதைபந்தில் மிக உயரிய அந்தஸ்து கிடைக்கும் மேடை இதுவாகும். கடந்த 2020-21 பருவகாலத்திற்கான சிறந்த வீர வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் என பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த விருது மேடையில் UEFA President Award என்ற சிறப்பு விருதும் வழங்கப்பட்டது. 8 பேர் அந்த மேடையில் ஏறி விருதை வாங்கினர். இந்த விருதை வாங்கியது வீரர்களோ அல்லது பயிற்சியாளர்களோ அல்ல. அவர்கள் அனைவரும் வைத்தியர்கள்.

உதைபந்து அரங்கில் வைத்தியர்கள் ஏன் கௌரவிக்கப்பட்டார்கள் என்ற கேள்வி தற்போது எழுகிறது. இதற்கான காரணம் தெரிந்துகொள்ள இரண்டு மாதம் முன்செல்ல வேண்டும்.

**2021 ஜூன் 12 யூரோ கிண்ணம்**

2021 உதைபந்து தொடரில் டென்மார்க், பின்லாந்து அணிகள் மோதிய போட்டி டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடைபெற்றது. ஆட்டத்தின் 42ஆவது நிமிடத்தில் யாரும் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்தது. எவே த்ரோவின் போது பந்தை வாங்கச் சென்ற டென்மார்க் நட்சத்திர வீரர் கிறிஸ்டியன் எரிக்சன் திடீரென கீழே விழுந்தார். எதுவும் நடக்காத நிலையில், அவர் கீழே விழுந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அவர் அசைவற்றுக் கிடக்க, வைத்தியர்கள் விரைந்து களத்துக்குள் நுழைந்தனர். எரிக்சனுக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அறியப்பட்டது. மொத்த உதைபந்து உலகமும் உறைந்து போயிருந்தது. ஆட்டத்தைப் பார்க்கவந்த எரிக்சனின் மனைவி சப்ரினா களத்துக்குள் வந்து கதறி அழுகிறார். மொத்த உலகமும் கண்ணீர் சிந்தத் தொடங்கின.

நீண்ட நேரம் வைத்தியர்கள் எரிக்சனுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டே இருந்தார்கள். டென்மார்க் வீரர்கள் எரிக்சனைச் சுற்றி வட்டம் அமைத்து பாதுகாத்தனர். என்ன நடக்கிறது என்பது தெரியாமல் ரசிகர்கள் பதறிப்போயிருந்தனர். எரிக்சனுக்கு களத்திலேயே CPR, Defibrillation கொடுத்து கண்விழிக்கவைத்தனர் களத்தில் இருந்த வைத்தியர்கள்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு ஸ்ட்ரெச்சர் மூலம் களத்திலிருந்து எரிக்சனை அழைத்துச் சென்றனர். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து, வைத்தியசாலையில் எரிக்சன் கண்விழித்துவிட்டதாகவும், உடல்நிலை ஓரளவு சீராகியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. சில மணி நேரம் ஒட்டுமொத்த உதைபந்து உலகையும்



பதறவைத்தது அந்தச் சம்பவம்.

மிகவும் பரபரப்பான ஒரு சூழ்நிலையில் மிகவும் துரிதமாகச் செயற்பட்டவர்களை எல்லோரும் பாராட்டத் தொடங்கினார்கள். உடனடியாக வைத்தியர்களை களத்துக்குள் அழைத்த நடுவர் அன்டனி டெய்லர், சிறப்பாக செயற்பட்ட வைத்தியர்கள், அரண் அமைத்த டென்மார்க் அணி என அனைவருக்கும் ரசிகர்கள் மரியாதை செலுத்தினார்கள். அதிலும் குறிப்பாக அந்த வைத்தியர்களைக் கொண்டாடினார்கள். அவர்கள் அன்று துரிதமாகச் செயற்பட்டதால்தான் ஒரு அசம்பாவிதம்



தவிர்க்கப்பட்டது.

அதற்காகத்தான் அந்த மாபெரும் அரங்கு அவர்களுக்கு மரியாதை செலுத்தியிருக்கிறது. இவர்கள் தான் அந்த மரியாதைக்குரிய விருதுகளை வென்றவர்கள்.

On-site medical team

Mogens Kreutzfeldt (chief medical officer), Frederik Flensted (stadium medical manager), Anders Boesen (pitchside emergency doctor), Peder Ersgaard (paramedic)

UEFA Venue Medical Officers

Jens Kleinefeld, Valentin Velikov

Danish national medical team



Morten Skjoldager (physio accompanying the team doctor), Morten Boesen (team doctor), Simon Kjær (Denmark national team captain)

களத்தில் இருந்த வைத்தியர்கள் நால்வர், யு.ஈ.எவ்.ஏ வென்யுவில் இருந்த வைத்திய அலுவலர்கள் இருவர்கள், டென்மார்க் அணியின் வைத்தியர், பிசியோ உள்ளிட்டோர் இந்த விருதுகளைப் பெற்றனர். அத்தோடு, டென்மார்க் அணியின் தலைவர் சிமோன் கியாரும் இந்த விருது பெற்றார். அந்தத் தருணத்தில் இவரது செயற்பாடுகளும் பெருமளவில் பாராட்டப்பட்டன.

பின்லாந்து அணி வீரர்களின் பெட்டிக்கு அருகே எரிக்சன் விழ, டென்மார்க் அணியின் தலைவர் கியார் ஓடோடி வந்தார். அப்படியே குப்புற விழுந்தவரை, சரியான முறையில் படுக்கவைத்து, அவரது சுவாசக்குழாயை நா தடுக்காமல் இருக்கிறதா என்பதை உறுதி செய்தார். உடனடியாக மருத்துவர்களை உள்ளே வரச் சொல்லி சைகை செய்தார்.



அதுமட்டுமல்லாமல், களத்துக்குள் வந்து கண்ணீர் சிந்திக்கொண்டிருந்த எரிக்சனின் மனைவி சப்ரினாவுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினார். வைத்தியர்கள் சிகிச்சை ஆரம்பித்தபோது, தன் அணி வீரர்களை ஒன்றிணைத்து எரிக்சனைப் பாதுகாத்து வட்டம் அமைத்தார். ஒரு தலைவனாக என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்தார். அவரோடு சேர்த்து மொத்தம் 9 பேர் இந்த விருதைப் பெற்றார்கள்.


சிமோன் கியார் இத்தாலியில் விளையாடிக்கொண்டிருந்ததால் அவரைத் தவிர்த்து மற்ற எட்டு பேரும் நேரில் சென்று விருதை வாங்கினார். ஒவ்வொருவருக்கும் அந்த விருதைக் கொடுத்த யு.ஈ.எவ்.ஏ தலைவர் அலெக்சாண்டர் கேஃபரின், அவர்களுக்கு வாழ்த்து சொல்லவில்லை. தன் நன்றியை உரக்கத் தெரிவித்தார். அவர்கள் விருது பெற்றதும், சபையில் இருந்த ஒவ்வொரு அணியின்

பிரதிநிதிகளுமே எழுந்து நின்று உதைபந்து உலகின் நன்றியைத் தெரிவித்தனர்.

கோபன்ஹேகனின் யுரோ தலைமை வைத்திய அலுவலர் மோகன்ஸ் குரூட்ஸ்ஃபெல்ட் தெரிவிக்கையில், "நாங்கள் எங்கள் கடமையைச் செய்யவேண்டும் என்ற நோக்கில் களத்துக்குள் அதிவேகமாக நுழைந்தோம். நாங்கள் என்ன செய்யவேண்டுமோ, என்ன கற்பிக்கப்பட்டோமோ, எதில் கற்றுத்தேர்ந்தோமோ அதைத்தான் செய்தோம். எல்லோருக்கும் எங்களின் பணி என்ன என்பது தெளிவாகத் தெரிந்திருந்தது. அந்தத் தருணத்தில் நாங்கள் உணர்ச்சிவசப்படவில்லை. ஆனால், களத்திலிருந்து வெளியேறியதும் எல்லோரையும் போல் உணர்ச்சி வசப்பட்டோம்" எனத் தெரிவித்தார்.

டென்மார்க் அணியின் தலைவர் சிமோன் கியார் கூறுகையில், "இது எங்கள் வாழ்வில் எப்போதும் நிலைத்திருக்கும் சம்பவம். எனக்கு எரிக்சனை பல ஆண்டுகளாகத் தெரியும். அவருக்கு ஒரு அருமையான குடும்பம் இருக்கிறது. நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள். அவர் சந்தோஷமாகவும் அவர் குடும்பம் நன்றாகவும் இருக்கும் வரை எனக்கு மகிழ்ச்சி" என உருக்கமாகப் பேசினார்.

இப்போது எரிக்சன் நல்லபடியாக குணமடைந்து வருகிறார். அதற்குக் காரணம் இவர்கள்தான். அன்று இந்த வைத்தியர்கள் களத்திற்குள் நுழைந்தபோது பதற்றப்பட்ட உதைபந்து உலகம், அண்மையில் அவர்கள் மேடை ஏறியபோது நெகிழ்ந்து போயிருக்கிறது.



# இனவெறி கோஷத்தால் ஹங்கேரிக்கு அபராதம் விதித்த பீபா

புடாபெஸ்டில் நடந்த உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தகுதிகாண் போட்டியின்போது இங்கிலாந்து வீரர்களைக் குறிவைத்து இனவெறி கோஷம் முன்வைக்கப்பட்டதால் ஹங்கேரிக்கு அபராதம் விதித்த பீபா, குறித்த மைதானத்துக்கும் தடை விதித்துள்ளது.

ஹங்கேரிக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்தப் போட்டியில் விளையாடிய ரஹீம் ஸ்டெர்லிங், ஜூட் பெலிங்ஹாம் ஆகியோரைக் குறிவைத்து இனவெறி துஷ்பிரயோகம் செய்யப்பட்டதையடுத்து பீபா விசாரணையைத் தொடங்கியது. விசாரணையின் பின்னர் பீபா வெளியிட்ட அறிக்கையில்,

"கடந்த செப்டெம்பர் 2 ஆம் திகதி ஹங்கேரி மற்றும் இங்கிலாந்துக்கிடையே நடைபெற்ற பீபா உலகக் கிண்ண கத்தார் 2022 தகுதிகாண் போட்டியின்போது பல ஆதரவாளர்களின் இனவெறி நடத்தை தொடர்பாக ஹங்கேரிய உதைபந்தாட்ட கூட்டமைப்புக்கு (எம்.எல்.எஸ்.இசட்.) பீபா ஒழுக்கக்குழு தடை மற்றும் கணிசமான அபராதம் விதித்துள்ளது.

ரசிகர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் பீபா விரிவாக விசாரணை செய்தது. இனவெறி வார்த்தைகள் மற்றும் செயல்கள், பொருட்களை எறிதல், பட்டாசுகளைக் கொளுத்துதல் போன்றவற்றால் வீரர்களுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது. ஹங்கேரி, இங்கிலாந்து ஆகிய அணிகளில் விளையாடிய வீரர்களிடமும் விசாரணை செய்யப்பட்டது. ஹங்கேரிய உதைபந்தாட்ட கூட்டமைப்புக்கு 200,000 சுவிஸ் பிராங்குகள் அபராதமாக விதிக்கப்பட்டது. அத்துடன் புடாபெச்ட் மைதானத்துக்கு இரண்டு வருட தடை விதிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புடாபெஸ்ட் மைதானத்துக்கு விதிக்கப்பட்ட தடை நீங்கும் வரை அங்கு நடக்கும் போட்டிகளுக்கு ரசிகர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.



போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் முழந்தாளிட்டு இனவெறிக்கு எதிரான தமது நிலைப்பாட்டை வீரர்கள் வெளிப்படுத்தினர். இங்கிலாந்து வீரர்கள் முழந்தாளிட்டபோது ஹங்கேரிய ரசிகர்கள் கூச்சலிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். யூரோ கிண்ணப் போட்டியின்போது குரோஷிய வீரர்கள் முழந்தாளிட்ட போதிலும் ஹங்கேரிய ரசிகர்கள் கூச்சலிட்டு எதிர்ப்பைத் தெரிவித்தனர். எந்தவிதமான இனவெறி, வன்முறை மற்றும் வேறு எந்த பாகுபாடு அல்லது துஷ்பிரயோகத்தையும் நிராகரிப்பதில் உறுதியாக இருப்பதாக பீபா அறிவித்துள்ளது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 125 நாடுகளில் ஒளிபரப்பாகும் கிரிக்கெட்டின் வல்லரசன் ஐ.பி.எல்.



இந்தியாவில் கட்டுக்கடங்காமல் பரவிய கொரோனா தொற்று காரணமாக, ஐ.பி.எல். போட்டிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டன. இப்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் இரண்டாம் கட்ட ஐ.பி.எல். போட்டிகள் நடைபெறுகின்றன. ரி10 தொடர்கள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன. ஆனால், ஐ.பி.எல்.லுக்குள்ள செல்வாக்கு வேறு எந்தத் தொடருக்கும் இல்லை. ஐ.பி.எல்.லின் மதிப்பும், பிரம்மாண்டமும், செல்வாக்கும் வீரர்களை அதன் வசம் இழுக்கின்றன.

இதுவரை இல்லாத அளவுக்கு ஐ.பி.எல். 2021 தொடர் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெறுகின்றது. 8 மொழிகளில், 17 அலைவரிசைகளில், 125 நாடுகளில் நேரடியாக ஐ.பி.எல். ஒளிபரப்பாகிறது.

ஐ.பி.எல். 2021 தொடரின் அதிகாரபூர்வ ஒளிபரப்பாளரான ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் ஹிந்தி, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், வங்காளம், மலையாளம் உள்ளிட்ட 8 மொழிகளில் 17 அலைவரிசைகளில் ஒளிபரப்புகின்றது. இது தவிர டிஸ்னி + ஹொட் ஸ்டாரிலும் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. அதுமட்டுமின்றி, ஐ.பி.எல். 2021 ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து 125 நாடுகளுக்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றது.

இதுகுறித்து ஸ்டார் & டிஸ்னியின் விளையாட்டுப் பிரிவுத் தலைவர் சஞ்சோக் குப்தா, "டிவி மற்றும் டிஜிட்டல் தளங்களில், மிகவும் ஈர்க்கக்கூடிய மற்றும் ஐ.பி.எல். போட்டிகளின் அதிவேக ஒளிபரப்பைத் தொடர்ந்து வழங்க ஸ்டார் அண்ட் டிஸ்னி இந்தியா உறுதியாக உள்ளது. பல பிராந்திய மொழிகளில், உலகத்தரம் வாய்ந்ததால் பார்வையாளர்களை ஈர்க்கும் அளவுக்கான வியூ அனுபவங்கள் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் என எங்களது அனைத்து முயற்சிகளும் மில்லியன் கணக்கான பார்வையாளர்களை மகிழ்விக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். 2021 தொடரை, ஸ்கை ஸ்போர்ட்ஸ் நிறுவனம் இங்கிலாந்திலும், அயர்லாந்திலும்நேரடி ஒளிபரப்பு செய்கிறது. ஸ்கை ஸ்போர்ட்ஸ் தவிர, ஐ.பி.எல். 2021 ஐ ஹொட் ஸ்டார் வழியாக இங்கிலாந்திலும் கிடைக்கச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள கிரிக்கெட் பார்வையாளர்கள் இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல். 2021) நேரடி ஒளிபரப்பை வில்லோ டிவியில் பார்க்கலாம். கனடாவிலுள்ள ரசிகர்களும் ஐ.பி.எல். 2021 ஐ வில்லோ டிவியில் பார்க்கலாம். தென்னாப்பிரிக்காவின் முன்னணி நிறுவனமான சூப்பர் ஸ்போர்ட்ஸுடன் ஸ்டார் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம், சூப்பர் ஸ்போர்ட்ஸ் அலைவரிசை மூலம் ஐ.பி.எல். போட்டிகளைக் காணலாம்.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் ஐ.பி.எல். 2021 தொடரை BeIN ஸ்போர்ட்ஸ் அலைவரிசையில் காணலாம். அதேபோல், YuppTV மூலம் Continental ஐரோப்பா, அவுஸ்திரேலியா, தென் கிழக்கு ஆசியா (சிங்கப்பூர் & மலேசியா தவிர), பாகிஸ்தான், இலங்கை, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, மத்திய ஆசியா, நேபாளம், பூடான் மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகளில் ஐ.பி.எல். போட்டிகளைக் காணலாம்.

அவுஸ்திரேலியாவின் பிராந்தியத்தில் ஐ.பி.எல். 2021 ஐ நேரடி ஒளிபரப்பு செய்யும் உரிமையை ஃபாக்ஸ் ஸ்போர்ட்ஸ் பெற்றுள்ளது. ஃபாக்ஸ் ஸ்போர்ட்ஸுடன் இணைந்து கயோ ஸ்போர்ட்ஸ் அங்கு ஐ.பி.எல். 2021 போட்டிகளை நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

## இன்றைய போட்டிகள்

போட்டி இல - 38

Head to Head
Played - 26

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 09 VS 16 சென்னை சுப்பர் கிங்ஸ்

No result - 1

ஷேக் ஷெயிட் கிரிக்கெட் மைதானம், அபுதாபி
மாலை 3.30 மணி

போட்டி இல - 39

Head to Head
Played - 30

ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் 11 VS 19 மும்பை இந்தியன்ஸ்

டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானம்,டுபாய்
இரவு 7.30 மணி

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7